இந்த ஆய்வானது இந்துக்கலைகளுள் சிறப்பிடம் பெறும் சிற்பக்கலை பற்றியும் அச்சிற்பக்கலை மரபைக் காலந்தோறும் பேணிவரும் சிற்பக்கலைஞன் பற்றியும் எடுத்து விளக்குவதை நோக்கமாகக் கொண்டமைந்துள்ளது. சிற்பக்கலைஞர்கள் என்ற பிரிவினுள் இந்துக்கலை மரபில் பல்வேறு கலைஞர்கள் காணப்படுகின்றனர். அவர்களுள் திருக்கோயில்களுடன் தொடர்புடைய சிற்பக் கலைஞர்கள் பற்றி ஆகமங்கள் மற்றும் சிற்பசாஸ்திர நூல்களின் துணைக்கொண்டு ஆராய்வதே இந்த ஆய்வின் எல்லையாக அமைகின்றது. சிற்பங்களைப் பல்வேறு நுட்பங்களுடனும் கலையம்சத்துடனும் தனது முயற்சியினால் உருவாக்குவதன் மூலம் சிற்பக்கலைஞனானவன் அச்சிற்பங்களுக்கு உயிரோட்டத்தை வழங்குகின்றான். ஆனால் சிற்பங்களின் கலை இரசனை மற்றும் தெய்வீகம் பற்றி அதிகம் பேசப்படுகின்றதே தவிர அதனை உருவாக்கிய சிற்பக் கலைஞன் பற்றி கவனத்திற் கொள்ளப்படுவதில்லை. அக்கலைஞன் பற்றிய அறிவு மட்டுப்படுத்தப்பட்டதாகவே காணப்படுகின்றது. இத்தகைய ஆய்வுப் பிரச்சினைக்கு தீர்வு காணும் பொருட்டு இந்த ஆய்வானது நிகழ்த்தப்பட்டுள்ளது.இது விபரண ஆய்வு முறையியலுக்கு அமைய கட்டமைக்கப்பட்டுள்ளது. இந்த ஆய்வின் வழி கலை பற்றிய எண்ணக்கரு விளக்கம், இந்தியக்கலை பற்றிய அறிமுகம், கலா தத்துவம், நுண்கலைகள், கலையின்பம் போன்ற விடயங்கள் ஆராயப்பட்டுள்ளன. அத்துடன் சிற்பக்கலை விளக்கம், சிற்ப வகைகள், சிற்ப சாஸ்திர நூல்கள், சிற்பக்கலையும் மக்கள் பண்பாடும் போன்ற விடயங்களும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன. ஆய்வின் முக்கிய விடயமாக சிற்பியரின் தெய்வீக மரபு, தகுதிகள், சிற்பியின் இலட்சணங்கள், ஸ்தபதி அல்லது சிற்பி தேர்வு முறைகள், சமகாலச் செல்நெறியில் சிற்பக்கலைஞர்கள் போன்ற விடயங்கள் ஆராயப்பட்டுள்ளன. சிற்பி வெறுமனே தமக்கு விரும்பிய போக்கில் சிற்பங்களை அமைத்துச் செல்ல முடியாது. ஆகமங்கள் மற்றும் சிற்ப சாஸ்திர நூல்களில் விதிக்கப்பட்டுள்ள விதிமுறைகளுக்கு அமையவே சிற்பங்களை அமைக்கக் கடமைப்பட்டுள்ளான். இதனால்தான் இந்துத் திருக்கோயில் சார்ந்து காணப்படும் சிற்பங்கள் யாவும் தனித்துவத்துடனும் ஒரே சீராகவும் அமைந்து விளங்குகின்றன எனலாம். எனவே அவற்றை உருவாக்கும் சிற்பியின் தெய்வீக மரபு, அவனுக்குரிய தகைமைகள, ஒழுக்க விதிகள் போன்ற பல்வேறு விடயங்களை ஆகமங்கள் மற்றும் சிற்ப நூல்கள் விரிவாக விளக்கி நிற்கும். இவற்றை வெளிப்படுத்துவதாகவே இந்த ஆய்வு அமைகிறது. அத்துடன் இந்துக்கலை மரபில் சிற்பக்கலைஞன் பற்றிய அறிவைப் பெற்றுக் கொள்வதற்கு இந்த ஆய்வானது துணைபுரியும் என்பதோடு சிற்பக் கலைஞர்கள் பற்றி ஆராய முற்படுகின்ற ஆய்வாளர்களுக்கும் பயனுள்ளதாக அமையும்.

**திறவுச்சொற்கள்:** *கலை; சிற்ப சாஸ்திரம்; மரபு சிற்பி; திருக்கோயில்*

# சைவசித்தாந்த நோக்கில் ஆணவம்

**கீர்த்தனா.கு., விக்னேஸ்வரி.ப.**
*இந்து நாகரிகத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*

இந்திய மெய்யியலில் முக்கியமான இடத்தினை பெறும் சைவசித்தாந்தம் பதி, பசு, பாசம் எனும் முப்பொருள்களில் ஆணவம், கன்மம், மாயை எனும் மும்மலங்களிலே ஆணவம் பற்றி இந்த ஆய்வு மேற்கொள்ளப்படுகின்றது. இவ் ஆய்வானது விபரணஆய்வு மற்றும் பொருத்தமான சந்தர்ப்பங்களில் பகுப்பாய்வு முறையுடன் தேவைக்கேற்ப ஒப்பீட்டாய்வு முறையும் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் இவ்வாய்வானது மெய்கண்ட சாத்திர நூல்களை ஆய்வெல்லையாகக் கொண்டுள்ளது. இந்த ஆய்வு மெய்கண்ட சாத்திரங்கயின் நோக்கில் ஆணவத்தின் இயல்புகளை ஆராய்கின்றது. அதன் வழி ஆணவத்தை மூலமலம், சகசமலம், இருள்மலம், என்றும் சில பெயர்கள் இட்டு அழைப்பர். இங்கு ஆணவத்தின் சிறப்பியல்பு, பொது இயல்பு என்பன ஆராயப்படுகின்றன. ஆணவத்தின் ஆவாரக சக்தியானது உயிரின் அறிவாற்றலை முற்றிலும் மறைக்கும் ஆற்றலை குறிக்கும். அதோநியாமிகா சக்தியானது உயிரின் அறிவை கீழ் நோக்கிச் செலுத்தும் ஆற்றலாகும். இதனாலேயே உயிர்கள் நிலையாதவற்றை நிலைத்தன என்றும் கீழான இன்பங்களை உயர்ந்தன என்றும் மயங்குகின்றன. ஆணவ மலம் சடப்பொருள் அது ஒன்றேயாயினும் எண்ணற்ற ஆற்றல்களை உடையது. அவ்வாறு எண்ணற்ற ஆற்றல்களைக் கொண்டே எண்ணிறைந்த உயிர்களை தளைக்குட்படுத்துகிறது. ஆணவ மலம் என்ற கோட்பாட்டை சைவசித்தாந்தம் தவிரப் பிற எந்த தத்துவக்கொள்கையும் ஏற்றுக்கொள்வதில்லை. சிவபெருமானை முழுமுதலாகக் கொண்டு வழிபடும் பிற தத்துவங்களும் ஆணவ மலத்தின் உண்மையை ஏற்றுக்கொள்ளாததனால் அவற்றையும் அகப்புறச் சமயங்கள் என்ற தொகுப்பினுள் அடக்கி விடுகிறார் மாதவசிவஞான முனிவர். அநாதி நித்தப்பொருள்கள் மூன்றினுள் பாசமும் ஒன்று ஆதலால் அதற்கு அழிவு என்பது கிடையாது. ஆணவ மல நீக்கத்தைக் குறிப்பிடும் போது ஆணவ மலம் பரிபாகமுற்று தேய்ந்தது என்றே குறிப்பிடுவர். ஏனெனில் ஓர் ஆன்மா ஆணவக்கட்டிலிருந்து விடுபட்டாலும் பிற எண்ணிறைந்த ஆன்மாக்களை அது பற்றியே நிற்கும். அதனால் ஆணவ மல நீக்கத்தை வலி மடங்கி நிற்றல் என்றே சைவசித்தாந்தம் கூறும். முக்திநிலையிலும் ஆணவம் உண்டு என்பதனை மிக நுட்பமாகக் குறிப்பிடுவதோடு, ஆணவம் – திரோதாயி என்பவற்றினையும் ஆராய்கின்றது.

**திறவுச்சொற்கள்:** *ஆணவம்; திரோதாயி; சைவசித்தாந்தம்; பாசம்; முக்தி*

# சிவவாக்கியர் பாடல்களில் புலப்படும் ஆன்மீகம் சார் சிந்தனைகள்

**மதுராஜினி .ச., ரமணராஜா. சி.**
*இந்து நாகரிகத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*

இந்த ஆய்வானது சமுதாயத்தில் இடம்பெறும் போலி வழிபாடுகளையும் போலிக்கொள்கையையும் சிவவாக்கியர் பாடல்கலை முதன்மைப்படுத்தி ஆராய்வதாக சிவவாக்கியர் எனும் சித்தர் ஆலய வழிபாட்டில் நிலவும் போலிகளை கண்டிக்கும் கருத்துக்களை மையமாகக் கொண்டது. மனத்தின் மாசு அகற்றாது செய்யப்படும் பூசைகளால் எந்தப் பயனும் இல்லை. வாழும் வாழ்வை சிறப்பாக அமைத்துக் கொள்ள மனத்தின் வெளிப்பானது மிகவும் அவசியம். அன்பு கொண்ட இதயத்தில் இறைவன் தானாக வந்து குடியமர்ந்து கொள்வான் என்றும் அத்தகைய ஆன்மா ஆலய வழிபாடு செய்யத் தேவையில்லை என்பதையும் சிவாக்கியர் தனது பாடல்களில் வலியுறுத்திக் கூறுகிறார். இவ்ஆய்வானது மனித வாழ்வில் ஆன்மீகத்தின் அவசியத்தை வலியுறுத்துவதாக அமைந்து காணப்படுகிறது. ஆன்மீகம் இல்லாது ஒருவரின் மனித வாழ்வானது சிறந்து விளங்க முடியாது. வாழும் உலகின் போட்டித் தன்மையிலும் நெருக்கடியான சூழலில் சிக்கித் தவிக்கும் ஆன்மா ஆன்மீக வெளிப்பில்லாது தனது வாழ்வை சிறப்பாக வழிநடத்திச் செல்ல முடியாது. மனத்தின் முழுமையை நோக்கிய ஒரு தொடர்தேடலே ஆன்மீகம் ஆகும். பிறவிச் சுழற்சியில் இருந்து தவித்துக் கொண்டிருக்கும் ஆன்மா தன்னைப் பற்றியும் தனது இயல்பைப் பற்றியும் அறிந்து கொள்வது தான் ஆன்மீகம். ஒருவரது ஆன்மீகத்தின் தேடல் முழுமை அடையும் போது அவரது மனமானது அமைதி கொள்கிறது. ஆத்மாவானது பிறவிச் சுழற்சியில் இருந்து விடுபடுகிறது. வாழ்வின் அர்த்தத்தை உணர்ந்து கொண்ட ஆன்மா இவ்வுலகின் நிறைவில்லாத தன்மையை தெளிவாக விளங்கிக் கொண்டும் இவ்வுலக இன்பங்களுக்கான யாக்கை, செல்வம், இளமை முதலியவற்றின் நிலையாமைத் தன்மையினை உணர்ந்து கொண்டும் பற்றுக்கள் யாவற்றிலும் இருந்து விடுபட்டு நிலையான உண்மைப் பொருளை உணர்ந்து உய்தி பெறவேண்டும் என்பதே சிவவாக்கியரின் எண்ணமாகும். சிவவாக்கியர் கூறுவதாவது எல்லாப் பிறவிகளிலும் பிறந்து இறந்த போதும் திருநீறு பூசியதால் பலன் காணாத போது ஏன் மீண்டும் திருநீறு பூசுகிறீர்? ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களையும் அறுத்து கடவுளின் நாத ஓசையில் தெளிந்து கொள்ளின் பிறவி துன்பத்தில் இருந்து விடுபடுவீர் என்பதாகும். சிவவாக்கியர் ஆன்மாக்களை ஆன்மாகப்பாதையில் அழைக்கிறார். குழந்தையானது விளையாட்டுப் பொருளில் மதிமயங்கி நெடுநேரம் தனது நேரம் தெரியாமல் விளையாடிக் கொண்டிருப்பது போல் செல்வத்தில் மதிமயங்கி உழைப்பதற்கு ஓடிக்கொண்டிருக்கும் மக்களை வாழ்வில் செல்வத்தை அதிகம் சேகரித்து கொள்வதால் மட்டும் மனம் அமைதி நிலையை பெறுவதில்லை. மனம் அமைதி பெறவேண்டும் எனின் மனிதனின் ஆன்மீக வாழ்வும் சிறக்க வேண்டும் என வலியுறுத்துகிறார். ஒவ்வொருவரிலும் ஆன்மீகம் சிறந்து ஓங்கும் பொழுது தான் சமுதாயம் உய்வு பெறும் என்பதை வலியுறுத்திக் கூறுகின்றார். மக்களுக்கு வாழ்வின் நிலையாமைத்துவத்தை எடுத்துக் கூறுவதன் மூலம் இறைவன் ஒருவனே நிலையான பொருள் என்பதை வற்புறுத்தி ஆன்மாக்கள் தமது வாழ்வின் முத்திநிலை பற்றி சிந்திக்குமாறும் பிறவித்துன்பத்திலிருந்து விடுபடுமாறும் அறிவுறுத்துகிறார். இவ்வாறாக இவ்ஆய்வானது வாழ்வின் ஆன்மீகத்தின் அவசியம் பற்றி வலியுறுத்துவதாக அமைந்துள்ளது.

**திறவுச்சொற்கள்:** *ஆன்மா; ஆன்மீகம்; சித்தர்; போலி வழிபாடு; முத்திநிலை*

# கன்பூசிய கல்வியியற் சிந்தனைகளும் ஆசிரியர் - மாணவர்க்கிடையிலான உறவுமுறைகளும் : ஒரு பகுப்பாய்வு

**துசியந்தன்.வ., சிவகரன்.ந., திலீபன்.தி.**

*மெய்யியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*

இந்த ஆய்வு ஆசிரியர் – மாணவர்க்கிடையிலான உறவுமுறைகளினைக் கன்பூசியக் கல்வியியற் சிந்தனைகளினை அடிப்படையாகக்கொண்டு ஆராய்வதனை நோக்கமாகக் கொண்டுள்ளது. தத்துவம்சார் புதிய உண்மைகளையும் புத்தாக்கச் சிந்தனைகளையும் வெளிக்கொணர்ந்தவர்களில் முதன்மையானவராக சீனதேசத்துக் கன்பூசியஸ் காணப்படுகின்றார். இவரது சிந்தனைகளுள் கல்வி பற்றிய கருத்தாக்கம் முதன்மையானதாகும். கல்விக் கட்டமைப்பில் ஆசிரியர் மாணவர்களின் உறவானது இன்றுபாரிய விமர்சனத்திற்குரிய விடயமாக காணப்படுகின்றது. குறிப்பாக வளர்ந்து வரும் சமூக கட்டமைப்பில் தமது முக்கியத்துவத்தினை ஆசிரியர், மாணவர் ஆகிய இருவரும் உணராமல் இருப்பது பாரிய பிரச்சனையாகும் இதன்படி ஆசிரியர் மற்றும் மாணவர்களின் கடமைகள் எவ்வாறு காணப்பட வேண்டும், ஆசிரியர் மாணவர் உறவினை எவ்வாறு கட்டமைக்கமுடியும், கற்பித்தல் முறையிலுள்ள இடர்பாடுகள் என்ன, மாணவர்களை எவ்வாறான வகையில் நெறிப்படுத்தவேண்டும் என்பவற்றினைக் கருப்பொருளாகக் கொண்டு கன்பூசியக் கற்றல் கோட்பாடுகள் யாவை? ஆசிரியர் மற்றும் மாணவர்களின் கடமைகள் எவை? கன்பூசியஸ் குறிப்பிடும் ஒழுக்க மனப்பாங்குடனான கற்றல் என்றால் என்ன? மனிதனது மதிப்பு மிக்க வாழ்க்கையில் கற்றலின் முக்கியத்துவம் யாது? போன்ற முதன்மையான ஆய்வு வினாக்கள் முன்வைக்கப்பட்டு அதன் மூலம் ஆய்வில் பிரதான நோக்கம் அடையப்பெற்றுள்ளது குறிப்பாக கன்பூசியஸ் முதன்மைப்படுத்தும் கோட்பாடுகளான மனிதநேயம், அறம், ஆசிரிய – மாணவ உறவு முறை, சடங்குகள், சுதந்திரக் கல்வி முறை, தன்னம்பிக்கை என்பன ஆராயப்பட்டு ஆய்வுவினாவின் நோக்கம் அடையப்பெற்றுள்ளது. “கன்பூசிய கல்வியியற் சிந்தனைகள் வெளிப்படுத்தும் அறிவு, ஒழுக்கநெறி, மனிதநேயம், தைரியம் போன்றவற்றை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் பின்பற்றுவதன்நூடாக ஆசிரியர் – மாணவருக்கிடையிலான தொடர்பினையும் பொருத்தப்பாட்டினையும் கட்டமைக்கமுடியும்” என்பது ஆய்வின் கருதுகோளாகும். இக்கருதுகோளானது ஒப்பீட்டாய்வு, விமர்சனப் பகுப்பாய்வு, விபரண முறை, பேட்டி முறை போன்ற ஆய்வு முறையியல்களுடாக வெளிக்கொணடரப்பட்டதாகும். ஆய்விற்கான தரவுமூலங்களாக கன்பூசியஸ் தொடர்பாக எழுதப்பட்ட நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள், இலக்கியங்கள், இணையத்தளப் பதிவுகள் என்பவற்றினை அடிப்படையாகக்கொண்டு ஆய்வு செய்யப்பட்டுள்ளது.குறிப்பாக பேட்டிமுறையில் இன்றய காலப்பகுதியில் ஆரிசிரியர் மாணவர் உறவின் பொருத்தப்பாட்டுகள் அவதானிக்கப்பட்டுதுடன் அதன் மூலம் இரு உறவு நிலைகளையும் எவ்வாறு கன்பூசியக் கல்வியல் கட்டமைப்புக்களை கொண்டு நல்ல முறையில் கட்டமைக்க முடியும் என்னும் வகையில் முறையியல்கள் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆய்வின் முடிவாக கன்பூசியஸ் சுட்டிக்காட்டும் ஆசிரியர், மாணவர் உறவு முறையானது இன்றைய சூழலில் அவசியமாகவுள்ளது. மேலும் உறவு முறையில் இருசாராரிடையிலும் இணைக்கப்பாடு அவசியமானதாகும் என்னும் முடிவு முன்வைக்கப்பட்டுள்ளது.

**திறவுச்சொற்கள்:** *கன்பூசிய கல்வி; உறவுக்கட்டமைப்பு; ஆசிரியர்; மாணவர் உறவு; கல்வி முறை; ஒழுக்க மனப்பாங்கு*

# இலங்கையின் ஜனநாயக அரசியலமைப்பு உருவாக்கம்: ஒரு மெய்யியல் விசாரணை

**சுபானி.சி., சிவகரன்.ந.**
*மெய்யியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*

இலங்கையின் புதிய ஜனநாயக சோஸலிச அரசியலமைப்பு உருவாக்கம் அல்லது திருத்தம் செய்யவேண்டிய அவசியம் குறித்த உரையாடல்கள், விவாதங்கள் அண்மைக்கால அரச தத்துவ இலக்கியங்களில் முதன்மைக்குரிய விடயமாக ஆராயப்பட்டு வருகின்றது. அது அரசின் தன்மை, அரசாங்கத்தின் கட்டமைப்பு, அரசின் தத்துவங்களும் கடமைகளும், பிரஜையின் உரிமைகளும் கடமைகளும் போன்ற ஒரு நாட்டினை நிர்வகிப்பதற்கான கோட்பாடுகளை நிரற்படுத்துவதாகவும் இருத்தல் வேண்டும். ஓர் அரசியல் அமைப்பு நாட்டின் அதியுயர் சட்டம், அனைவருக்கும் சமமானவை மக்களுக்கும் அரசுக்குமான சமூக ஒப்பந்தம், அரசின் விழுமியத் தொகுதி மக்களின் அபிலாசைகள் எனப்பல்வேறு பரிமாணம் கொண்டது. ஆனால் இலங்கையின் 1978ம் அரசியல் யாப்பு மேற்கூறப்பட்ட தத்துவங்களினை பின்பற்றாது உருவாக்கப்பட்ட ஒன்றாகவும் அதனால் இலங்கையின் இனமுரண்பாட்டுக்கான மூலவேராகவும் 1978ம் அரசியல் யாப்பு அமைந்து காணப்படுகின்றது. பல இனக்குழுமங்களைக் கொண்ட ஒரு நாடு அரசியலமைப்பின் உருவாக்கத்திலோ அல்லது சீர்திருத்தங்களினை மேற்கொள்கின்ற போது பல்லின மக்களின் அடையாளங்களினை நடைமுறைப்படுத்த எவ்வாறான அணுகுமுறைகளினை பின்பற்றிக்கொள்ள முடியும், தீர்மானம் எடுத்தலின் போதும் கொள்கைகளை வகுக்கும் போதும் கருத்துக்களை பகிரும்போதும் பல்லின சமூகத்தின் உரிமைகள் நலன்கள் கருத்திற்கொள்ளப்படுகிறதா? புதிதாக உருவாக்கப்படும் அரசியலமைப்பில் சமத்துவம் முறையாக பேணப்படுகின்றதா? பல்லின சமூக சமய கலாசாரங்களினை பின்பற்றுகின்ற மக்கள் வாழுகின்ற நாட்டிற்கு பொருத்தமான அரசியலமைப்பை உருவாக்கும் பொழுது கையாளப்பட வேண்டிய விதிமுறைகள் என்ன? போன்ற அடிப்படை வினாக்களுக்கு மெய்யியல் ரீதியான விசாரணைகளினை முதன்மைப்படுத்துவதாக இவ்வாய்வு அமைந்துள்ளது. பண்புசார் அணுகுமுறையினை மையப்படுத்தியதாக பிரதான எண்ணக்கருக்களினை கருப்பொருள் பகுப்பாய்வு (Thematic Analysis) முறையியலாக கொண்டு மனித உரிமைகள், சமூக ஒற்றுமை, ஜனநாயக விழுமியங்கள், பொது நியாயம், நீதி, சமத்துவம், பாரபட்சம் இல்லாத சமூக அரசியல், சமூக ஒப்பந்தம், பொதுநலன் நற்பிரஜை போன்ற அரச மெய்யியல் மற்றும் ஒழுக்கவியல் கோட்பாடுகளினை ஆராய்வதற்கு இம் முறையியல் பயன்படுத்தப்படவுள்ளது. மேலும் ஒப்பீட்டு ஆய்வு முறையியல் மற்றும் விமர்சன ஆய்வு முறையியல் பயன்படுத்தப்பட உள்ளது. ஆய்வுக்கான தரவுகள் ஆய்வுடன் தொடர்புடைய நூல்கள், ஆய்வுக்கட்டுரைகள், அறிக்கைகள், இணையத்தளக் குறிப்புக்கள், காணொளிகள் என்பவற்றிலிருந்து தரவுகள் திரட்டப்பட்டு, விவரணமுறையில் அமைக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரையாகும். இம் மெய்யியல்சார் உரையாடலானது மக்களினுடைய பங்குபற்றுதலை முக்கியப்படுத்துவதால், குடிமகனானவன் அரச விவகாரங்களில் தலையிடும் திறன் படைத்தவனாக மாற்றம் காணுவான், அமைதியான வாழ்க்கையை வாழ வழிவகுத்திருப்பதோடு நேர்மையாகவும், சத்தியத்தைக் காக்கும் மனப்பாங்கும் வளர்ச்சியடையும். சட்ட ஒழுங்கை முறையாக பேணும் கடமை உணர்ச்சி தோன்றுவதோடு, தன்னுடைய உரிமைகளை மதிப்பதைப்போல பிறரின் உரிமைகளையும் மதித்து நடக்கும் எண்ணமும் தோற்றுவிக்கப்படும். அத்தோடு அனைவருக்கும் சமமான வாய்ப்புக்களை வழங்கி, சம பங்குபற்றுதலை வழங்குதன் அவசியம் உணர்த்தப்பட்டுள்ளது. மேலும், நாட்டினுடைய நலனுக்காக தன்னை அர்ப்பணிப்பவனாக இருக்க வேண்டும் எனும் தகவலும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. ஆகவே, ஒரு நாட்டின் அடிப்படை சட்டம் மற்றும் ஒழுக்க ரீதியான நடத்தைகளின் தொகுப்பாக அரசியலமைப்பானது அமைய வேண்டியது அவசியமானது. அதுவே ஒரு நாட்டின் அபிவிருத்திக்கு மிக முக்கியமானது. இக்கருத்தாக்கங்களை மெய்யியல் உரையாடல் ஆழப்படுத்தி வெளிப்படுத்தியிருப்பதுடன் அதனை செயற்படுத்த மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகளையும் இவ்வாய்வு எடுத்துரைத்துள்ளது.

**திறவுச்சொற்கள்:** *அரசியலமைப்பு; சீர்திருத்தம்; தத்துவக் கோட்பாடுகள்; பன்மைத்துவ கலாசாரம்; நல்லாட்சி*

# Language, Literature and Arts

# English Literature as Choice: Challenges Facing Students in the Jaffna Educational Zone

**Aarabee.S.**
*Department of Linguistics & English, University of Jaffna*

In Sri Lanka, English literature is taught to students in the G.C.E Ordinary Level classes as an optional subject as part of a basket. This study aims to analyse why Grade 10 and 11 students in the Jaffna Zone are interested or not interested in taking this subject and the kinds of challenges the students and teachers face in learning and teaching this subject at the school level. It focuses on the influence of the social, economic, cultural and institutional factors on students' decision to choose or not choose English Literature. This paper does not isolate the students from their familial and social locations; instead, it views the choices made by the students as familial and social choices as well. Using qualitative research methods, narratives about the experiences of students, teachers and parents were gathered via interviews and focus group discussions. Critically reflecting upon these narratives and the researcher's own experiences as a teacher of English Literature, this paper argues that parental influence, the economic strength of the family, social factors like caste, class and gender, the consequences of the civil war, the schools, attitudes of the teachers and their pedagogies and the nature and content of the curriculum play an important role in students' decision to choose or not choose this subject and in shaping their learning experiences inside and outside the classroom. In so doing, this paper problematizes the notions of 'choice' and 'free education' as they are understood within the education system of Sri Lanka. This paper emphasizes that the state and educationists should take appropriate steps to make this subject more inclusive and friendlier towards students who come from marginalized socio-economic backgrounds..

**Keywords**: *Alienation; Choice; Curriculum; Free education; Pedagogy*

# முன்பள்ளிப்பருவ மாணவர்களது மொழித்தேட்டம்

**கிரிஜா.ப., கவிதா.ந.**
*மொழியியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*

முன்பள்ளிப்பருவ மாணவர்களது மொழித்தேட்டத்திற்கு முன்பள்ளிக்கல்வி முக்கியமான ஒன்றாகும். முன்பள்ளியில் மாணவர்களுக்கு கொடுக்கப்படும் ஒவ்வொரு செயலும் அனுபவமும் மொழித்திறமையை வளர்க்கக் கூடியதாக அமைகிறது. இங்கு பெற்றுக்கொள்ளப்படுகின்ற ஒவ்வொரு திறன்களும் மொழி வளர்ச்சிக்கான ஆரம்பச் செயற்பாடுகளாக அமைகின்றன. அந்தவகையில் ஒரு மனிதனுக்குக் கல்வி அறிவு மற்றும் அன்றாடம் பயன்படுத்தும் பேச்சு, செயல் போன்றவற்றிற்கு அடிப்படையாக இருப்பது மொழி அறிவு ஆகும். ஒரு பிறந்த குழந்தையின் வளர்ச்சிப் பருவங்களோடு மொழி விருத்தி நிலைகளும் படிப்படியாக வாழும் சூழல் காரணிகளால் பெரிதும் ஆதிக்கம் செலுத்தப்படுவதை இந்த ஆய்வு ஆராய்கிறது. இங்கு 3-5 வயதிற்குட்பட்ட பிள்ளைகளை முன்பள்ளிப்பருவ மாணவர்கள் என்ற ரீதியில் வரையறுத்து அப்பருவத்தில் பிள்ளைகளது உடல், உள, மனவெழுச்சி நிலைகளோடு ஆளுமைவிருத்தி மற்றும் மொழி ஆற்றல்கள் விருத்தி என்பவற்றில் முன்பள்ளியின் செயற்பாடுகள், ஆசிரியரது கற்பித்தல் நுட்பங்கள, மாணவர்களது மொழி தொடர்பான ஆற்றல்கள் மற்றும் அடிப்படை மொழித்திறன்களான பேசுதல், கேட்டல், எழுதுதல், வாசித்தல் போன்ற விடயங்கள், பெற்றோர்கள் பிள்ளைகளின் மொழிவிருத்தியுடன் கொண்டுள்ள பங்களிப்பு, முன்பள்ளிக்கும் ஆரம்பப் பாடசாலைக்கும் உள்ள தொடர்புகள் என்பன ஆராயப்பட்டு, முன்பள்ளிப்பருவ மாணவர்களது மொழித்தேட்டம் பற்றிய விடயங்கள் வலிகாம வலயத்தில் தெரிவு செய்யப்பட்ட 50 முன்பள்ளிகளை அடிப்படையாகக் கொண்டு விளக்கப்பட்டுள்ளன. இங்கு அரச மற்றும் தனியார் முன்பள்ளிகளில் ஆசிரியர்களது கற்பித்தல் முறைகள் ஒப்பிட்டு விளக்கப்பட்டுள்ளன. முன்பள்ளி மாணவர்களது மொழித்தேட்டம் தொடர்பாக ஆசிரியர்களது வழிகாட்டுதல்கள் மற்றும் அவர்களது கற்பித்தல் நுட்பங்கள் என்பன இங்கு மொழியியல் ஆய்வு முறையின் கீழ் ஆராயப்பட்டுள்ளன. இவ் ஆய்விற்கான தரவுகள் முன்பள்ளி ஆசிரியர்களிடமிருந்து வினாக்கொத்து, நேர்காணல், கலந்துரையாடல், ஆகிய முதலாம் நிலை நுட்பங்களையும் மற்றும் நூல்கள், ஆய்வுக்கோவைகள், சஞ்சிகைகள், இணையத்தள வெளியீடுகள் ஆகிய இரண்டாம் நிலை நுட்பங்களையும் கொண்டு பெறப்பட்டன. அளவுசார் மற்றும் பண்புசார் ஆய்வு முறைகள் இணைந்த கலப்பு ஆய்வாக இது அமையும். முன்பள்ளிப்பருவத்திலே மாணவர்கள் மொழியினை உள்வாங்கிக் கொள்வதற்கும் மற்றவர்கள் கூறுவதைப் புரிந்து கொள்வதற்கும் பெற்றோர், சமூகம், ஆசிரியர்கள், ஒத்தவயதினர், முன்பள்ளிச்சூழல் ஆகிய காரணிகளது செல்வாக்குகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. தற்காலத்தில் ஆரம்பகல்வியை மேற்கொள்வதற்குரிய மொழித்திறன்களில் பின்னடைவுகள் உள்ளதால் மொழி மூலமாக ஆரம்பக் கல்வியைத் தொடர்வதற்குரிய முன்தேவை முன்பள்ளிகளில் முழுமையாக அடையப்படவில்லை என்ற விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. மொழித்தேட்டத்தை மேம்படுத்துவதற்கு மொழி அடிப்படையிலான கற்றல், கற்பித்தல் படிநிலைகளை முன்பள்ளியிலிருந்து ஆரம்பித்து ஆரம்பக்கல்வியை நோக்கி எவ்வாறு மேம்படுத்தலாம் என்பதே இவ் ஆய்வு வெளிப்படுத்தும் பிரதான பொருண்மை.

**திறவுச்சொற்கள்:** *ஆரம்பக்கல்வி; கற்பித்தல் நுட்பங்கள்; தாய்மொழித்தேட்டம்; மொழித்திறன்கள்; மொழிவிருத்தி*

# Problems of Translating Medical Texts - A Study Based on the Book *Biology of Essential Human Diseases*

**Hosshanthika.M., Kannathas. S. K.**
*Department of Translation Studies, University of Jaffna*

This research focuses on the problems of translating medical texts from English into Tamil based on the sourcebook *Biology of Essential Human Diseases* written by former Professor. V. K. Gunslinger. The purpose of the study is to bring out the difficulties of translating medical terms and how a medical translator tackled this challenge. The study adopts a qualitative content analysis approach using comparative research methodology. Comparative and descriptive methods were adopted in analyzing the problems. The study focuses on the problems faced by the translator by comparing the source text with the target text. This study uses the book *Biology of Essential Human Diseases* as a primary text and various subject related books, magazines and articles are used as secondary data. The analyzed data indicate that translators usually find it difficult to establish the Tamil equivalence of some discipline-specific terms in English. Consequently, a variety of techniques and strategies were employed by translators and interpreters to ensure effective translation. The study has shown that there were six types of problems that occur in medical translation such as linguistic problems, specialized language problems, equivalent problems, contextual problems. Finally, it discusses some techniques used to overcome other linguistic problems and miscellaneous problems. The present research reveals that medical terminology creates hurdles for translators.

**Keywords:** *Medical Translation; Strategies; Translation problems; Technique*

# Analysis of the Textual and Structural Problems Encountered in Translating the Legal Text *Law Relating to Public Nuisance* by Kalinga Indatissa from English to Tamil

**Mathuvanthy .A.**
*Department of Translation Studies, Faculty of Arts, University of Jaffna*

Legal translation is a type of translation which involves translating documents that are legal in nature. It has a unique structure and language called 'legalese' which is rigid. There is no room for flexibility. While engaging in the process of legal translation, the translator faces countless problems. The main aim of this study is to identify the textual and structural problems in translating the legal text *Law Relating to Public Nuisance* written by Kalinga Indatissa. Analyzing the problems in legal translation is a vast area. It is hard to analyze the overall problems via this study. The researcher of this study has encountered textual problems such as the frequent use of redundancies, contextual problems, problems faced in translating specialized legal jargons, lack of equivalences, different usages of the same word, words nearest in meaning with subtle differences, limitations in translating names of complainants, respondents and honorary forms of address and limitations in translating the use of legal abbreviations. The researcher has also faced with structural problems such as complexity in lengthy sentences and the use of passivation. The concept of public nuisance is a universal one, not confined to Sri Lanka alone. Therefore, the secondary objective of this study is to convey the laws and judgments of particular cases to the Tamil people of Sri Lanka and especially, the Sri Lankan diaspora. Since the study does not employ any statistical data and the results are in words, not numerals, a qualitative research design has been used. Hence, the findings have been interpreted with words and explanations. Comparative methodology is used to compare both the source text *Law Relating to Public Nuisance* and its target text *பொதுத்தொல்லை சார் சட்டங்கள்* linguistically and culturally. In comparing both texts, notable similarities and variations are observed. Descriptive methodology was used to analyze and describe the textual and structural problems in translating the legal text. The paper makes suggestions on finding solutions to the problems faced in legal translation by applying accepted theories and principles of legal translation. An analytical approach was used in the process of translating the source text into the target text. Breaking down the complexity of the text into small parts was done for syntactical purposes. Primary data sources of this study are the source text *Law Relating to Public Nuisance* and its translation *பொதுத்தொல்லை சார் சட்டங்கள்*. Secondary data was collected from legal books and magazines in order to obtain further clarifications about instances of public nuisance. Legal glossaries were used as secondary data in order to overcome the problems in translating the legal text. Major findings of the study highlighted the textual problems that occurred at the level of meaning. While dealing with repetitions and redundancies, the translator can use 'omission' as a strategy in order to provide the same sense as the original. Contextual problems could be solved by using dynamic equivalence as a technique. However, as per the study results, it can be concluded that the translator can overcome textual and structural problems by adopting selective translation tools, methods, techniques and strategies. This study will be an eye-opener to students in Translation Studies, people who are interested in translating legal texts and the larger public in understanding and acting in line with laws related to public nuisance.

**Keywords:** *Equivalence; Legal Translation; Specialized Legal Jargons; Strategies; Techniques*

# புதிய சொல் சஞ்சிகையின் மொழிநடை உத்திகளும் சமகால சஞ்சிகைகளின் போக்குகளும் - ஓர் ஒப்பீட்டாய்வு

**துஷானி.சு., சிவஞானவதி.செ.**

*ஆங்கில மொழி கற்பித்தல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*

ஈழத்துத் தமிழ் இலக்கியங்களைப் பொறுத்தவரை சஞ்சிகைகள் மிகவும் பிரதானமானதொரு இடத்தினை வகிக்கின்றன. யாழ்ப்பாணத்தினைத் தளமாகக் கொண்டு 2016 இல் உருவாக்கப்பட்ட புதியசொல் சஞ்சிகை பல சிறப்பியல்புகள் கொண்டதாக காணப்படுகின்றது. புதியசொல் இதழானது சமகாலத்தில் உருவாகிவரும் கலை இலக்கிய போக்குகளையும் காலத்திற்குத் தேவையெனக் கருதப்படும் பிரதிகளையும் கொண்டு அச்சுவடிவில் வெளிவருகின்றது. எனவே புதியசொல்லானது தனது சொற்களினூடாக கலை இலக்கிய பரிவர்த்தனைக்கான புதிய பயணம் ஒன்றினை ஆரம்பித்துள்ளது. பிந்தைய காலனித்துவ சூழலின் கல்விமுறை மற்றும் வாழும்முறை ஆகியன நமது பண்பாட்டின் கூறுகளை விளங்கிக் கொள்வதில் தடையை உருவாக்கியிருப்பதனை காணக்கூடியதாக இருக்கிறது. அச்சிக்கல்களை விசாரணை செய்யும் விடயங்கள் இச் சஞ்சிகையில் உண்டு. இலங்கைப் பண்பாட்டின் கூறுகளையும் நவீனத்திற்குப் பிந்திய அறிவுமுறையின் கூறுகளையும் இணைத்து அடுத்தகட்ட பண்பாட்டு நகர்வை உரையாடுவதும் விசாரணை செய்வதுமாக உள்ள புதியசொல் சஞ்சிகையில் கையாளப்படுகின்ற மொழிநடைப் பிரயோகத்தினைக் கண்டறிவதுடன் இச்சஞ்சிகையுடன் வெளிவருகின்ற ஏனைய சஞ்சிகைகளின் போக்குகளையும் ஒப்பிட்டு ஆராய்தல் இவ்வாய்வின் நோக்கமாக காணப்படுகின்றது. இவ்வாய்வில் நடையியல் தொடர்பான கருத்துக்கள் விளக்கமாக முன்வைக்கப்படுவதால் இவ் ஆய்வு விபரணமுறையில் அமைந்தது. இவ்வாய்வில் வினாக்கொத்து, நேர்முகத்தேர்வு, கலந்துரையாடல், போன்ற முதனிலைத் தரவுகளும் நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள், ஏனைய சஞ்சிகை இதழ்கள், இணையத்தளவெளியீடுகள் போன்ற இரண்டாம் நிலைத்தரவுகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ் ஆய்வின் பிரச்சினையாக புதியசொல் மொழிநடையானது மொழிநடை உத்திகளைக் கையாள்வதுடன் பண்பாட்டின் கூறுகளையும் சமகால பண்பாட்டு நகர்வையும் உரையாடுவதும் விசாரணை செய்வதுமாக அமைகின்றதா? என்பது காணப்படுகின்றது. இலங்கையிலிருந்து வெளிவருகின்ற கலை இலக்கிய செயற்பாட்டிற்கான ஏனைய சஞ்சிகைகளுடன் ஒப்பிட்டுப்பார்க்கின்றபோது புதியசொல்லின் மொழிநடை தனித்துவமானது என்பதால் புதிய சொல் கலை இலக்கியத்தில் புதிய பாணியொன்று உருவாக்கப்பட்டு வருகின்றது என்பது முடிவாகப் பெறப்படுகின்றது.

**திறவுச்சொற்கள்:** *இலக்கியம்; உத்திகள்; சஞ்சிகை, புதியசொல்; மொழிநடை*

# Using Literary Texts in the English as a Second Language Classroom

**Manoj.M.**
*Department of English Language Teaching, University of Jaffna*

The use of literary texts in the English as a Second Language (ESL) classroom can increase the learner's motivation. In Sri Lanka, literature has been taught as a separate subject since the introduction of *Swabasha* education in 1956. During the period when the Grammar Translation Method was popular in teaching ESL, literature played an important role in the Second Language classroom. Now designers of text books include poems and stories in the ESL syllabus. The use of literature in teaching English can help students use the English Language in creative and innovative ways, improve their vocabulary, and become familiar with diverse syntactic patterns. Literature can also open up and broaden the imaginative abilities of the learner. According to Walatara (1984), teaching a language should be connected with its literature and culture. McKay (1982) states that literature does indeed have a place in the ESL curriculum as it could provide a key to motivating students to read English. According to Collie and Slater (1997), there are three main reasons for using literary texts in an English Language classroom. Firstly, literature is considered a valuable site where language is used. Secondly, literature offers opportunities for the student to engage with the language and the cultural contexts in which the language is used. Finally, literary texts can deepen the personal involvement of both students and teachers in the tasks of learning and teaching. The main objective of this study is to investigate and analyse the use of literary pieces in the English as a Second Language (ESL) classroom. A qualitative research methodology is used in this study. The primary data sources are books, magazines, and articles. This study explores the role of literature in the ESL classroom as an effective tool for ESL practitioners and a catalyst for the learner.

**Keywords:** *Literature; Motivation; Teaching; Creativity; Culture*

# யாழ்ப்பாணத்தில் அமெரிக்க மிசன் தேவாலயக்கட்டடக்கலை

**விதுஷா. சோ., சனாதனன்.தா.**
*நுண்கலைத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*

மனிதன் வசிப்புத் தேவைகளையும் பொதுத் தேவைகளையும் பூர்த்தி செய்யும் பொருட்டு ஒரு வெளியில் அதன் காலநிலை இயற்கை சூழலுக்கேற்ப எழுப்பிய ஒரு கட்டுமானமே கட்டடம் எனப்படுகிறது. கட்டடத்தின் கலாபூர்வமான நிலையே கட்டடக்கலை எனப்படும். இதைப் பண்பாட்டு நிலவரங்கள் கட்டியமைக்கின்றன. அந்தவகையில் ஒரு சமூகத்தின் பண்பாட்டுவரலாற்றில் கட்டடங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. எழுதப்பட்ட இலங்கை கலை வரலாற்றில் அமெரிக்க மிசன் தேவாலயக் கட்டடங்கள் வரலாறு இதுவரை போதிய புலமைசார் கவனத்தைப் பெறாத அதேவேளை எழுதப்பட்ட யாழ்ப்பாண அமெரிக்க மிசனின் வரலாற்றிலும் அதன் கட்டடக்கலை என்பது விரிவாக ஆராயப்படவில்லை. அமெரிக்காவில் மசாட்சூட்செஸ் மாநிலத்தில் வில்லியம்ஸ் கல்லூரி தோற்றம் பெற்ற அமெரிக்க மிசன் 'பிற தேசத்துக்கு மிசன் தொண்டர்களை அனுப்பும் அமெரிக்க சங்கம்' மூலம் தமது செயற்பாடுகளை ஆற்றியது. 1812இல் சாமுவேல் நீயூவெல் என்ற அமெரிக்க மிசனரியின் இலங்கை வருகையைத் தொடர்ந்து, இது யாழ்ப்பணத்தில் பரவலடைந்தது மட்டுமல்லாமல் யாழ்ப்பாணத்தில் மதம், மொழி, கல்வி மற்றும் அச்சு தொழில் நுட்பத்தில் பாரிய மாற்றங்கள் ஏற்பட காரணமாகியது. அமெரிக்க மிசனரிகள் சமயத்தேவையின் பொருட்டு தேவாலயக் கட்டடங்களை அமைத்துள்ளனர். யாழ்ப்பாணத்தில் போர்த்துக்கேயர், ஒல்லாந்தரால் கட்டப்பட்டு அமெரிக்க மிசனால் உபயோகிக்கப்பட்டவை அல்லது திருத்தியமைக்கப்பட்டவை, அமெரிக்க மிசனால் புதிதாக அமைக்கப்பட்டவை, சுதேசிகளால் அமைக்கப்பட்டவை என அமெரிக்க மிசன் தேவாலயக் கட்டடக்கலையைரீதியாக வேறுபடுகின்றன. பொதுவாக யாழ்ப்பாணத்தில் உள்ள அமெரிக்க மிசன் தேவாலயங்கள் மூல வடிவத்தை பேணி வந்தாலும் மறுபுறம் கலை பெறுமதிமிக்க பழைமையான இத் தேவாலயங்களைப் புதிய தேவாலயங்களாக மாற்றும் போக்கானது அவற்றின் தனித்துவங்களை வாசிக்கும் முயற்சியைச் சாவல்கள் நிறைந்ததாக்குகிறது. அமெரிக்க மிசன் காலத்தில் அமைக்கப்பட்ட 26 தேவாலயங்களும், அமெரிக்க மிசன் தென்னிந்தியதிருச்சபை தேவாலயங்களும் இணைந்து 40 மேற்பட்ட தேவாலயங்கள் யாழ்ப்பாணத்தில் காணப்படுவதை இவ் ஆய்வு ஆவணப்படுத்தியுள்ளது. அமெரிக்க மிசன் தேவாலயங்கள் அமெரிக்க மிசனரிகளின் வழிகாட்டலின்கீழ் உள்ளூர் கட்டடக்கலைஞர்களைக் கொண்டே கட்டடப்பட்டதாக குறிப்பிடப்படுகிறது. யாழ்ப்பாணத்தில் அமெரிக்க மிசனின் தேவாலயக் கட்டடங்களின் தனிக்குணவியல்பானது எளிமையான கேத்திரகணித வடிவங்களை பின்பற்றுவதன் ஊடாகவும், சிறிய முன் மண்டபத்தை அமைத்தல், உருவங்களை நிராகரித்தல், அரூபத்தனம், உள்ளூர் பண்புகளை தமக்கானதாக தகவமைத்தல் மூலம் வெளிப்படுத்தப்படுவதை நோக்க முடிகின்றது. யாழ்ப்பாணம் மற்றும் இலங்கையில் உள்ள ஏனைய தேவாலயக்கட்டடங்களை ஒப்பிடுவதன் ஊடாகவும் வர்ணிப்பதனூடாகவும் யாழ்ப்பாணத்தில் அமெரிக்க மிசன் தேவாலயக் கட்டடக்கலையின் தனிக்குணவியல்பினை ஆய்வானது கலைவரலாற்று அணுகுமுறைகளான உருவவாதம், சுவை விற்பனத்துவம் மற்றும் சமூக வரலாறு என்பனவற்றைக் கொண்டு பிற்காலனியக் கோட்பாட்டின் அடிப்படையில் ஆய்வு செய்கிறது.

**திறவுச்சொற்கள்:** *அமெரிக்கமிசன்; உருவவியல்; தேவாலயக்கட்டடக்கலை; காலனியம்; குறைப்புவாதம்; குறியீடு*

# மன்னார் தாழ்வுபாடு புனித சூசையப்பர் வாசாப்பு : ஆற்றுகைப் பாரம்பரியமும் சவால்களும்

**எவென்ரா பீரீஸ்.ச., நவதர்சினி.க.**

*நுண்கலைத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*

வாசாப்பு என்பது வாசகப்பா, வசனம் கலந்த ஓர் பாடல் ஆகும். வாசாப்புக்களில் ஓரளவு வசனங்கள் கலந்திருந்தாலும் பாடல்களே முக்கியம் பெறுகின்றன. பதினாறாம் நூற்றாண்டில் கிறிஸ்தவம் இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டது. எனவே மக்கள் மத்தியில் மதம் பரப்புகின்ற ஊடகமாக கலைகள் பயன்படுத்தப்பட்டது. இதனடிப்படையில் கிறிஸ்தவ நாடகங்கள் மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றதனூடாக வாசாப்பு கலையும் மக்கள் மத்தியில் சிறப்புப் பெற்ற ஒன்றாகத் திகழ்கின்றது. பொதுவாக மன்னார் கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் நிறைந்துள்ள பகுதி ஆதலினால் கத்தோலிக்கக்கிறிஸ்தவ நாடகக் கூத்துக்களும் வாசாப்புக்களும் காணப்படுகின்றன. சூசையப்பர் வாசாப்பு தோற்றம் பெறுவதற்கு காரணமாய் அமைந்த தாழ்வுபாட்டுக் கிராத்தின் வரலாறு மற்றும் வாழ்வியல் சூழலை ஆய்வு செய்வதோடு புனித சூசையப்பர் வாசாப்புப் பற்றிய தகவல்கள் தெளிவாகக் கிடைக்கக்கூடிய காலம் தொடக்கம் இன்று வரை அதன் ஆற்றுகைகள் தொடர்பான விடயங்கள் விளக்கப்படுவதாக அமைகிறது. வாசகப்பாவின் தோற்றம், இது அரங்கேற்றப்படுவதற்கான நோக்கம், இது மக்கள் மத்தியில் தற்போது என்ன நிலையில் உள்ளது, இக் கலைக்கு மக்கள் எந்தளவிற்கு முக்கியத்துவம் கொடுக்கின்றனர் எனவும் கண்டறிந்து இக் கலையை மருவாமல் பாதுகாக்க வேண்டும் என்ற நோக்கிலும், தற்போதைய காலங்களில் இதன் நிலைகுறித்து மக்கள் கொண்டுள்ள கருத்துக்களை ஆராய்ந்து அது எதிர்கால தலைமுறையினரிடம் கொண்டு சேர்ப்பதற்கான வழிமுறைகளை முன்னுரைப்புச் செய்வதாகவும், இவ் ஆற்றுகை தொடர்பான முழுமையான தகவல்களை விளங்கிக்கொள்வதாகவும் இவ் ஆய்வானது அமைகிறது. தொடர்ந்து கத்தோலிக்க மறை தாழ்வுபாட்டுக் கிராமத்திற்குக் கொண்டுவரப்பட்டதென்பதை அக் கிராம வரலாற்றுப் பின்னணியில் விளக்கப்படுவதாகவும், மக்களின் வாழ்வியல் பின்னணி மற்றும் கலைகளில் கொண்டுள்ள ஆர்வம் என்பன பாரம்பரியக் கலையான புனித சூசையப்பர் வாசாப்புக் கலையைச் சிறப்புமிக்கதாக்கியுள்ளது என்பதை ஆய்வானது முன்வைக்கின்றது. புனித சூசையப்பர் வாசாப்பினுடைய கருப்பொருள், கதைச்சுருக்கம், அதை ஆக்கிய புலவர் வாசாப்பு வரலாறு, பாத்திரங்கள், வாசாப்பு ஏடு தொடர்பான விடயம், வாசாப்பு நிகழ்த்துவதற்கான காரணங்கள், வாசாப்பு உருவாக்கி இருக்கிற சமூக விழுமியப் பண்புகள் என்பனவும் இங்கு கூறப்படுகின்றது. இவ் வாசாப்பின் தயாரிப்பு தொடர்பான விடயங்கள், வாசாப்பின் பாடல் அமைப்பு முறை, வாசாப்பிற்கான பயிற்சி எவ்வாறு காணப்படுகிறது எவ்வெவ் முறைகளில் இடம்பெறுகிறது என்பன தொடர்பான விடயங்களும், நாடகப் பந்தல் மற்றும் மேடையமைப்பு வாசாப்புக்கான ஆடல் எவ்வாறு காணப்படுகின்றது, சபையோர் என்றால் யார்? அவை எவ்வாறு அமைந்துள்ளது, இசைக்கருவிகள், ஓலை தயாரித்தல், கூத்துப்பழக்குதல், வாசாப்புடன் தொடர்புடைய ஒளியமைப்பு, ஒலியமைப்பு, ஒப்பனை உடையமைப்பு புனித சூசையப்பர் வாசாப்பு– ஒழுங்கமைப்பும், பாத்திரங்களும், திரையமைப்பும் இவ் வாசாப்பின் முற்தயாரிப்பு, மேடையேற்றத் தீர்மானம் எடுத்தல், ஏடு அவிழ்த்தல், வரவு கொடுத்தல், கெச்சை கட்டுதல், கப்புக்கால் நாட்டல், ஊர்மறியல் புனித சூசையப்பர் வாசாப்பு ஆற்றுகை நாளில் இடம்பெறுபவை, உரைகள், தோடயச் சடங்கு, பெரியோர் கௌரவம், நாடகப் படிப்பு, இவ் வாசாப்பு ஆற்றுகைக்கு பின் நடைபெறுபவை தொடர்பான அனைத்து விடயங்களும் மிகத் தெளிவாக ஆராயப்படுவதாக அமைகிறது. இவ் வாசாப்பின் தற்போதைய நிலை குறித்து அறியும் பொருட்டு மக்களிடம் வினாக்கொத்துக்கள் மூலமும், நேரடி அவதானிப்பு மூலமும் தகவல்கள் பெறப்பட்டன. எதிர்கால தலைமுறையினரிடம் இக் கலையைக் கொண்டு செல்வதற்கான சில வழிகள் முன்னுரைக்கப்படுகின்றன.

**திறவுச்சொற்கள்:** *ஆற்றுகை; தயாரிப்பு; பண்பாடு; புனித சூசையப்பர் வாசாப்பு*

# மறைந்துபோன ஜனரஞ்சக ஆற்றுகை : யாழ்ப்பாணச் சின்னமேளக் கலையை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு

**ராகவேந்தன்.செ.**
*நுண்கலைத் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*

சதிர், சதிராட்டம், சின்னமேளம் என்றெல்லாம் அழைக்கப்பட்ட ஆற்றுகைக்கலைப் பாரம்பரியம் ஒன்று இற்றைக்கு நான்கு தசாப்தங்களுக்கு முன் இந்துக் கோயில் பண்பாட்டுடன் இயங்கிவந்துள்ளது. சதிர் என்பதனை சென்னைத் தமிழ் அகராதி நாட்டியம் என்றே குறிப்பிடுகிறது. எனினும் அது பிற்காலத்தில் முறைதவறிய நடனம் அல்லது ஒழுக்கத்துக்கு முரணான செயல் என்றவகையில் அர்த்தம் கொள்ளப்பட்டது. 'பெரியமேளம்' என்பது தவிலைக் குறிக்கும். "சின்னமேளம்" என்பது பெண்கள் ஆடிய சதிரைக் குறிக்கும். இந்த ஆய்வானது யாழ்ப்பாண மாவட்டத்தில் 19 ஆம் நூற்றாண்டிலே ஆற்றுகை செய்யப்பட்ட சின்னமேளம் என்ற ஆற்றுகைக்கலையானது கால ஓட்டத்தில் மறைந்துபோனமையையும் எவ்வாறு மறைந்துபோனது என்பதனை அறியும் நோக்கிலும் மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வு 'சின்னமேளம்' எவ்வாறு ஆற்றுகை செய்யப்பட்டது? 'சின்னமேளம்' ஆடிய பெண்களை சமூகம் எப்படிப் பார்த்தது? அக்கலைமறைந்து போனதற்கான அடிப்படைக் காரணங்கள் யாவை? என்பவற்றுக்கு பதில் தேடுகிறது. பண்புசார் அணுகுமுறையில் மேற்கொள்ளப்பட்ட இவ்வாய்வுக்கான முதலாம் மற்றும் இரண்டாம் நிலைத்தகவல்கள் யாவும் சின்னமேளம் ஆடிய கலைஞர்களிடமும் அக்கலையை நேரடியாகப் பார்த்த பார்வையாளரர்களிடமும் நேர்காணல்முறை மூலம் பெறப்பட்டன. ஆய்வுக்கு ஆதாரமாக நூல்கள், இலக்கியங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. யாழ்ப்பாணக்குடாநாட்டை மையப்படுத்தியதாகவே ஆய்வின் எல்லைப் பரப்புக் காணப்படுகிறது. சின்னமேளம் ஆற்றுகை செய்யப்பட்ட முறைமை, பெண் கலைஞர்கள் எதிர்நோக்கிய சவால்கள், மற்றும் அக்கலை இன்று மறைந்து போனமைக்கான காரணங்கள் என்பன விளக்கப்படுகின்றன. பண்பாட்டுடனும் வாழ்வியலுடனும் இணைந்திருந்த சின்னமேளம் போன்ற கலைகளின் ஆற்றுகை முறைகளைக் கண்டறிந்ததன் மூலம், அக்காலப் பண்பாட்டினையும் ஆற்றுகை முறைகளையும் அறிந்துகொண்டதுடன் அதனை இன்றைய அரங்கப்போக்குகளில் பயன்படுத்திக் கொள்ளக்கூடிய சாத்தியப்பாடுகளும் இனங்காணப்பட்டன. தமிழ் அரங்கச் சுழலில் ஒர் ஆற்றுகை வடிவம் ஜனரஞ்சகம் அடைந்திருந்தாலும், அவ் ஆற்றுகையினது பன்மைத்தன்மையான போக்குகளையும் ஆற்றுகைசார்ந்த நுட்ப மாற்றங்களையும் கருத்திற்கொள்ளும் அதேவேளை பண்பாட்டு விழுமியங்களையும் கவனத்திற்கொள்ளும் போதுதான் அதன் ஆற்றுகைத் தொடர்ச்சி அறாது தொடரும். சமூகம் ஒன்றின் பண்பாட்டின் தொடர்ச்சியைக் கருத்திற் கொள்ளாது விடும்பொழுது. சின்னமேளம் எவ்வாறு நலிவுகண்டதோ அவ்வாறே அவ்வாறே அதுபோன்ற ஏனைய கலைகளும் நலிவை நோக்கி நகரும் எனும் முடிவை இந்த ஆய்வு முன்வைக்கின்றது.

**திறவுச்சொற்கள்:** *கோயிற்கலை; தேவரடியார்; சதிராட்டம்; பண்பாட்டு ஆற்றுகை; பெண்வன்மைப்படுதல்*

# கத்தோலிக்க கூத்துக்கலை மரபில் பலாலிப் பிரதேசம் : ஒரு பயில் நிலை ஆய்வு

**யூடின் திவியா .இ., விசாகரூபன்.கி.**
*தமிழ்த்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*

ஈழத்தமிழரின் மரபு வழிக் கலை வடிவமான நாட்டுக்கூத்துக்கள் அவர்களது பண்பாட்டின் மறுதலிக்க முடியாத அடையாளமாக விளங்குவன ஆகும். ஈழத்தில் ஆடப்பட்டு வந்த கூத்துக்களைச் சமய அடிப்படையில் இந்து சமய மரபுடன் தொடர்புடைய கூத்துக்கள், கத்தோலிக்க சமய மரபுடன் தொடர்புடைய கூத்துக்கள் என இரு வகையாக நோக்கலாம். குறிப்பாக 16,17,18 ஆம் நூற்றாண்டுகளில் ஈழத்திற்கு வருகை தந்த கத்தோலிக்க மிசனரிமார்களே ஈழத்துக் கத்தோலிக்கக் கூத்துக்களின் வளர்ச்சிக்குப் பெரிதும் பங்காற்றியவர்கள் எனலாம். யாழ்ப்பாணப் பகுதியைச் சார்ந்தவர்கள் பல்வேறு பொருண்மையிலான கத்தோலிக்கக் கூத்துக்களை அளிக்கை செய்து வருகின்றமையைக் காணலாம். ஆயினும் அக் கூத்துக்கள் தொடர்பான பதிவுகள் என்பது மிக அரிதே. அதிலும் இலங்கை அரசினால் உயர் பாதுகாப்பு வலயமாக அடையாளம் காணப்பட்ட பலாலிப் பிரதேசத்தில் அளிக்கை செய்யப்பட்டு வந்த கூத்துக்கள் பற்றிய எவ்வித பதிவுகளும் போதுமான அளவில் இல்லை. இவ்வகையில் பலாலிப் பிரதேசத்தில் ஆடப்பட்டு வந்த கூத்துக்களையும் அக் கூத்துக்களின் ஊடாக வெளிப்படுத்தப்பட்ட கலை உணர்வையும் அக் கூத்துக்களின் இன்றைய நிலையையும் ஆராய்வதே இந்த ஆய்வின் நோக்காகும். களப்பணியின் போது திரட்டப்பட்ட தரவுகளின் அடிப்படையில் இந்த ஆய்வானது ஒரு விளக்க முறை ஆய்வாக அமைந்துள்ளது. கள ஆய்வின் மூலம் பெறப்பட்ட தரவுகளை முதலாம் நிலைத்தரவுகளாகவும், ஆய்வுப் பொருண்மையோடு தொடர்புடைய இதுவரையும் வெளிவந்துள்ள நூல்கள், ஆய்வு நூல்கள்,கட்டுரைகள், சஞ்சிகைகள், ஆய்வேடுகள் மற்றும் ஒலி–ஒளி நாடாக்கள் முதலான சான்றுகளை இரண்டாம் நிலைத்தரவுகளாகவும் கொண்டுள்ளது. பலாலிப் பிரதேசத்தில் ஆடப்பட்டு வந்த கூத்துக்களை வகைப்படுத்தி அவற்றின் கதைப்பொருள் ஆட்டமுறை அரங்க அமைப்பு ஒப்பனை, இசை, கூத்து, நடைமுறைகள் முதலானவற்றை இந்த ஆய்வு விரிவாக நோக்கியுள்ளது. கூத்துக்கள் கலையாக மட்டுமன்றி இலக்கியமாகவும் பார்க்கப்படுகின்றமை அதன் சிறப்பை எடுத்தியம்புகிறது. இவ் வகையில் பலாலிப் பிரதேச்தில் ஆடப்பட்டு வந்த கூத்துக்களின் யாப்பமைதி, சொல்லாட்சித் திறன், வர்ணனைப்பாங்கு, அகப்பொருள் மரபு, அணிப்பயன்பாடு, பழமொழிகள் என்பனவும் நோக்கப்பட்டுள்ளன. மேலும் கால மாற்றம் பலாலிப் பிலதேசத்தில் ஆடப்பட்டு வந்த கூத்துக்களிடையே எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தியது என நோக்கியதோடு அவற்றிற்குரிய பின்னணிகளும் ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளன. பலாலிப் பிரதேசத்தில் பயிலப்பட்டு வந்த கத்தோலிக்கக் கூத்துக்கள் அங்கு வாழ்கின்ற கத்தோலிக்க மக்களது மதம் சார் விழுமியங்களைக் கூத்துக்களின் ஊடாக வெளிக்கொணர்ந்துள்ளன. அவற்றின் தனித்துவத்தையும் இதர கூறுகளையும் வெளிக்காட்டுவதாக இந்த ஆய்வானது அமைகின்றது. இந்த ஆய்வின் மூலம் பலாலிப் பிரதேசத்தில் அளிக்கை செய்யப்பட்டு வந்த கத்தோலிக்கக் கூத்துக்கள் யாழ்குடா நாட்டின் பிற பகுதிகளிலும் பயில் நிலையில் உள்ள கூத்துக்களுக்கு இணையான தன்மையைப் பெற்றிருந்தமை பலாலிப் பிரதேசத்திற்குரிய பண்பாட்டுக் கலாசாரப் பழக்க வழக்கங்களை உள்வாங்கியமை, தனித்துவமான சில அழகியல் கூறுகளையும் தன்னகத்தே கொண்டிருந்தமை வெளிப்படுகின்றது. இன்றைய கால கட்டத்தில் அதன் நிலைத்திருப்பில் ஏற்பட்ட மாற்றங்களையும், எதிர் கொள்ளும் சவால்களையும், அதனை நிவர்த்தி செய்வதற்கான மாற்று வழிகளையும் இந்த ஆய்வானது பரிந்துரைக்கின்றது.

**திறவுச்சொற்கள்:** *இலக்கியம்; கத்தோலிக்கம்; கலை; கூத்துக்கள்; பலாலிப்பிரதேசம்*

# ஈழத்துத் தமிழ்ச் சிறுகதைகளில் இனமுரண்பாடு: 1980 - 1990கள் வரையான ஈழத்துத் தமிழ்ச் சிறுகதைகளை அடிப்படையாகக் கொண்டதோர் ஆய்வு

**சதீஸ்.மு., குமரன்.ஈ.**

*தமிழ்த்துறை, யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்*

இலங்கையில் சிங்களவர், தமிழர், தமிழ் பேசும் முஸ்லிம்கள் என மூன்று இனங்கள் பாரம்பரியமாக வாழ்ந்து வருகின்றனர். சுதந்திரத்திற்குப் பின்னர் இலங்கையில் ஒற்றையாட்சிமுறை தொடர்ந்ததால் பெரும்பான்மையான சிங்களவர்களின் மேலாதிக்கம் ஏற்பட்டது. இதனால் இனமுரண்பாடு வளரத் தொடங்கியது. இலங்கை நாட்டின் தேசிய இனங்கள் தம் அடையாளத்தை நிலைநிறுத்திக் கொள்ள இனம், மொழி, பண்பாடு, சாதி, பொருளாதாரம் முதலிய இன்னோரன்ன விடயங்களுக்காகப் பிணக்குற்றனர். இதனையே இனமுரண்பாடு என்கிறோம். தமிழ் மக்களும் தம் உரிமைகளுக்காகச் சாத்வீக முறையில் போராடினர். 1956 இல் நடந்த தமிழர்களின் சாத்வீகப் போராட்டத்தை எதிர்த்துத் தெற்கில் இனக்கலவரம் ஏற்பட்டது. தொடர்ந்தும் நாட்டில் இனக்கலவரங்கள் ஏற்பட்டன. ஆட்சியாளர்களின் சிங்களக் குடியேற்றங்கள், மொழியுரிமை பறிப்பு, உயர்கல்வியில் தரப்படுத்தல் எனப் பல்வேறு ஒடுக்குமுறைகளால் தமிழர்கள் பாதிக்கப்பட்டனர். முரண்பாடு ஆயுதப் போராட்டமாக மாறியது. அரசபடைகளும், ஆயுதக்குழுக்களும் மோதின. இதனால் மக்கள் பாதிக்கப்பட்டனர். வடக்குக் கிழக்குப் பகுதிகளில் அமைதி குன்றலாயிற்று. பல்லாயிரக்கணக்கான தமிழ் பேசும் மக்கள் அகதிகளாயினர். நாட்டை விட்டும் புலம்பெயர்ந்தனர். இப்பிரச்சினைகள் அக்காலச் சூழலில் தோன்றிய ஆக்க இலக்கியங்களில் பிரதிபலித்தன. குறிப்பாக 1980 – 1990 வரையான காலகட்டத்தில் எழுந்த ஈழத்துத் தமிழ்ச் சிறுகதைகளில் அவை தீவிரமாக மேற்கிளம்பின. அக்காலகட்டத்தில் எழுந்த ஈழத்துத் தமிழ்ச் சிறுகதைகளில் இனமுரண்பாடு வெளிப்படுத்தப்பட்ட வகையினையும், இனமுரண்பாட்டிற்கான காரணங்களையும், அக்காலச் சமூக, அரசியல், பொருளாதார நடைமுறைகளிலும், மனித சிந்தனைகள் மற்றும் வாழ்வியல் போக்குகளிலும் இனமுரண்பாடு ஏற்படுத்திய பாதிப்புக்களையும், இனங்களுக்கு இடையிலான பகைமைத்தன்மையாக இனமுரண்பாடுகள் வளர்ந்த விதத்தையும் விளக்குவதே இவ் ஆய்வின் நோக்காகும். இவ்வாய்விற்கு, 1980 – 1990 கள் வரையான காலகட்டத்து இனமுரண்பாடு மற்றும் போர்க்கால வரலாறு பேசும் ஈழத்துத் தமிழ்ச் சிறுகதைகள் முதன்மை ஆதாரங்களாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. இனமுரண்பாடுசார் அரசியல் – வரலாற்று நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், ஆய்வேடுகள், கட்டுரைகள் என்பன துணை ஆதாரங்களாகப் பயன்படுத்தப் பட்டுள்ளன. விபரண முறையியல் அடிப்படையில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் பகுப்பாய்வு, ஒப்பாய்வு, விளக்கியுரைத்தல் முதலிய அணுகுமுறைகளும் இங்கு பிரயோகிக் கப்பட்டுள்ளன. இதன் மூலம் ஈழத்தில் இனமுரண்பாடு வளர்ந்த வரலாற்றையும், அவை 1980 – 1990 வரையான காலகட்ட ஈழத்துத் தமிழ்ச் சிறுகதைகளில் பிரதிபலிக்கப்பட்டிருக்கும் தன்மையையும், போர்ச்சூழலையும், மக்கள் அனுபவித்த துன்பியல் வாழ்வையும், அவற்றினை அனுபவ வெளிப்பாடுகளாய் வெளிப்படுத்தி வாசக மனங்களில் நிலைப்படுத்த கதையாசிரியர்கள் கையாண்ட நுட்பங்களையும் தெரிந்து கொள்ள முடியும்.

**திறவுச் சொற்கள்:** *இனமுரண்பாடு; தமிழ்ச் சிறுகதைகள்; பிரதிபலிப்பு*

# தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன்

**தக்ஷானி .செ., இரகுநாதன்.ம.**
*தமிழ்த்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*

கடைச்சங்க காலத்தில் அரசோச்சிய பாண்டிய மன்னர்களுள் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் புகழ் பெற்றவன். நெடுஞ்செழியன் என்ற இயற்பெயருடைய இம்மன்னன் வம்சப் பெயராகிய பாண்டியன் என்பதை முன்னொட்டாகக் கொண்டிருப்பதுடன் அவன் பகை வென்ற போர்களில் முக்கியமானதாகவுள்ள தலையாலங்கானத்துப் போருடன் இணைத்து தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் என அழைக்கப்பட்டான். சங்க இலக்கியங்களில் புறநானூறு, மதுரைக் காஞ்சி, நெடுநல்வாடை, ஆகியவற்றில் இம்மன்னனின் வரலாற்றையும், வீரத்தையும் எடுத்துக் காட்டும் பகுதிகள் உள்ளன. மாங்குடி மருதனாரால் பாடப்பட்ட மதுரைக்காஞ்சி இம் மன்னனையே பாட்டுடைத் தலைவனாகக் கொண்ட புறத்திணை கூறும் நூலாக உள்ளது. நெடுநல் வாடையில் நக்கீரர் வெளிப்படையாகக் கூறாமல் குறிப்பால் உணரும் வகையில் பாண்டியன் நெடுஞ்செழியனைப் பாடியுள்ளார். இதனாலேயே நெடுநல்வாடை அகமும் புறமும் இணைந்த நூலாகக் கொள்ளப்படுகின்றது. இவற்றைவிட தொகை நூல்களில் புறநானூற்றில் இம் மன்னனைப் பற்றிக் கூறும் பாடல்கள் பல உள்ளன. இவற்றை அடிப்படையாகக் கொண்டே இம்மன்னனது வரலாற்றைக் கட்டமைக்க வேண்டிய தேவை உள்ளது. அந்த வகையிலான முயற்சியே இந்த ஆய்வில் மேற்கொள்ளப்படுகின்றது. செழியன் என்னும் இயற்பெயருடைய இன் மன்னன் நீண்ட தேரை வைத்திருந்ததால் நெடுஞ்செழியன் என்ற பெயர் பெற்றான் என்பர். மேலும் அகநானூற்றுப் புலவர்கள் பலர் இவனைப் பசும்பூண் பாண்டியன், அடுபோர்ச் செழியன், இயல்தேர்ச் செழியன், கைவண் செழியன், கொடித்தேர்ச் செழியன், கொற்றச் செழியன் என்ற பெயர்களால் அழைத்துள்ளதைக் காணலாம். மதுரைக்காஞ்சியில் இவன் பண்டைத் தமிழகத்தின் பெரும் பகுதியை ஆண்டு வந்ததாகவும், இவனது ஆட்சிக்காலத்தில் சேரநாட்டை யானைக் கண்சேய் மாந்தரஞ் சேரல்இரும்பொறையும், சோழ நாட்டை இராஜசூயம்பெருநற்கிள்ளியும் ஆண்டு வந்ததாக சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. இம்மன்னனால் மாங்குடி மருதன், நக்கீரர் முதலிய புலவர்கள் பெரிதும் ஆதரிக்கப்பட்டனர். பாண்டியன் நெடுஞ்செழியனின் போர்களில் சிறப்பானது தலையாலங்கானத்துப் போராகும். இவன் தலையாலங்கானம் என்ற இடத்தில் சேரன், சோழன், திதியன், எழினி, எருமையூரன், இருங்கோவேண்மான், பொருநன் ஆகிய ஏழு பெரு மன்னர்களையும் ஒருங்கே எதிர்த்து வெற்றி பெற்றவனாவான். இதனாலேயே இவன் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் எனச் சிறப்பிக்கப்பட்டான். இவனது வீரத்தையும், கொடைச் சிறப்பையும் சங்க இலக்கியங்கள் பலவும் எடுத்துக்காட்டுகின்றன. இந்த ஆய்வு சங்க இலக்கியச் சான்றுகளை ஆதாரமாகக் கொண்டு தலையாலங்கானத்துச் செருவென்றபாண்டியன்நெடுஞ்செழியனின் வரலாற்றைக் கட்டமைப்பதை நோக்கமாகக் கொண்டு விவரணமுறையில் ஆய்வு செய்வதாக அமைந்துள்ளது. இதன் மூலம் தலையாலங்கானத்துச் செருவென்றபாண்டியன் நெடுஞ்செழியனின் தனித்துவத்தை இனங்கானக் கூடியதாக அமையும் என்பதே இவ் ஆய்வின் பயனாகும்.

**திறவுச்சொற்கள்:** *பாண்டியன்; தலையாலங்கானம்; மதுரைக்காஞ்சி; மாங்குடிமருதன்*

.

# குறுந்தொகையில் தோழி கூற்றுக்கள் ஓர் ஆய்வு

**ரமணியா.ஜெ., செல்வ அம்பிகை.ந.**
*தமிழ்த்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*

தமிழ் இலக்கிய வரலாற்றில் காலத்தால் முற்பட்டனவாக எமக்குக் கிடைப்பவை சங்க இலக்கியங்களாகும். இவை எட்டுத்தொகை, பத்துப்பாட்டு என்னும் இரு தொகுதிகளாக உள்ளன. இவற்றுள் எட்டுத்தொகை நூல்களில் முதலில் தொகுக்கப் பெற்ற தொகைநூலான குறுந்தொகையானது அக்கால மக்களின் அகவாழ்வியலை வெளிப்படுத்தும் இலக்கியமாக அமைகின்றது. இவ் அகவாழ்வில் தோழி, பாங்கன், பாங்கி முதலியோர் தலைவன் தலைவிக் கிடையே வாயில்களாகச் செயற்படுகின்றனர். இந்த ஆய்வில் வாயிலாகச் செயற்படுகின்ற தோழியின் கூற்றுக்கள் ஆய்வு செய்யப்படுகின்றன. தொல்காப்பியம் பொருளதிகாரத்தில் கூற்று என்பது ‘அகப்பாடல்களில் தலைவன் முதலான மாந்தர்கள் பேசும் தன்மையே’ எனக் குறிப்பிடுகின்றது. இவ் ஆய்வானது அகமாந்தர்களின் கூற்றுக்களில் தோழிகூற்றுப் பற்றியதாக அமைவதனால் பகுப்பாய்வு முறையும், அக்கூற்று நிலையினை வெளிப்படுத்துவதற்குக் கையாண்ட பாடல்களின் மூலம் விபரணமுறையும் ஆய்வு அணுகுமுறையாகப் பயன்படுத்தப்படுகின்றது. குறுந்தொகையில் சேட்படை, குறைநயப்பு, இருவகைக்குறி, ஒருவழித்தணத்தல், வரைவுகடாதல், வரைவுவேட்கை, வரைவுநீட்டிப்பு, அறத்தொடுநிற்றல், வரைவிடைப் பொருள்வயிற்பிரிவு, வரைவுமலிவு, உடன்போக்கு, மலிவு, ஊடல், பிரிவு என பதினான்கு இடங்களில் தோழி கூற்று உள்ளது. இவ்வாறு வருகின்ற பதினான்கு வகையான சந்தர்ப்பங்களையும் குறுந்தொகைப் பாடல்களின் துணையுடன் எடுத்துக்காட்டுவதாக இவ் ஆய்வு அமைகின்றது. இந்த ஆய்வானது ஏனைய பழந்தமிழ் இலக்கியங்களில் அமைந்திருக்கும் வாயில்களின் கூற்றுக்களைக் கண்டறிவதற்கு துணையாக அமையும். இது பின்னாளில் வாயிலான தோழி கூற்றுக்கள் தொடர்பான ஓர் ஒப்பியல் ஆய்வுக்கு துணையாக அமையும்.

**திறவுச்சொற்கள்:** *அகத்திணை; குறுந்தொகை; கூற்று; தொல்காப்பியம்; புறத்திணை*

# ஐந்திணை ஐம்பது இலக்கியம் கூறும் அகவாழ்வு - சமூகவியலை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஆய்வு

**சத்தியா.இ.**

*தமிழ்த்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*

'வட வேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறு நல்லுலகம்' எனத் தொல்காப்பியச் சிறப்புப் பாயிரம் கூறும். இங்கு தமிழ் மொழியானது நிலத்துடன் அடையாளப்படுத்தப்படுகிறது. தமிழின் ஐந்திணைப்பாகுபாடு என்பது புவியியல் ரீதியில் தமிழகத்தின் நிலவெளியைப் பகுக்கின்றது. அதாவது நிலமானது மொழி வழியே தமிழ்ச் சமுதாயத்தின் பொது நினைவிற்குள் தகவமைக்கப்படுகிறது. மக்கள் முல்லை, குறிஞ்சி, மருதம், பாலை, நெய்தல் எனப்படும் ஐவகை நிலப் பாகுபாட்டில் ஒவ்வொரு நிலத்துக்குமெனத் தொழில், வழிபாடு, ஒழுக்கம் முதலியனவற்றை வகுத்து வாழ்ந்தனர். தமிழ் இலக்கிய வரலாற்றிலே சங்ககாலத்தில் காதலும் வீரமும் பிரதான பாடுபொருளாய் அமைய சங்கமருவிய காலத்ததில் அறம் பிரதான பாடுபொருளாய் அமைந்து கொண்டது. ஆயினும் அறநெறிக்காலத்தில் அற இலக்கியங்கள் மட்டுமல்லாது அகம் பேசும் இலக்கியங்களும் தோற்றம் பெறத் தவறவில்லை. அந்தவகையில் அன்பினைந்திணை ஒழுகலாறுகளைப் பேசும் அகப்பொருள் இலக்கியமாய் ஐந்திணை ஐம்பது அமைகின்றது. ஐந்திணை ஐம்பதில் மாறன்பொறையனார் ஐவகையான நிலங்களுக்கும் ஐவகையான தூய காதல் ஒழுக்கங்களை குறிப்பிடுகின்றார். அவை முறையே முல்லை–இருத்தல், குறிஞ்சி–புணர்தல், மருதம்–ஊடல், பாலை–பிரிதல், நெய்தல்–இரங்கல் என்ற நிலையில் அமைவு நிலை பெறுகின்றன. மாறன்பொறையனார் மக்களுடைய அகவாழ்வை பிரதானமாகக் கூறி அதனூடு அக்கால வழக்குகளான களவு–கற்பு ஒழுக்கம், பரத்தைமை ஒழுக்கம், காடழித்துப் பயிர் செய்தல், புண்ணிற்குக் காரமென்ற ஒருவகை மருந்திடல், நடுகல் வழிபாடு, சிறு பெண்கள் கடலில் விளைந்த முத்துக்களை வைத்து விளையாடுதல், வெறியாடலாகிய முருகன் விழா, வரைவு கடாவுதல், பரத்தைமை ஒழுக்கம் கடிந்து பேசல், பழமொழிகளைக் கையாளுதல் முதலியனவற்றை தமது பாடல்களின் வழி எடுத்துரைத்துள்ளார். மேலும் மக்களின் வாழ்க்கை முறைகள் மற்றும் உலகியல் உண்மைகள் முதலியவற்றையும் கற்போர் மனங்கொள்ளும் வகையில் குறிப்பிட்டுள்ளார். சங்கமருவிய கால மக்களுடைய அகவாழ்வு மட்டுமல்லாது விலங்குகளுடைய காதல் வாழ்க்கையையும் மாறன் பொறையனார் கூறியுள்ளமை சிறப்பிற்குரியது. சங்க காலத்தின் தொடர்ச்சியாய் அன்பினைந்திணை ஒழுக்கத்தை அறநெறிக்கால இலக்கியமான ஐந்திணை ஐம்பதில் திறம்படக் கையாண்டு அக்கால சமுதாயத்தில் நிலவிய வழக்குகள், அறம், வழிபாடு முதலிய செய்திகளை விளக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**திறவுச்சொற்கள்:** *அன்பினைந்திணை; ஐந்திணை ஐம்பது; சமூகம்*

# State, Governance and Media

# இலங்கையின் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையும் பல்லின சமூகமும் : விமர்சன ஆய்வு

**கிறிஸ்டி நிரோஜினி.தே., புஸ்பராசா.ந.**
*அரசறிவியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*

உலகில் காணப்படுகின்ற அரசாங்க முறைகளில் நிறைவேற்று ஜனாதிபதி முறைமையும் ஒன்றாகும். இம் முறைமை 1787ஆம் ஆண்டு ஐக்கிய அமெரிக்காவில் அறிமுகம் செய்யப்பட்டது. நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதியிடம் அரசின் உண்மை நிர்வாக அதிகாரங்கள் அனைத்தும் சட்டத்துக்குப் புறம்பாக ஒப்படைக்கப்படுகிறது. உலகின் பல நாடுகளில் நிறைவேற்று ஜனாதிபதி அரசாங்க முறைமையின் ஊடாக பன்மைத்துவ சமூகமானது சிறப்பான வகையில் முகாமை செய்யப்பட்டு வருகின்றது. இவ்வகையில் இலங்கையிலும் இம்முறையானது பல்வேறு காரணங்களை முன்வைத்து அறிமுகம் செய்யப்பட்டது. 1978ஆம் ஆண்டு அரசியல் யாப்பின் ஊடாக நிறைவேற்று ஜனாதிபதி முறைமையானது ஜே.ஆர் ஜெயவர்த்தனா அவர்களினால் அறிமுகப்படுத்தப்பட்டது. இலங்கையில் இம்முறை அறிமுகப்படுத்தப் பட்டதன் நோக்கம் பல்லின சமூகத்தினை முகாமை செய்வதற்கு ஏற்புடையது என்பதினாலாகும். குறிப்பாக சிறுபான்மை மக்களைப் பாதுகாப்பதற்காகவே ஆகும். இத்தகைய நோக்கம் நான்கு தசாப்தங்கள் கடந்தும் நிறைவேற்றப்பட்டதா என்பதில் சந்தேகமே நிலவுகின்றது. மறுபுறத்தில் இலங்கையின் இனமுரண்பாடுகள் கூர்மையடைவதற்கும் இம்முறைமை முக்கிய காரணமாக அமைகின்றது. 1978 ஆம் ஆண்டிற்கு பிற்பாடு இலங்கையின் இனமுரண்பாடு உச்ச நிலையை அடைந்தது. ஆயுதக் குழுக்களின் தோற்றம் 1980ஆம் ஆண்டுகளின் பின்னர் அதிக தாக்கத்தைச் செலுத்தியது. 2009ஆம் ஆண்டு உள்நாட்டு ஆயுதப் போர் முடிவுக்கு கொண்டு வரப்பட்டதன் மூலம் இனப் பிரச்சினை தீர்க்கப்பட்டுள்ளது எனக் கூறிக் கொள்கின்ற போதிலும், யுத்தம் முடிந்து 12வருடங்கள் கடந்தும் இலங்கையில் இனங்களுக்கிடையிலான நல்லிணக்கத்தை மற்றும் ஐக்கியத்தை ஏற்படுத்த முடியவில்லை. மாறாக இலங்கைப் பல்லின சமூகத்தினர் மதம் அல்லது இனம் என்ற அடிப்படையில் பிரிந்துள்ளனர். இம் முறைமை அறிமுகப்படுத்தப்பட்ட காலத்திலிருந்தே இதனை ஒழிக்க வேண்டும் என்ற கோரிக்கைகள் வலுத்து வருகின்றன. அண்மைக்காலங்களில் மேற்கொள்ளப்பட்ட அரசியலமைப்பு திருத்தங்கள் ஜனாதிபதியின் அதிகாரங்கள் தொடர்பில் இரண்டு விதமான கருத்து நிலையை தோற்றுவித்துள்ளன. அதாவது அதிகாரங்களை அதிகப்படுத்த வேண்டும். மற்றும் அதிகாரங்களைக் குறைக்க வேண்டும் என்பவையாகும். 17ஆம் மற்றும் 19ஆம் திருத்தச் சட்டங்கள் ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைத்து சிறுபான்மையினருக்குக் காப்பீடாக அமைந்த போதிலும் 18ஆம் மற்றும் 20ஆம் திருத்தச் சட்டங்கள் ஜனாதிபதியின் அதிகாரங்களை அதிகப்படுத்தியுள்ளன. அந்த வகையில் இலங்கை நிறைவேற்று ஜனாதிபதி முறைமையையும் பல்லின சமூகமும் விமர்சன ரீதியான ஆய்வு என்னும் இவ்வாய்வானது இலங்கையின் பல்லின சமூகத்தினை நிறைவேற்று ஜனாதிபதி முறையின் ஊடாக எவ்வாறு முகாமை செய்யப்படுகின்றது என்பது பற்றியும் நிறைவேற்று ஜனாதிபதி முறைமையினால் இலங்கையிலுள்ள இனங்கள் எதிர்நோக்கும் சவால்களை மதிப்பிடுவதாகவும், இலங்கைப் பொருளாதார மற்றும் அபிவிருத்திக்கு எத்தகைய பங்களிப்பினை செய்கின்றது என்பது பற்றியும் ஆராய்கின்றது. அத்துடன் இலங்கை அரசியல் யாப்பில் எத்தகைய மாற்றங்களைக் கொண்டு வரவேண்டும் என்பது பற்றியும் விரிவாக நோக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வானது பண்பியல் சார்ந்த ஆய்வு முறைகளைப் பயன்படுத்தி ஆய்வுடன் தொடர்புடைய இரண்டாம் நிலை தரவுகளான ஆய்வுக் கட்டுரைகள், புத்தகங்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள் போன்றவற்றிலிருந்து பெறப்பட்டு தரவுகள் சேகரிக்கப்பட்டு விபரணப் பகுப்பாய்வு அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வின் மூலம் இலங்கைப் பல்லின சமூகத்தை முகாமை செய்வதில் நிறைவேற்று ஜனாதிபதி முறைமையானது தோல்வி அடைந்ததை வெளிக்கொணர முயலுகிறது. இலங்கைப் பல்லின சமூகத்தினை முகாமை செய்வதற்கான பரிந்துரைகள், தீர்வுகள் போன்றனவும் இவ்வாய்வில் முன்வைக்கப்பட்டுள்ளன.

**திறவுச்சொற்கள் :** *அரசியல் அதிகாரம்; இனமுரண்பாடு; நிறைவேற்று ஜனாதிபதி முறைமை; பல்லின சமூகம்*

# இலங்கைத் தமிழர் அரசியலில் பொன். கந்தையாவின் ஆளுமை விமர்சன ரீதியான ஆய்வு

**குணராஜ்.கி., கணேசலிங்கம்.கே.ரீ.**
*அரசறிவியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*

இலங்கைத் தமிழர்கள் வரலாற்றில் இடதுசாரிகளின் செல்வாக்கு பலவீனமாகவும் தேசியத்தின் மீதான ஈடுபாடு அதீதமாகவும் அமைந்திருந்தது. வர்க்கக் கட்டமைப்பினையோ சமஅளவான சொத்துப் பங்கீட்டையோ முன்னிறுத்தாத மத்தியதர வர்க்கமாக இலங்கைத் தமிழர்களின் சமூக அடுக்கமைவுக்கான அடிப்படை காணப்பட்டது. இத்தகைய சூழலுக்குள்ளால் மத்திய தர குடும்பத்தில் பிறந்து தனது கல்விப் புலமை மற்றும் ஆளுமைகளாலும், ஆற்றலாலும் தமிழ் மக்கள் மத்தியில் பிரபலமடைந்தவர் பொன்.கந்தையா ஆவார். அவர் கம்யூனிசக்கட்சியின் பிரதிநிதியாகப் பாராளுமன்றம் சென்றதோடு அவர் மட்டுமே இடதுசாரி மரபுக்கூடாகத் தமிழர் மத்தியில் இருந்தும் பாராளுமன்றிற்குத் தெரிவு செய்யப்பட்டவராவார். அவ்வாறு பாராளுமன்றம் சென்ற பொன்.கந்தையா தமிழ் மக்களின் உரிமையை பாதுகாப்பதிலும் உத்தரவாதப்படுத்துவதிலும், உழைத்ததோடு கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் வறுமைக்கு எதிராக போராடுதல் போன்ற விடயங்களில் பாராளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் அதிக கரிசனை கொண்டதோடு தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட நெருக்கடிகளைச் சரிசெய்வதில் கம்யூனிசக்கட்சியூடாகச் செயற்பட்டார். இலங்கைத் தமிழர் அரசியல் வரலாற்றில் அரசியல் தலைமைகளின் ஆளுமைகளையும் கட்சிகளின் கடந்தகால சாதனைகளையும் சவால்களையும் மதிப்பீடு செய்வது அரசியல் அபிவிருத்திக்கு அவசியமானது என்ற பின்புலத்தில் சுதந்திரத்தின் பின்னர் தமிழ் பேசும் மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதில் முனைப்பு செலுத்திய வகையில் கம்யூனிஸ்ட் கட்சியினதும் அதன் தலைவர்களில் ஒருவரான பொன். கந்தையாவினதும் பணிகளை அளவீடு செய்தல் மற்றும் பொன். கந்தையாவின் ஆளுமைகளை மதிப்பீடு செய்தல் முதலான நோக்கங்களை முதன்மைப்படுத்தி இவ் ஆய்வு முன்னெடுக்கப்பட்டதுடன் இலங்கைத் தமிழ் அரசியல் வரலாற்றில் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் வகிபாகம் யாது?, பொன். கந்தையாவின் தலைமையின் கீழ் தமிழ் சமூகம் அடைந்த நன்மைகள் யாவை?, பொன். கந்தையாவின் ஆளுமை சார் பலம் மற்றும் பலவீனங்கள் யாவை? முதலான ஆய்வு வினாக்களின் அடிப்படையில் இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. சமூக நிறுவனங்களையும் சமூகக் குழுக்களையும் தனி மனிதர்களையும் அவற்றுக்கிடையிலான அரசியல் தொடர்புகளையும் முதன்மைப்படுத்தி ஆய்வு செய்யும் அரசியல் சமூகவியல் அணுகு முறை பிரயோகிக்கப்பட்டுள்ளது. முதலாம், இரண்டாம் நிலைத்தரவுகளை அடிப்படையாகக் கொண்ட பண்புசார் முறையியலில் இவ்வாய்வு வடிவமைக்கப்பட்டுள்ளது. பொன்.கந்தையா காலத்தில் வாழ்ந்த அவரது நண்பர்கள், உறவினர்களை நேர்காணல் செய்ததுடன் அரசியல் ஆய்வாளர்கள், அரசியல் கட்டுரை ஆசிரியர்கள், அரசியல் பிரமுகர்களுடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டு ஆய்வுக்கு தேவையான முதனிலைத் தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன. வடிவமைக்கப்பட்டுள்ளது. பொன்.கந்தையா பற்றிய விமர்சனங்களும் மதிப்பீடுகளும் இரண்டாம் நிலைத் தரவுகளாக அவதானத்தில் கொள்ளப்படுகிறன. பொன். கந்தையாவின் ஆளுமை சார் திறன்கள் இலங்கைத் தமிழர் அரசியலில் வெற்றியளிக்கவில்லை என்பதுடன் அவரது ஆளுமை மட்டுப்படுத்தப்பட்டளவிலேயே காணப்படுகின்றமையை இந்த ஆய்வு வெளிக்கொணர்கிறது.

**திறவுச்சொற்கள்:** *அரசியல் தலைமைத்துவம்; இடதுசாரிகள்; இலங்கைத் தமிழர் அரசியல் வரலாறு; கம்யூனிஸ்ட் கட்சி*

# இலங்கையில் மனித உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்தலில் வடபிராந்திய மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வகிபாகம்

**தர்ஷா.பே., புஸ்பராசா.ந.**
*அரசறிவியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*

மனித குலத்தின் தோற்றத்திலிருந்து இயற்கையாகவே தோற்றம் பெற்ற ஒன்றாகவும் மனிதனை மனிதனாக இனங்காண்பதற்குரிய அவசியமான விடயமாக மனித உரிமைகள் காணப்படுகிறது. உலகில் மனித உரிமை தொடர்பான முன்னெடுப்புக்களின் வரலாறு மிக நீண்டது. இலங்கையில் கி.பி நான்காம் நூற்றாண்டில் ஆரம்பமாகிய உரிமைகள் தொடர்ச்சியாக பிரித்தானிய காலனித்துவ காலப்பகுதியில் ஏற்படுத்தப்பட்ட அரசியல் சீர்திருத்தங்களிலும் இடம்பெற்றது. சுதந்திரம் அடைந்ததன் பிற்பாடு 1972ஆம் ஆண்டு முதலாம் குடியரசு அரசியல் வரைபிலும் 1978ஆம் ஆண்டு இரண்டாம் குடியரசு அரசியல் வரைபிலும் இடம்பெற்றது. 1972ஆம் ஆண்டு வரைபில் ஏற்படுத்தப்பட்ட உரிமைகளின் நிலைப்பாடுகளுடன் ஒப்பிடுமிடத்து பலமான ஏற்பாடாக 1978ஆம் ஆண்டு ஏற்பாடு அமைந்துள்ளது. இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு மனித உரிமைகளைப் பாதுகாப்பதிலு மேம்படுத்துவதிலும் எவ்வாறு செயலாற்றுகிறது என்பதனை 2015- 2019ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் இடம்பெற்ற ஆணையத்தின் செயல்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு குறிப்பாக மனித உரிமை மீறல்களினை பலவீனப்படுத்துவதில் பெரிதும் தோல்வி கண்டு வரும் தன்மையில் மனித உரிமைகள் ஆணைக்குழு உருவாக்கப்பட்டதன் நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு தவறியுள்ளது என்ற கருதுகோளினை தெளிவுபடுத்தியுள்ளது. இலங்கையில் அதிகரித்துள்ள மனித உரிமை மீறல்களை நலிவடையச் செய்யும் பொருட்டு மனித உரிமைகள் ஆணைக்குழுவின் செயற்பாட்டிலும், அதன் அதிகார தன்மையிலும் பல மாற்றங்களை ஏற்படுத்துவது அவசியமான ஒன்றாக அமைந்துள்ளது இவ்வாய்வின் நோக்கங்களாக மனித உரிமைகளை பாதுகாத்து மேம்படுத்துவதற்கான அதிகாரத்தினை ஆணைக்குழு கொண்டுள்ளதா என்பதனை ஆராய்தலும் மற்றும் மனித உரிமைகளை பாதுகாத்து மேம்படுத்தலில் மனித உரிமைகள் ஆணைக்குழு எதிர்கொள்ளும் பிரச்சினைகளையும் அதற்கான காரணங்களையும் ஆராய்தலினைக் கண்டறிதலும் அமைந்துள்ளன. பண்பு ரீதியான ஆய்வு அணுகுமுறையினை அடிப்படையாக கொண்டு ஆய்வு முன்னெடுக்கப்பட்டுள்ளது. இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தொடர்பான தகவல்கள் யாழ்மாவட்டத்தில் அமைந்துள்ள மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவருடனான கலந்துரையாடல் மற்றும் பணியாளர்களுடனான நேர்காணல், மனித உரிமை மீறல்களுக்கு உள்ளான மக்கள் பிரிவினருடனான நேர்காணல் மூலமும் தரவுகள் பெற்றுக்கொள்ளப்பட்டதுடன் இலங்கை அரசியல் வரைபில் உள்ளடக்கப்பட்டுள்ள மனித உரிமைகளுக்கான ஏற்பாடுகள், மனித உரிமைகள் சார்ந்த இலக்கியங்கள், சஞ்சிகைகள் மூலமும் தரவுகள் பெற்றுக் கொள்ளப்பட்டு ஆய்வு முன்னெடுக்கப்பட்டுள்ளது. மனித உரிமைகளை பாதுகாப்பதற்கு பல முனைப்பான நடவடக்கைகளை முன்னெடுக்கின்ற போதும் மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் பரிந்துரைகளையும், அறிக்கைகளையும் மட்டுமே சமர்ப்பிக்க முடிவதால் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் செயற்பாடுகள் பெரிதும் விமர்சிக்கப் படுவதற்கும் உரிமைகளை பாதுகாப்பதில் பலவீனமான தன்மையைக் கொண்டமைவதற்கும் காரணமாக அமைந்துள்ளது. ஆகவே மனிதஉரிமைகள் ஆணைக்குழு எதிர்கொள்ளும் சவால்களினையும் அதற்கான பரிந்துரைகளையும் முன்வைத்து இலங்கையில் புதிய அரசியல் வரைபு ஏற்படுத்தப்படுமிடத்து அத்தகைய சவால்களை மாற்றியமைப்பதற்கு வலுசேர்ப்பதாகவும், சிறப்புதிகாரங்களைக் கொண்டமைந்துள்ள மனித உரிமைகள் ஆணைக்குழுவில் உரிமைகளைப் பாதுகாத்து மேம்படுத்துவதில் பலமாற்றங்களை ஏற்படுத்த வேண்டியுள்ள நிலைப்பாட்டினை வெளிப்படுத்துவதாகவும் இந்த ஆய்வு அமைந்துள்ளது.

**திறவுச்சொற்கள் :** *அரசியல்வரைபு; இலங்கை; மனிதஉரிமை; ஆணைக்குழு; மனித உரிமைகள் பிரகடனம்*

# இந்திய அரசியலில் நேரு பரம்பரையின் வெளியுறவுக் கொள்கை ஓர் ஆய்வு

**வனஜா.ப., திருச்செந்தூரன்.சி.**
*அரசறிவியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.*

சர்வதேச அரசியல் வரலாற்றில் பரம்பரை அரசியல் என்பது பிரிக்க முடியாத ஒன்றாக இருந்து வருகின்றது. தெற்காசிய சமூகங்கள் மத்தியில் பரம்பரை அரசியல் ஆதிக்கம் ஆழமாக வேரூன்றி இருக்கிறது. அந்த வகையில் இலங்கையில் பண்டாரநாயக்கா குடும்பம் மற்றும் ராஜபக்ஷ குடும்பம் அமெரிக்காவில் கென்னடி குடும்பம், புஸ் குடும்பம் மற்றும் ரூஸ்வெல்ட் குடும்பம் பாகிஸ்தானில் பூட்டோவின் குடும்பம், பங்களாதேஷில் ஸேய்க் முஜிவுர் ரஹ்மானின் குடும்பம் போல இந்தியாவில் நேரு குடும்பம் இவ்வாறாக அரசியல் ஆதிக்க பரம்பரைகளின் பட்டியல் நீண்டு கொண்டே செல்கிறது. அந்த வகையில் இந்திய அரசியலில் நேரு பரம்பரையின் வெளியுறவுக் கொள்கையை இனங்காண்பதே இவ் ஆய்வு முயற்சியாகும். நேரு பரம்பரையினரில் பிரதமராகப் பதவியேற்ற ஜவஹர்லால் நேரு, இந்திராகாந்தி, ராஜீவ் காந்தி ஆகியோரின் தனித்தன்மை உடைய ஆற்றல் இந்தியாவுக்கு புதிய வடிவத்தையும் வண்ணத்தையும் கொடுத்துள்ளது. வெளியுறவுக் கொள்ளையின் தன்மையும் திண்மையும் பிரதமர்களின் ஆளுமை, ஆற்றலால் நெறிப்படுத்தப்பட்டுள்ளது. அந்த வகையில் இந்திய அரசியலில் நேரு, இந்திராகாந்தி, ராஜீவ்காந்தி ஆகியோரின் வகிபங்கு, பரம்பரை அரசியல் முன்னெடுத்த சர்வதேச உறவுகளின் போக்குகளை வெளிக்கொணர்தல், இந்திய அரசியலில் நேரு பரம்பரையின் வெளியுறவுக் கொள்கையை ஆராய்தல் நோக்கமாகின்றது. இவ் ஆய்வு வரலாற்று அணுகுமுறை, விபரணப் பகுப்பாய்வு அணுகுமுறை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டதாகும். பண்பு ரீதியாக தரவு சேகரிக்கப்பட்டு விபரண ரீதியாக விளக்கமளித்தலும் பகுப்பாய்வும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆய்வுக்குத் தேவையான தரவுகள் அனைத்தும் இரண்டாம் நிலைத் தரவுகளாக அமைந்துள்ளன. நேரு பரம்பரையின் அரசியல் செல்வாக்கானது சட்ட ஆக்கச் செயற்பாடுகள் தேசிய ஒருமைப்பாடு போன்றவற்றில் கொண்ட வகிபங்கு,அவர்களின் தலைமைத்துவ ஆற்றல் மற்றும் அவர்களுக்கான மக்களுடைய ஆதரவு போன்றவற்றால் இன்று வரை இந்திய அரசியலில் செல்வாக்குச் செலுத்தி வருவதற்கான காரணங்களை பகுப்பாய்வு செய்கின்றது.

**திறவுச்சொற்கள்:** *இந்திய அரசியல்; இந்திய தேசிய காங்கிரஸ்; கட்சித் தலைமைத்துவம்; பரம்பரை அரசியல்; வெளியுறவுக்கொள்கை*

# தொழிலாளர் உரிமைகளும் இலங்கையின் மலையக தோட்ட தொழிலாளர்களும்: ஒரு விமர்சன ரீதியான ஆய்வு

**நிஷா.ப., புஸ்பராசா.ந.**
*அரசறிவியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*

உலகிலேயே மனிதர்கள் மனிதர்களாகப் பிறந்த காரணத்தினால் அவர்களுக்கு கிடைத்த அடிப்படையானதும், விட்டுக்கொடுக்க முடியாததுமான உரிமைகளான மனித உரிமைகளில் முக்கியமானதொரு உரிமையாக தொழிலாளர் உரிமைகள் காணப்படுகின்றன. அதாவது தொழிலாளியினதும் தொழில் வழங்குனரினதும், தொழில்சார் உறவுகளை வடிவமைப்பதற்காக தொழிலாளர் உரிமைகள் தோற்றம் பெற்றன. உலகில் தொழிலாளர் உரிமை நிலைபெற்ற வரலாறு மிக நீண்டது. உலக நாடுகளிலே அவை நடைமுறைக்கு வந்த வரலாறும் நீண்டது. இலங்கையின் 1978ம் ஆம் ஆண்டு அரசியல் அமைப்பானது தனது மூன்றாம் அத்தியாயத்தின் 14ஆம் உறுப்புரைகளில் தொழிலாளர் உரிமைகளை ஏற்று உள்வாங்கியது. ஆனால் இலங்கையினுடைய ஓர் பிரதான தொழிற்படையானதும், நாட்டின் பொருளாதாரத்தில் சுமார் 60 வீத வருவாயினை அளித்துவரும் பெருந்தோட்டத் தொழிலாளர்களை பொறுத்தமட்டில் இவ்வுரிமைகள் வரையறைகளுக்கு உட்படுத்தப்பட்டு வருகிறது. ஆனால் இலங்கையினுடைய தேயிலை உற்பத்திக்கு இரு நூற்றாண்டு விழாவும் கொண்டாடப்பட்டுவிட்டது. எனினும் இவ்விரு நூற்றாண்டுகளாக பெருந்தோட்டத்துறையில் உழைத்து வரும் தொழிலாளர்களின் தொழில் வாழ்வில் எவ்விதமான மாற்றமோ, அபிவிருத்தியோ இன்றுவரை ஏற்படவில்லை. இவர்கள் தமது தொழிலுக்கான எந்தவொரு உரிமையையும் முற்றுமுழுதாக கிடைக்கப்பெறாத ஒரு சமூகமாக காணப்படுகின்றனர். இவ்வாறான உலகளவிலான தொழில் உரிமை தரப்படுத்தல்கள் முறையாக பேணப்படாமையினால் இவ்விருபத்தியோராம் நூற்றாண்டிலும் இத்தொழிலாளர்கள் தங்களது தொழில் வாழ்வில் அரசியல், சமூக, பொருளாதார ரீதியாக பல பாரபட்சங்களை எதிர்நோக்கி வருகின்றனர். உழைப்புகருதி தென்னிந்தியாவிலிருந்து இலங்கைக்கு வருகை தந்த காலம் தொட்டு இன்று வரை தங்களது தொழில் சார் நலன்களை அடைந்து கொள்ளும் நோக்குடன் குரல் கொடுத்து வருகின்றனர். அதற்கான பல போராட்டங்களையும் நடத்தி பல உயிர்த் தியாகங்களையும் செய்த ஒரு சமூகமாக காணப்படுகின்றனர். எனினும் இன்று வரை இதற்கான சிறந்த தீர்வு கிடைக்க பெறவில்லை. எனவே சர்வதேச தொழில் உரிமை தரப்படுத்தல்கள் இலங்கையின் மலையகத் தோட்டத் தொழிலில் எவ்வாறான வகையில் காணப்படுகின்றன என்பதை இனங்காண்பதே இவ்வாய்வு முயற்சியாகும் இவ்வாய்வுக் காண தரவுகள் பண்புசார் ஆய்வு முறை மூலம் இரண்டாம் நிலை தரவுகளினை கொண்டு சேகரிக்கப்பட்டவையாகும். குறிப்பாக ஐக்கிய நாடுகள் சபையின் பொருளாதார, சமூக மற்றும் பண்பாட்டு உரிமைகள் தொடர்பான சர்வதேச பொருத்தனை பற்றிய குறிப்புகள், இலங்கையின் தொழில் திணைக்கள வருடாந்த அறிக்கைகள், மலையகம் சார்பான ஆய்வு நூல்கள், மலையக பத்திரிக்கைகள் மற்றும் இணையத்தளங்களின் ஊடாக சேகரிக்கப்பட்டவையாகும். இவ்வாய்வினில் முதற்பகுதி தொழில் உரிமை பற்றிய அறிமுகத்தையும் உள்ளடக்கியுள்ளதுடன், சர்வதேச அளவிலான தொழில் சார் உரிமைகள் பற்றிய உள்வாங்கல்களையும் உள்ளடக்கியுள்ளதுடன் இலங்கையின் அரசியல் யாப்புகளில் தொழில் உரிமைகளின் உள்வாங்கப்பட்டுள்ள சரத்துகள் பற்றிய விளக்கம் அளிக்கப்பட்டுள்ளதுடன் மேலும் இவ்வாய்வினுடைய மற்றும் மலையகத் தோட்டத் தொழிலாளர்களது தொழில் வரலாற்றுதளம் தொடர்பான விளக்கங்கள் இடம் பெற்றுள்ளதுடன் மேலும் தோட்டத் தொழிலாளர்கள் எதிர்நோக்கும் தொழில் உரிமைகளின் நடைமுறை நிலை ஆய்வு செய்யப்பட்டுள்ளது. தொழிலுரிமை தொடர்பாக அவர்கள் முகங்கொடுக்கும் சவால்கள் ஆய்வு செய்யப்பட்டு அவற்றை நிவர்த்தி செய்து பெருந்தோட்ட தொழிலாளர்களின் தொழிலுரிமைகளை மேம்படுத்துவதற்கான வழிகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

**திறவுச்சொற்கள்:** *பெருந்தோட்ட தொழிலாளர்கள்; சர்வதேச சங்கம்; தொழிலாளர் உரிமைகள்; தொழிலுரிமை மீறல்; பெருந்தோட்ட துறை*

# மீள்குடியேற்றத்திற்கு பின்னரான சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்தியில் தெல்லிப்பளை பிரதேச செயலகத்தின் வகிபங்கு

**டிலக்ஷனா.கு., புஸ்பராசா.ந.**
*அரசறிவியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*

இனமுரண்பாடும் நீண்டகால யுத்தமும் மக்களது வாழ்வில் உள்நாட்டு இடப்பெயர்வுக்கும் அதன்வாயிலான பல்வேறு பிரச்சினைகளுக்கும் காரணமாயின. 2009ஆம் ஆண்டு இறுதி யுத்தத்துடனேயே இவ்விடப்பெயர்வுகள் ஓரளவு முடிவிற்கு வந்தன. இலங்கை அரசாங்கம் இடம்பெயர்ந்த மக்களது வாழ்வை முன்னேற்றகரமான பாதையில் கொண்டு செல்லும் வகையில் அவர்களது சொந்த நிலங்களில் குடியமர்த்தி அவர்களுக்கான அடிப்படை நலன்புரி நடவடிக்கை வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில் மீள்குடியேற்றம் கட்டங்கட்டமாக முன்னெடுத்து வருகின்றது. இதனடிப்படையில் வலிகாமம் வடக்கு பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட மாவிட்டபுரம் பிரதேச மக்கள் இடம்பெயர்ந்து இருபது ஆண்டுகளை கடந்த நிலையில் மீள்குடியமர்த்தப்பட்டனர். பிரதேச செயலகமானது இலங்கையின் நிர்வாக கட்டமைப்பில் முக்கியமான பொதுச்சேவை முகவராக செயற்பட்டு வருகின்றது. பொதுநிர்வாகம் என்பது அரசியல் மாற்றங்கள் பதற்றங்களுக்கு மத்தியிலும் பொது இலட்சியத்தை அடைவதற்காக மக்களையும் வளங்களையும் ஒன்றுதிரட்டி அரசியல் செல்வாக்கிற்கு உட்படாது மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளேயாகும். இதனடிப்படையில் யாழ்ப்பாணத்தில் அதிகம் மீள்குடியேற்றங்களை மேற்கொண்ட பிரதேச செயலகமாக தெல்லிப்பளை பிரதேச செயலகம் காணப்படுகின்றது. இதனால் மாவிட்டபுரம் பிரதேசத்தின் சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்திக்கு தெல்லிப்பளை பிரதேச செயலகம் எவ்வாறான செயற்பாடுகளை முன்வைக்கிறது என்பதையும், மேற்கொள்ளப்படும் திட்டமிடல் கொள்கை அமுலாக்கலில் உள்ள சவால்கள் பற்றியும் இவ்வாய்வு நோக்குகின்றது. குறித்த பிரதேசத்தில் மாவிட்டபுரம் கிராமமக்கள் இருபது வருடங்களின் பின்னர் மீள்குடியேற்றப்பட்டதால் அதிக சவால்களை எதிர்கொள்கின்றனர். இத்தகைய சூழ்நிலையில் குறித்த பிரதேசத்தின் சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்தி நிலையை அறிவது முக்கியத்துவம் பெறுகிறது. மேலும் இத்தரவுகளை தெளிவாக வெளிப்படுத்துவதற்காக பண்புரீதியான மற்றும் அளவுரீதியிலான முறைமைகள் பயன்படுத்தப்பட்டு கலப்பு ஆய்வுமுறைமை பயன்படுத்தப்பட்டுள்ளது. இதற்காக முதலாம் நிலைத்தரவு சேகரிக்கும் நுட்பமாக வினாக்கொத்து முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. எழுமாற்றாக மாவிட்டபுரம் பிரதேசத்தில் நூறு குடும்பங்கள் தெரிவுசெய்யப்பட்டு வினாக்கொத்துகள் பூரணப்படுத்தப்பட்டு தரவுகள் பெறப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. அத்துடன் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டிருந்த இவ்வாய்வுப் பிரதேசத்தில் சமூகரீதியாக உட்கட்டுமானங்கள், சமூகசேவைகள், சமூகவளங்கள் என்பனவும் பொருளாதார ரீதியாக வாழ்வாதார மேம்பாடு மற்றும் வறுமை ஒழிப்புத் திட்டங்கள் போன்றனவும் அட்டவணை, வரைபுகள் மூலமாகவும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. முடிவாக மீள்குடியேற்றத்தின் பின்னரான மாவிட்டபுரம் பிரதேச சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்தியில் தெல்லிப்பளை பிரதேச செயலகத்தின் வகிபங்கு திருப்திகரமாக காணப்படவில்லை எனவும் அதற்கான காரணங்களும் முன்வைக்கப்பட்டுள்ளன.

**திறவுச்சொற்கள்:** *அபிவிருத்தி; இடப்பெயர்வு; பிரதேசசெயலகம்; மாவிட்டபுரம்; மீள்குடியேற்றம்*

# இலங்கை இனப்பிரச்சினை தீர்வில் நிலைமாறுகால நீதியின் வகிபங்கு

**மகாசேனன்.ஐ.வி., திருச்செந்தூரன்.சி.**
*அரசறிவியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*

நிலைமாறுகால நீதியானது, மோதல்கள் மற்றும் சர்வாதிகார ஆட்சிகளுக்குப் பிறகு கடந்த காலத்தை கையாள்வதற்கான அணுகுமுறைகளுக்கான ஒரு பரந்த சொல்லாக உலகளாவிய முக்கியத்துவத்தைப் பெற்றுள்ளது. இலங்கையில் 2009ஆம் ஆண்டு ஆயுதப்போராட்டம் மௌனிக்கப்பட்டதன் பின்னர் கடந்த காலத்தை கையாள்வதனூடாக இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் பொறிமுறையாக நிலைமாறுகால நீதி ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் 2012-மார்ச் மாதம் தீர்மானம் ஒன்றினூடாக நிறைவேற்றப்பட்டது. எனினும், அன்றைய இலங்கை அரசாங்கம் அத்தீரமானங்களை ஏற்றுக்கொள்ளவில்லை. 2015ஆம் ஆண்டு ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தின் பின்னரே நிலைமாறுகால நீதிச்செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கான இணக்கத்தை இலங்கையின் அரசாங்கம் ஏற்றுக்கொண்டது. ஆயுதப்போராட்டம் மௌனிக்கப்பட்ட பின்னரான ஒரு தசாப்த கால அனுபவங்களை முதன்மையாக கொண்டு இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வில் நிலைமாறுகால நீதியின் வகிபங்கினை தேடலே ஆய்வுக்குரிய பிரதான நோக்கமாக உள்ளது. மேலும், நிலைமாறுகால நீதியை இலங்கையின் இனப்பிரச்சினைக்கான தீர்வாக சர்வதேச நாடுகள் நெறிப்படுத்தியுள்ள நிலையில் அவற்றின் ஈடுபாடு முழுமையாக இலங்கையின் இனப்பிரச்சினை தீர்வை மையப்படுத்தி நகர்த்தப்பட்டதா என்பதனையும் இவ்ஆய்வு உபநோக்கமாக கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. இவற்றை மையப்படுத்திய தரவுகளை இரண்டாம் நிலைத்தரவுகளாய் பெற்று பண்புசார் ஆய்வு முறையியலூடாக விபரணரீதியான பகுப்பாய்வாக இவ்வாய்வு அமைக்கப்பட்டுள்ளது. 2015ஆம் ஆண்டில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் தீர்மானங்களை ஏற்றுக்கொண்ட அரசாங்கத்தின் தலைவர்களும் உறுப்பினர்களுமே இலங்கையில் நிலைமாறுகால நீதியை தவிர்த்துச்செல்லும் பிரச்சாரத்தையே மேற்கொண்டனர். நிலைமாறுகால நீதி இலங்கை அரசாங்கத்தினை யுத்தக்குற்றவாளியாக பிரகடனப்படுத்துகிறது. யுத்தவெற்றியை இலங்கை தேசியத்தின் வெற்றியாகவும், அவ்வெற்றியில் பங்களித்தோரை இலங்கையின் தேசிய வீரர்களாகவும் இலங்கையின் பெருந்தேசிய மக்கள் கௌரவப்படுத்தி வருகின்றனர். இவ்வாறான பின்னணியில் தேசிய வீரர்களை யுத்தக்குற்றவாளியாக பிரகடனப்படுத்துவதை இலங்கையின் அரசாங்கங்கள் புறக்கணித்து செயற்படுவதே இயல்பாகின்றது. அதிலும் 2019ஆம் ஆண்டில், யுத்த வெற்றி வாதத்தில் பிறந்த பொதுஜன பெரமுன அரசாங்கம் ஆட்சி ஆதிகாரத்தை பெற்றுள்ளமை நிலைமாறுகால நீதியின் இருப்பு சவாலுக்கு உட்படுவதையே உறுதி செய்கிறது. 2015ஆம் ஆண்டுக்கு முன்னர் இலங்கையில் நிலைமாறுகால நீதி பொறிமுறையை அமுல்படுத்துவது தொடர்பில் இலங்கையில் எவ்வித இணக்கங்களும் முன்னேற்றகரமான சூழலும் காணப்படாவிடினும், இலங்கை தேசிய இனப்பிரச்சினை தீர்வுசார்ந்த உரையாடல் சர்வதேச வெளியில் உயிர்ப்புடன் காணப்பட்டது. எனினும் இலங்கையில் 2015ஆம் ஆண்டுக்கு பின்னர் ஏற்பட்ட ஆட்சி மாற்றமும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் தீர்மானங்களுக்கான இலங்கை அரசாங்கத்தின் இணக்கமும் இலங்கையின் தேசிய இனப்பிரச்சினை தீர்வுக்கான சர்வதேச உரையாடலை நீர்த்துப்போகச்செய்துள்ளது. சர்வதேசரீதியாக 2015-2019க்கு இடைப்பட்ட கால அணுகுமுறை அதற்கு முன்பான மற்றும் மற்றும் பின்பான காலங்களிலிருந்து பெரிய மாற்றத்தை அவதானிக்கக்கூடியதாக உள்ளது. எனவே, சர்வதேச நாடுகளின் நிலைப்பாட்டு மாற்றமானது மார்ச் 2012இல் இருந்து ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட போர்க்குற்றங்கள் தொடர்பான தீர்மானங்களின் பின்னணியில் உள்ள புவிசார் அரசியலை தெளிவாக எடுத்துக்காட்டுகிறது. இப்பின்னணி நிலைமாறுகால நீதியினையும் இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட தீர்வற்ற முயற்சிகளின் பட்டியலில் ஒன்றாக இணைக்கும் சூழலையே வெளிப்படுத்துகிறது.

**திறவுச்சொற்கள்:** *நிலைமாறுகால நீதி; பொறுப்புக்கூறல்; நல்லிணக்கம்; தேசிய இனப்பிரச்சினை; புவிசார் அரசியல்*

# ஐக்கிய அமெரிக்க அரசியலும் அமெரிக்க கறுப்பின மக்களும்: 1948 தொடக்கம் தற்காலம் வரை

**அருள் மாதவி.கோ., கணேசலிங்கம்.கே.ரீ.**
*அரசறிவியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*

பல்லின கலாசாரத்தைக் கொண்ட ஐக்கிய அமெரிக்காவில் முக்கிய இன பிரிவாக கறுப்பினமக்கள் காணப்படுகின்றனர். இவர்கள் 'ஆபிரிக்க அமெரிக்கர்கள்' எனவும் 'நீக்ரோக்கள்' எனவும் அழைக்கப்படுகின்றனர். இவர்கள் 1619 ஆம் ஆண்டில் முதன் முதலாக வேர்ஜினியாவிற்கு வர்த்தக நோக்கம் கருதி ஆபிரிக்க கண்டத்திலிருந்து அடிமைகளாக கொண்டுவரப்பட்டார்கள். இக்காலப்பகுதிகளில் ஐக்கிய அமெரிக்க எஜமானர்களின் அடிமையாக்கப்பட்ட கறுப்பர்கள் அவர்களது முதலாளித்துவ உழைப்பிற்கு வருமானத்தை ஈட்டிதரும் ஒர் இயந்திரமாகவே கறுப்பர்கள் கருதப்பட்டார்கள். 1860களில் அமெரிக்காவின் தென் மாநிலத்தவர்கள் வடமாநிலத்திலிருந்து பிரிந்து செல்வதற்கான போராட்டத்தை முன்னெடுத்த போது சுதந்திரம், சமத்துவம், மனித உரிமைகள் போன்ற எண்ணக்கருக்கள் வலுப்பெற்று கறுப்பின மக்களுக்கு எதிரான அநீதிகள் மிக பெரிய பேசுபொருளாக மாற்றம் கண்டது. அதனை அடுத்து படிப்படியாக பல வழிமுறைகள் ஊடாக கறுப்பின மக்களின் விடுதலையும் சுதந்திரமும் உறுதிப்படுத்தும் முயற்சிகள் நிகழ்த்தப்பட்ட போதிலும் அதன் தாக்கங்கள் இன்னமும் அமெரிக்க சமூகத்தில் ஊடுருவியுள்ளது. இதனை வெளிக்கொணரும் முகமாகவே இவ்வாய்வு முன்னெடுக்கப்பட்டுள்ளது. ஆய்விற்கான பிரதான நோக்கமாக 1948 தொடக்கம் தற்காலம் வரையில் கறுப்பின மக்கள் எதிர்கொள்ளும் அரசியல், சமூக மற்றும் பொருளாதார ரீதியிலான சவால்களானது இனங்காண்பதும் அது சார்ந்து ஏற்பட்டுள்ள பாரபட்சங்களை தெளிவுபடுத்துவதும் மட்டுமன்றி அத்தகைய கறுப்பின மக்களின் அடக்குமுறைக்கு எதிராக போராடிய அரசியல் தலைமைகளையும் உள்ளடக்கியதாக ஆய்வு வடிவமைக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் பலதரப்பட்ட சமூக பொருளாதார காரணிகளின் அடிப்படையில் புள்ளி விபர ரீதியான தரவுகளை முன்வைப்பதோடு வரலாற்று அணுகுமுறையூடாக ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது. இரண்டாம் நிலைத் தரவுகளை கொண்டு விபரரீதியான ஆய்வாக வடிவமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இவ்வாய்வின் மூலம் 21 ஆம் நூற்றாண்டிலும் கறுப்பினத்தவர்கள் ஐக்கிய அமெரிக்காவில் அடிமைகளாகவே பார்க்கப்படுகின்றார்கள் என்பதற்கான ஆதாரபூர்வமான முடிவுகள் முன்வைக்கப்படுகின்றன.

**திறவுச்சொற்கள்:** *கறுப்பின மக்கள்; ஐக்கிய அமெரிக்கா; விடுதலை; அடக்குமுறை; போராட்டம்*

# யுத்தத்திற்குப் பினனரான இலங்கை அரசின் பொறுப்புக்கூறலும் இன நல்லிணக்கமும்

**டனிசன்.கி., புஸ்பராசா.ந.**
*அரசறிவியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*

இலங்கையின் பல வருடகால இனமுரண்பாடானது 2009ஆம் ஆண்டு வரையும் நீடித்து பாரிய உள்நாட்டு யுத்தத்தோடு பல அழிவுகளையும் வடுக்களையும் கொடுத்தும் முடிவுறாத முரண்பாடாக காணப்படுவதுடன் அதன் பாதிப்புக்கள் இன்னும் ஐக்கியமான ஓர் இலங்கையை உருவாக்குவதில் நேர்மறையான தாக்கங்களை ஏற்படுத்துகிறது. பல்லின சமூகமான இலங்கையில் இனநல்லிணக்கம் என்பது முக்கியமான தேவையாக இன்றைய சூழலில் காணப்படுகிறது. உள்நாட்டு யுத்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களின் யுத்தத்திற்கு பின்னரான நிலைப்பாடு தொடர்பாக விளங்கிக் கொள்ளுதல் காலத்தின் கண்ணோட்டத்தில் அவசியமாகிறது. யுத்தத்தின் பின்னர் பாதுகாப்புடன் கூடிய நிலையான சமாதான சூழலை ஏற்படுத்துதல் தமிழர்களிடையே முக்கியமாக ஒரு தேவையாகக் காணப்பட்டாலும் தமிழ் மக்களிடம் யுத்தத்தினால் ஏற்படுத்தப்பட்ட வடுக்கள், துயரங்கள் மற்றும் மக்களின் பின் தங்கிய வாழ்க்கைத்தரமும் இலங்கை அரசின் பொறுப்புணர்வற்ற செயற்பாடுகளும், பாதிக்கப்பட்ட தரப்பினரின் அபிலாசைகள் எவையும் தீர்க்கப்படாமலும் காணப்படுகின்றமை பாரிய பிரச்சினைகளாக காணப்படுகிறது. அரசு நினைப்பது போல வெறுமனே அபிவிருத்தி செயற்பாடுகளால் இனநல்லிணக்கமும், தமிழர்களின் அபிலாசைகள் நிறைவேறும் என்பது வெறுமனே கற்பனையான ஒன்று. மாறாக அவர்கள் எதிர்பார்க்கும் செயற்பாடுகளை முனைப்பாக ஆராய்ந்து அதன்படி முன்னெடுக்கும் செயற்பாடுகளே இனஐக்கியத்தினை ஏற்படுத்தும். குறிப்பாக காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான நீதி,அரசியல் கைதிகளின் விடுதலை,கொல்லப்பட்ட மக்களிற்கான நீதி,பொதுமக்களின் காணிவிடுவிப்பு போன்ற செயற்பாடுகளை முன்னெடுப்பதுடன் நியாயமான நீதிப்பொறிமுறை ஒன்றின் மூலம் தமிழர்களுக்கான நீதியை வழங்கி அவர்களும் இந்நாட்டு பிரஜைகள் என்ற மனநிலை சிங்கள மக்களிடம் ஏற்படுத்தும் செயற்பாடுகளை முன்னெடுப்பதன் மூலமே இனநல்லிணக்கம் மதநல்லிணக்கம் என்ற வகையில் மீள்நல்லிணக்கம் ஏற்படுத்தும் பாரிய செயன்முறையாக காணப்படுகிறது. எனவே யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், மக்களின் மனங்களில் மாற்றங்களை ஏற்படுத்துதல், மக்களை பொறுப்புக் கூறலுடனான நல்லிணக்க செயன்முறைகளின் மூலமாக ஒன்றித்தல் போன்ற செயன் முறைகளையும் மேற்கொள்ளுதல் போன்றவற்றை அரசு முன்னெடுத்து வருவதுடன் சிவில் யுத்தத்திற்கு பின்னர் தமது அன்றாட வாழ்வில் தமிழ் மக்களின் அரசியல், பொருளாதார. சமூக, கலாசார, வாழ்க்கை நிலைகளையும் மற்றும் தேசிய இனங்களிற்கான நல்லிணக்கத்திற்கான செயன்முறைகளையும், தமிழ் மக்களிற்கான பொறுப்புக் கூறல் பொறிமுறைகளையும் யுத்தத்திற்கு பின்னரான சூழலில் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கை மையமாக கொண்டு இனங்காணுதலே இவ் ஆய்வின் பிரதான நோக்காகும். அத்தோடு இவ் ஆய்வானது பூர்த்தியாகுவதற்கு அவதானிப்பு முறை, நேர்காணல், குழுக்களிடையேயான கலந்துரையாடல்கள் போன்ற முதன்நிலைத் தரவுகளையும், முன்னைய ஆய்வுகள், சஞ்சிகைகள் , பத்திரிகைகள். இணையத்தளங்கள் போன்ற இரண்டாம் நிலைத் தரவுகளினையும் ஆதாரமாக கொண்டு தரவுகள் சேகரிக்கப்பட்டு விபரண பகுப்பாய்வு மூலமாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. யுத்தம் முடிவடைந்து பன்னிரண்டு வருடங்கள் கழிந்தும் தமிழ் மக்கள் இன்று வரையும் யுத்தத்தில் இழைக்கப்பட்ட அநீதிகளிற்கான நியாயமான நீதியையும், அதற்கான பொறுப்புக் கூறலையும், சிறந்த நல்லிணக்க முயற்சிகளையும் அரசு முன்னெடுக்காமல் காலவிரயம் செய்துவருகின்றமை பாரிய பிரச்சினைகளையும், இடர்பாடுகளையும் தமிழ் மக்கள் சந்திக்கின்றமையும் இவ் ஆய்வின் மூலம் புலப்படுகிறது.

**திறவுச்சொற்கள்**: *பொறுப்புக்கூறல்; இனநல்லிணக்கம்; யுத்தம்; தமிழ்மக்கள்; போர்க்குற்றம்*

# ஈஸ்டர் தாக்குதலும் இலங்கை முஸ்லிம்களின் அரசியல் பொருளாதார சமூக நிலையும்

**முஜிபா.ஜ., புஸ்பராசா.ந.**

*அரசறிவியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*

இலங்கை பல்லினக் கலாசாரம் கொண்ட நாடாகும். இங்கு காலத்துக்கு காலம் பல்வேறு காரணங்களை அடிப்படையாகக் கொண்டு இனங்களுக்கிடையில் இன முரண்பாடுகள் இடம்பெற்று வருவதனை அவதானிக்கலாம். அவ்வகையில் இலங்கையில் வாழும் சிறுபான்மையினர்களான முஸ்லிம்களுக்கும் பெரும்பான்மையினர்களான சிங்களவர்களுக்குமிடையிலான இன முரண்பாண்டை அதிகரித்த ஓர் சம்பவமாக 2019ம் ஆண்டு இடம்பெற்ற குண்டுவெடிப்புத்தாக்குதல் அமைந்தது குறிப்பிடத்தக்கது. இக்குண்டு வெடிப்பு ஈஸ்டர் தினத்தன்று தொடராக ஏழு இடங்களில் ஒன்பது தற்கொலை குண்டுதாரிகளால் மேற்கொள்ளப்பட்டது. இது 2009ம் ஆண்டு யுத்தத்தின் பின்னர் இலங்கை மக்களை பெரும் நெருக்கடியுள்ளாக்கிய வன்முறை சம்பவமாகக் காணப்படுகின்றது இத்தாக்குதலுக்கு பல்வேறுப்பட்ட காரணங்கள் குறிப்பிடப்பட்டாலும் இதற்கான உண்மையான காரணங்களை கண்டறிய முடியாதுள்ளது. மேலும் இத்தாக்குதலுடன் தொடர்புபட்டவர்கள் இலங்கையை சேர்ந்தவர்களாகவும் தேசிய தொளத் ஜமாத்தினரை சார்ந்தவர்களாக காணப்படுவதனால் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறை செயற்பாடுகள் கட்டவிழ்க்கப்பட்டதனை அவதானிக்கலாம்.இதனடிப்படையில் ஈஸ்டர் தாக்குதலும் இலங்கை முஸ்லிம்களின் அரசியல் பொருளாதார சமூக நிலையும் எனும் ஆய்வு பின்வரும் விடயங்களை ஆய்வுக்குட்படுத்துவதாக அமைகிறது. ஈஸ்டர் தாக்குதலின் பின் இஸ்லாமிய சமூகம் எதிர்கொண்ட அரசியல் சமூக மற்றும் பொருளாதார ரீதியான பிரச்சினைகள் பற்றியும் இதனூடாக அவர்கள் எதிர்கொண்ட உரிமை மீறல்கள் தொடர்பாகவும் அராய்வது இந்த ஆய்வின் நோக்கம். குறிப்பாக ஈஸ்டர் குண்டுவெடிப்புத் தாக்குதலின் பின்னர் முஸ்லிம் மக்களின் மீதான வன்முறைச் செயற்பாடுகள் கட்டவிழ்க்கப்பட்டன. இதன் அடிப்படையில் முஸ்லிம் மக்கள் எவ்வாறான அரசியல், பொருளாதார மற்றும் சமூக ரீதியான பாதிப்புக்களை அடைந்தனர் என்பதனை விரிவாக வெளிக்கொணர்வதே நோக்கமாகும். இவ்விடயங்களினூடாக மக்களின் உரிமைகள் தொடர்பாக விழிப்புணர்வூட்டுதல் மற்றும் சமூக நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான உபாயங்களையும் பதிவு செய்கிறது. பெரும்பான்மையினத்தவர்களுக்கும் முஸ்லிம்களுக்குமிடையே ஏற்கனவே முரண்பாடு காணப்பட்டிருந்தாலும் அதனை வலுப்படுத்தும் நிகழ்வாக ஈஸ்டர் தாக்குதல் அமைந்திருந்தது. அதனடிப்படையில் ஈஸ்டர் குண்டுவெடிப்புத் தாக்குதல் பற்றியும் அதற்கான காரணங்கள் பற்றியும் விரிவாக நோக்கப்பட்டு பெரும்பான்மையினத்தவர்களுக்கும் முஸ்லிம் மக்களுக்குமிடையிலான பிரச்சினைகள் பற்றியும் நுண்ணாய்வு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ்வாய்வு இரண்டாம் நிலைத்தரவுகளை அடிப்படையாகக் கொண்டு விபரண ரீதியாக மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. ஈஸ்டர் குண்டுவெடிப்பு முஸ்லிம் சமூகத்தின் ஒரு குறிப்பிட்ட நபர்களால் மேற்கொள்ளப்பட்டமையானது எவ்வாறு முழு முஸ்லிம் சமூகத்தில் தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது என்பதனை வெளிப்படுத்துவதாக இவ்வாய்வு அமைந்துள்ளது.

**திறவுச்சொற்கள்:** *ஈஸ்டர் தாக்குதல்; பயங்கரவாதம்; உரிமைகள்*

# ஆபிரிக்க தேசிய காங்கிரசும் நெல்சன் மண்டேலாவும்

**மதுரா.இ., அருந்தவராஜா.க.**
*வரலாற்றுத் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*

இருபதாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் இரண்டாம் உலகப்போர் முடிவுற்ற பிறகு ஆசிய, ஆபிரிக்க நாடுகள் விடுதலை வேட்கையை விரிவுபடுத்தி அந்நியர் ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெறத்துவங்கிய நேரத்தில் தென்னாபிரிக்கா வெள்ளையர் ஆட்சியில் இனவெறிக்குள்ளாகி காலனி ஆதிக்கத்தினால் உழன்று கொண்டிருந்தபோது கறுப்பினத்தவர்களின் சுதந்திரம், உரிமைகளைப் பெற்றுக்கொள்வதற்காக காலனி ஆதிக்கத்தை எதிர்த்து அகிம்சை மற்றும் ஆயுதம் மூலம் கறுப்பின மக்களின் உரிமைகளையும், உணர்வுகளையும் ஒன்றுபடுத்தி இனவெறியிலிருந்து ஆபிரிக்க மக்களுக்கு விடுதலை பெற்றுக்கொடுத்தவராக மண்டேலா விளங்குகிறார். பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் இனவாதமும் ஒடுக்குமுறையும் தென்னாபிரிக்காவில் அரசின் ஆதரவுடன் அரங்கேறுவதைக் கண்டுகொண்ட மண்டேலா, கறுப்பர்களின் நலனைப் பாதுகாப்பதற்காக அரசியலுக்குள் குதித்து ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் கட்சியில் இணைந்துகொண்டதுடன் இனவெறிபிடித்த வெள்ளையர் ஆட்சியை ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் கட்சியின் ஆதரவுடன் எதிர்த்துப் போராடினார். தென்னாபிரிக்காவில் 1912 ஜனவரி 8ஆம் திகதி இனவெறிக்கு எதிராக மிகப்பெரிய விடுதலை இயக்கமாக ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் ஆரம்பிக்கப்பட்டது. வெள்ளையர் ஆதிக்கத்திலே பழைய போராட்ட முறைகள் காலாவதியாகிவிடவே புதிய நிலைமைகளுக்கு பொருத்தமான புதிய போராட்ட முறைகளையும், புதிய ஸ்தாபன வடிவங்களையும் வகுப்பது வரலாற்று கட்டாயமாகக் காணப்படுவதுடன் வரலாறு விடுத்த அறைகூவலுக்கு ஆபிரிக்க மக்கள் கண்ட விடையே ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் ஆகும். 1948ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் ஆபிரிக்கர் தலைமையிலான தேசிய கட்சி வெற்றிபெற்ற பின்னர் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் கட்சியின் வளர்ச்சி மற்றும் நெல்சன் மண்டேலாவின் அரசியல் ஈடுபாடு தீவிரமடைந்தது. ஆபிரிக்க மக்களின் மனித உரிமைகளைப் பறிக்கும் பல கொடூர சட்டங்கள் வெள்ளையர்களால் இயற்றப்பட்டதுடன் அத்தகைய சட்டங்கள் இளைஞர்களை கொதித்தெழச் செய்தன. ஏறத்தாழ இருபது ஆண்டுகள் கொடூரமான சட்டங்களாலும், இனவெறி ஆட்சியாலும் துன்பத்தை அனுபவித்த ஆபிரிக்கர்கள் இளைஞர்கள் குழுவின் தலைவர்கள் மண்டேலா, சிசுலு, டாம்போ போன்றவர்களது முயற்சியினால் விடுதலைப் போரில் பங்குகொண்டதைக் காணமுடிகிறது. அறப்போர் மூலம் போராடி உரிமைகளைப் பெறமுடியாதென உணர்ந்த மண்டேலா ஆயுத வழிமுறையை நாடவே கைதுசெய்யப்பட்டார். மண்டேலாவின் இருபத்தேழு ஆண்டு சிறைவாசம் நிறவெறிக் கொடுமையின் விடுதலைக்கு பிறகு அமைதியான முறையில் புதிய தென்னாபிரிக்க குடியரசு மலர்ந்ததுடன் தொடர்ந்து கறுப்பின மக்களது வாழ்வில் அரசியல், பொருளாதாரம், சமூக ரீதியாக மாற்றங்கள் மற்றும் முன்னேற்றங்கள் ஏற்பட்டுக்கொண்டன. முழக்க முழுக்க வரலாற்று அணுகுமுறையினடிப்படையில் விமர்சன ஆய்வாக அமையப் பெற்ற இவ்வாய்வில் இரண்டாம் நிலை ஆதாரங்கள் ஆய்வின் தேவை கருதி பயன்படுத்தப்பட்டுள்ளன. தென்னாபிரிக்காவின் விடுதலையில் மண்டேலாவினதும் தேசிய காரங்கிரசின் நடவடிக்கைகளையும் விரிவாக ஆராய்வதே ஆய்வினது பிரதான நோக்கமாக உள்ளது.

**திறவுச்சொற்கள்:** *ஆபிரிக்க தேசிய காங்கிரஸ்; கறுப்பினத்தவர்கள்; நெல்சன் மண்டேலா; இனப் போராட்டம்*

# இலங்கையின் அரசியல் திட்டங்களில் மனித உரிமைகள் பற்றிய ஏற்பாடுகள்

**மிதுலா.இ., அருந்தவராஜா.க.**
*வரலாற்றுத் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*

இலங்கையை பொறுத்தவரையில் மனித உரிமைகள் பற்றிய எண்ணக்கருவானது இருபதாம் நூற்றாண்டிலேயே சட்டரீதியான உத்தரவாதத்தினைப் பெற்றுக் கொண்டது. சுதந்திரத்திற்கு பின்னர் இலங்கையரசானது முதலாம், இரண்டாம் குடியரசு யாப்புக்களில் மனித உரிமைகளை அடிப்படை உரிமைகள் என்னும் தலைப்பில் தனி அத்தியாயமாக உட்சேர்த்திருந்தது. 1978ஆம் ஆண்டு இரண்டாம் குடியரசு யாப்பில் உட்சேர்க்கப்பட்ட அடிப்படை உரிமைகள் குறிப்பிட்டளவு மேம்படுத்தப்பட்டதுடன், பாதுகாப்பு ஏற்பாடுகளும் உறுதிப்படுத்தப்பட்டிருப்பதுடன் இலங்கையர் மட்டுமன்றி இலங்கையர் அல்லாதவர்களும் அவ்வுரிமைகளை அனுபவிப்பதற்கு வாய்ப்பினை உருவாக்கிக் கொடுத்திருந்தது. எனினும் இலங்கையில் நிலவும் பன்முகத்தன்மைக்குரியவாறு அவ்வடிப்படை உரிமைகள் யாப்பில் உள்ளடக்கப்படவில்லை. அத்துடன் சிறுபான்மையினருக்கு இவ்மனித உரிமைகள் போதிய பாதுகாப்பினை வழங்கவில்லை. நடைமுறையில் இருந்ததும் இருக்கின்றதுமான அவசரகாலச் சட்டம் மற்றும் பயங்கரவாதச் சட்டம் ஆகியவற்றினாலும், உள்நாட்டு இன ரீதியான முரண்பாடுகளினாலும் இவ்வடிப்படை உரிமைகள் இலங்கையர் அனைவருக்கும் குறிப்பாக சிறுபான்மை சமூகத்திற்கு போதிய பாதுகாப்பினை வழங்கவில்லை. இலங்கையில் 1972ஆம் ஆண்டு முதலாம் குடியரசு அரசியல் திட்டம், 1978ஆம் ஆண்டு இரண்டாம் குடியரசு அரசியல் திட்டங்களில் மனித உரிமைகள் கோட்பாடு ரீதியாக ஒரு சிறந்த விடயமாக ஏற்று அங்கீகரிக்கப்பட்டுள்ள போதிலும் அது நடைமுறையில் சிறுபான்மையினருக்கு பாதுகாப்பானதாக அமையவில்லை என்பதுடன் அதன் நடைமுறையாக்கம் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொள்கின்றது. இதனால் இலங்கையின் அரசியல் திட்டங்களில் மனித உரிமைகள் பற்றிய ஏற்பாடுகள் இலங்கையர் அனைவருக்கும் சமமாக அமையவில்லை. இலங்கையின் அரசியல் திட்டங்களில் மனித உரிமைகள் பன்மைத்துவ கட்டமைப்புடன் கூடிய அனைவரும் அனுபவிக்க கூடியளவு போதுமான தெளிவுடனும், சுயாதீன ஆணைக்குழுக்களை உள்ளடக்கியவாறும் அரசியல் திட்டம் விரிவுபடுத்தப்பட வேண்டும் என பரிந்துரைக்கப்படுகின்றது. இதன் மூலம் இலங்கையர் அனைவருக்கும் சம சந்தர்ப்பம், சம வாய்ப்புடன் வாழும் நிலை உருவாகும். இவ்வாய்வானது இலங்கையின் அரசியல் திட்டங்களில் மனித உரிமைகள் எவ்வாறாக பாதுகாக்கப்பட்டுள்ளது? என்பதனை அறியும் பிரதான நோக்குடன் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆய்விற்கான தரவுகளும் தகவல்களும் முதல் நிலை மற்றும் இரண்டாம் நிலை தரவு முறைகளுடாக சேகரிக்கப்பட்டது. முதன்நிலைத் தரவுகள் அவதானிப்புக்கள், கலந்துரையாடல் மூலமும் இரண்டாம் நிலை தரவுகள் நூல்கள், சஞ்சிகைகள், கட்டுரைகள், பத்திரிகைகள், இணையச் செய்திகள் மூலமும் பெறப்பட்டன. இம்முறைகளினூடாக பெறப்பட்ட தரவுகள் வரலாற்று அணுகுமுறையில் அமைந்த விமர்சன அணுகுமுறை மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டு முடிவுகள் பெறப்பட்டன.

**திறவுச்சொற்கள்:** *அரசியல் திட்டம்; சிறுபான்மை இனம்; பன்மைச்சமூகம்; மனித உரிமைகள்; யாப்பு வாதம்*

# இலங்கைப் பாராளுமன்றத் தேர்தல் 2020 ஒரு பார்வை

**தயானி.ம., அருந்தவராஜா.க.**
*வரலாற்றுத் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*

இலங்கையின் பாராளுமன்றமானது காலத்துக்கு காலம் பல்வேறு தேர்தல்களை சந்தித்துள்ளது. மக்களின் பிரதிநிதிகளை மக்கள் மூலம் தெரிவு செய்து அவர்களின் எண்ணங்கள், கருத்துக்களை பாராளுமன்றத்துக்கு எடுத்துச்சென்று அரசாங்கத்துக்குத் தெரியப்படுத்தும் தேர்தல் களமாவே பாராளுமன்றத்தேர்தல் அமைவதுடன் மக்களை ஆட்சி செய்யப்போகும் அரசு எதுவென்பதையும் இத்தேர்தல் தீர்மானிக்கின்றது. இலங்கையில் இதுவரை பதினைந்து பாராளுமன்றத்தேர்தல்கள் இடம்பெற்றாலும் அரசியல் மற்றும் வரலாற்று ரீதியில் திருப்பத்தை ஏற்படுத்திய தேர்தல் களமாக 2020ஆம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்றத்தேர்தல் அமைந்து காணப்படுகின்றது. இதனடிப்படையில் 2020ஆம் ஆண்டு இலங்கையில் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலானது பல்வேறு வகையிலும் முக்கியத்துவத்தைப் பெற்ற ஒரு தேர்தல் களமாக விளங்குகின்றது. ஆளும்கட்சி இம்முறை தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வெற்றி பெற்று சிறுபான்மையினரின் ஆதரவின்றி ஆட்சியமைத்ததென்பது அரசியல் வரலாற்றில் இதுவே முதற்தடவையாகும். அத்துடன் குடும்ப அரசியலை மறுபடியும் அரங்கேற்றுவதற்கும் காரணமாக அமைந்தது. இப்பாராளுமன்றத் தேர்தலானது மத்தியில் ஆட்சி முறையை மாற்றியமைத்தது மட்டுமன்றி வடக்கு, கிழக்கில் அதுவரை காலமும் செல்வாக்குப் பெற்றிருந்த தமிழரசுக்கட்சியின் செல்வாக்கினை குறைவடையச் செய்ததுடன் கிழக்கில் முஸ்லீம் காங்கிரஸ் கட்சியின் வீழ்ச்சியினையும் பதிவு செய்த தேர்தல் களமாகவும் 2020ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தல் கொள்ளப்படுவதுடன் ஐக்கிய தேசியக்கட்சி இலங்கை அரசியல் வரலாற்றில் மிகப்பெரும் தோல்வியை இத்தேர்தல் ஏற்படுத்திக் கொடுத்ததென்பதும் மறுக்கமுடியாத உண்மை. தமிழ்ப்பிரதிநிதிகளின் தமிழ்மக்கள் சார்ந்த கொள்கைக்கும் அவர்களின் இலட்சியம் சார்ந்த கொள்கைக்கும் கடும்போக்கு சிங்கள பௌத்த வாதத்தினால் ராஜபக்ஷாக்களுக்கு கிடைத்துள்ள பெரும்பான்மை பலம் எத்தகைய பதிலடியை எதிர்காலத்தில் கொடுக்கப் போகின்றதென்பது பாரிய சவாலாகும். வரலாற்று மற்றும் ஒப்பீட்டு அணுகுமுறையிலமைந்துள்ள குறித்த இவ்வாய்வானது முதன்நிலை மற்றும் இரண்டாம்நிலைச் சான்றுகளான நூல்கள், கட்டுரைகள், பத்திரிகைகள், இணையச்செய்திகள் என்பவற்றின் உதவியுடன் ஆராயப்படுகின்றது. இலங்கையில் 2020ஆம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலானது பலவழிகளிலும் இலங்கை அரசியலில் தாக்கத்தைச் செலுத்தியதன் பின்னணியில் அத்தேர்தலின் உண்மைத்தன்மை விடயங்களையும், முக்கியத்துவத்தினையும் ஆவணப்படுத்துவது இவ்வாய்வின் பிரதான நோக்கமாக அமைகின்றது.

**திறவுச்சொற்கள்:** *பாராளுமன்றம்; யாப்பு வளர்ச்சி; தேர்தல் முறைகள்; கட்சி முறைகள்*

# உள்நாட்டு யுத்தத்திற்குப் பிற்பட்டகால இலங்கை-சீன உறவு

**வினுஜா.த., அருந்தவராஜா.க.**
*வரலாற்றுத் துறை, யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்*

இலங்கை சுதந்திரமடைந்த காலத்திலிருந்து சீனாவுடன் சமாதானசக வாழ்வுத்தத்துவத்தின் அடிப்படையில் பரஸ்பர உறவினை வளர்த்துவந்தாலும், 1957ஆம் ஆண்டிலிருந்து இராஜதந்திர உறவினையும் சேர்த்து வளர்த்துவருகின்றது. குறிப்பாக இறப்பர்–அரிசி உடன்படிக்கையுடன் ஆரம்பிக்கப்பட்ட இராஜதந்திர உறவானது இற்றைவரை நீடித்து வருகின்றமையினைக் காணக்கூடியதாகவுள்ளது. பயங்கரவாதம், பிரிவினைவாதம் தீவிரவாதம் ஆகியவற்றை இல்லாதொழிப்பதற்காக 2007ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திலிருந்து சீனா இலங்கைக்கு இராணுவ ஆலோசனைகளையும் ஆயுத உதவிகளையும் வழங்கியது. 2007ஆம் ஆண்டு இராஜதந்திர உறவின் நெருக்கத்தினை வெளிப்படுத்தும் வகையில் சீனா–இலங்கை நட்புறவின் 50ஆவது ஆண்டு நிறைவுவிழா அமைந்தது. இதனைவிடவும் 30வருடங்களாக நடைபெற்ற உள்நாட்டுயுத்தத்தில் 2009ஆம் ஆண்டு இலங்கை வெற்றிபெறுவதற்குச் சர்வதேசநாடுகளுடன் இணைந்து சீனா மேலும் பல உதவிகளை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. இந்துசமுத்திரப் போக்குவரத்துப்பாதையில் புலிகளால் தனக்கிருக்கும் அச்சுறுத்தலையும் தடைகளையும் அகற்றுவதற்கு இலங்கையுடன் இராணுவரீதியில் கைகோர்க்க சீனா விரும்பியது. வரையறையற்றுக்கிடைத்த சீனாவின் இராணுவ உதவியினால் யுத்தத்தினை வெல்லமுடியும் என்ற பெரு நம்பிக்கையினை இலங்கைக்கு ஏற்படுத்திக்கொடுத்தது. அதேவேளை சீனாவிடமிருந்து கிடைக்கப்பெற்ற ஆயுத உதவியானது 2009 இறுதி யுத்தத்தில் இலங்கை வெற்றிபெறுவதற்கு பெரும் உதவியாக இருந்தது. இதனைத்தொடர்ந்து இலங்கையின் தேசக்கட்டுமானத்திற்காக குறைந்த வட்டியிலான நீண்டகாலக் கடன்கள் மற்றும் முதலீடுகளை இலங்கைக்குச் சீனா வழங்கிவருகின்றது. குறிப்பாக ஆட்சிமாற்றத்திற்கேற்ப இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையில் மாற்றங்கள் ஏற்பட்டு வந்தாலும் கூட சீனாவின் உறவானது இலங்கைக்கு விலக்கி வைக்கமுடியாததொன்றாகவே காணப்படுகின்றது. அதேவேளை சீனாவின் முத்து மாலைத்திட்டத்திற்கும் இலங்கையின் உறவானது சீனாவிற்கும் தவிர்க்கமுடியாததொன்றாகக் காணப்படுகின்றது. இதன் காரணமாக இலங்கையின் அரசியலிலும் சரி பொருளாதாரவர்த்தகத்திலும் சரி தனக்கானதொரு இடத்தினைப் பிடிப்பதற்கு சீனா முயன்று வருவதனை காணக்கூடியதாகவுள்ளது. எனவே இரு நாடுகளும் தமது சுய நோக்கத்திற்காக நெருக்கமானதொரு உறவினைப் பேணிவருகின்றமையினை அவதானிக்கமுடிகின்றது. இத்தகைய இருநாட்டு உறவினாலும் சாதகமான விடயங்கள் பல இடம்பெற்றாலும் உள்நாட்டளவிலும் சர்வதேச அளவிலும் பாரிய சவால்களை இலங்கை எதிர்கொண்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. வரலாற்றுஅணுகுமுறையிலமைந்த விமர்சன ரீதியிலான ஆய்வாக அமையும். இவ்வாய்வில் முதன்நிலைத் தரவாக நேர்காணலும் இரண்டாம் நிலைத்தரவுகளாக நூல்கள், சஞ்சிகைகள், முன்னைய ஆய்வுகள், பத்திரிகைகள், இணையச் செய்திகள் என்பனவும் பயன்டுத்தப்பட்டுள்ளன.

**திறவுச்சொற்கள்:** *இலங்கை; இராஜதந்திரம்; சீனா; யுத்தம்; வெளிநாட்டுக்கொள்கை*

# இலங்கையின் இனப்பிரச்சினையில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் வகிபாகம்

**கஜனா. க., அருந்தவராஜா.க**

*வரலாற்றுத் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*

இனப்பிரச்சினை என்பது இலங்கைத்தீவு முழுவதையும் சிங்கள–பௌத்த தீவாக மாற்ற வேண்டும் என்ற நோக்கத்தோடு சிங்கள ஆட்சியாளர்கள் நடந்து கொள்வதால் சிங்கள மற்றும் தமிழ், முஸ்லிம் தரப்புக்களுக்கிடையிலே ஏற்படும் முரண்பாடுகளாகும். இலங்கையானது சுதந்திரமடைவதற்கு முன்பிருந்தே தமிழர், சிங்களவர் தொடர்பான இன முரண்பாடுகள் காணப்பட்டபோதும்கூட இலங்கை சுதந்திரமடைந்த காலப்பகுதி முதல் அது முன் எப்போதும் இல்லாத வகையில் கூர்மையடைந்து வருவதை அவதானிக்க முடிகிறது. இதற்கு பிரிவினைவாத அரசியலின் செல்வாக்கு, சிங்கள–பௌத்த இனவாதத்தின் எழுச்சி, தமிழ் அரசியல் கட்சிகளின் செயற்பாடுகள், இலங்கைத்தமிழர் அரசியல் பிரதிநிதித்துவத்தை பாதுகாக்க மேற்கொண்ட போராட்டங்கள், தனியான தமிழீழ அரசை நிறுவுவதற்கான போராட்டங்கள், பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் தமிழ்–சிங்கள தலைவர்களுக்கிடையில் ஏற்பட்ட அரசியல் ஒத்திசைவின்மை முதலான காரணங்கள் பின்னணியாக அமைந்தன. 1956ஆம் ஆண்டு S.W.R.D பண்டாரநாயக்கா அவர்களால் உருவாக் கப்பட்ட தனிச்சிங்களச் சட்டமானது இலங்கையில் காணப்பட்ட இன ஒற்றுமையை சீர்குலைத்தது. இதன் பின்னர் இலங்கையின் சிங்கள அரசை தமிழர்கள் நேரடியாகவும், மறைமுகமாகவும் எதிர்க்கும் போக்கு காணப்பட்டது. இதனால் இலங்கையில் இனக்கலவரங்கள் வலுப்பெறத் தொடங் கின. அந்தவகையில் இலங்கையின் வரலாற்றில் பண்டாரநாயக்காவினால் உருவாக் கப்பட்ட முக்கியமான அரசியல் கட்சிகளிலொன்றாகக் காணப்படும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி இலங்கையிலே இனப்பிரச்சினையைத் தூண்டியதோடு மட்டுமன்றி இனப்பிரச்சினையைத் தீர்க்கும் நடவடிக்கைகளையும் மேற்கொண்ட வகையில் சிறப்பிடம் பெறுகின்றது. பண்டாரநாயக்காவின் காலத்தில் அவரால் ஸ்தாபிக்கப்பட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தொடர்ந்து ஸ்ரீமாவோ பண்டார நாயக்கா, சந்திரிக்கா பண்டாரநாயக்கா குமாரதுங்கா மற்றும் மைத்திரிபால சிறிசேனா காலங்களில் இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சியில் ஈடுபட்ட போதும்கூட அவை இதய சுத்தியுடன் மேற் கொள்ளப்படவில்லையென்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாய்வானது ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தோற்றமும் வளர்ச்சியும் பலமும் பெற்றுக்கொண்ட காலத்திலே இனப்பிரச்சினையை இலங்கை யிலே தூண்டிய காரணங்கள் என்ன? இலங்கையில் காணப்படும் சிங்களஅரசியல் கட்சிகள் இனப்பிரச்சினையைத் தீர்க்க மேற்கொண்ட தீர்வுமுயற்சிகள் யாவை? ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி இலங்கையில் இனப்பிரச்சினையைத் தீர்க்க மேற்கொண்ட முயற்சிகள் எத்தகையது? அத்தகைய முயற்சிகள் வெற்றிபெற்றனவா? இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வில் இந்தியாவின் பங்களிப்பு எத்தகையன? சர்வதேசங்களின் உதவியை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி இனப்பிரச் சினைக்கான தீர்வு முயற்சியில் நாடுகிறதா? என்ற விடயங்களை ஆராயும் நோக்கில் அமைந் துள்ளது. வரலாற்று அணுகுமுறையிலமைந்த விமர்சனரீதியான ஆய்வாக காணப்படும் இவ் ஆய்வுக்குத் தேவையான தரவுகளில் முதல் நிலைத்தரவுகளாக நேர்காணல், கலந்துரையாடல், பாராளுமன்ற அறிக்கைகள் என்பனவும் இரண்டாம் நிலைத்தரவுகளாக நூல்கள், சஞ்சிகைகள், இணையத்தள தரவுகள் என்பனவும் பெறப்பட்டள்ளமை குறிப்பிடத்தக்கது.

**திறவுச்சொற்கள்:** *இனப்பிரச்சனை; ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி; காலனித்துவ ஆட்சி; இனவாதம்*

# இலங்கைப் பாராளுமன்ற அரசியலில் தமிழ்ப் பெண்கள்: சுதந்திரத்திற்குப் பின்னரான காலத்தை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஆய்வு.

**கார்த்திகா.பா., அருந்தவராஜா.கா**

*வரலாற்றுத் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*

நாட்டின் ஜனநாயகத்தை உறுதிப்படுத்துவதில் தேர்தல்கள் இன்றியமையாததாகக் காணப்படுகின்றன. இலங்கையில் பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதில் ஜனாதிபதித் தேர்தல், பாராளுமன்றத் தேர்தல், மாகாணசபைத் தேர்தல் மற்றும் உள்ளூராட்சிமன்றத் தேர்தல் என நான்கு முறைகள் காணப்படுகின்றன. இத்தகைய ஜனநாயகத் தேர்தல் முறையானது டொனமூர் காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தபோதும் கூட ஜனநாயகத்திற்கான அத்திவாரம் கோல்புறூக்–கமரன் திட்டத்தில் கொண்டுவரப்பட்ட சட்டவாக்கக் கழகமே என்பதனை மறுப்பதற்கில்லை. இத்தகைய சட்டவாக்கக் கழகத்திலிருந்தே பெண்களின் பிரதிநிதித்துவமானது படிப்படியாக ஏற்பட்டு வருகின்றது. இருந்தபோதும் இலங்கையின் மொத்த சனத்தொகையில் பெண்களது எண்ணிக்கையுடன் ஒப்பிடுகின்றபோது இது மிகவும் குறைந்த அளவே. இலங்கையில் பெண்களின் சனத்தொகை 52% அதிகமாக காணப்படுகின்ற போதிலும் பாராளுமன்றப் பிரதிநிதித்துவத் தெரிவில் பெண்களின் எண்ணிக்கை குறைவாகவே காணப்படுகின்றது. மொத்த பிரதிநிதிகளின் விகிதாசார அடிப்படையில் பெண் பிரதிநிதிகளின் விகிதாசாரமானது 6% குறைவாகவே இன்றுவரை காணப்படுகின்றது. குறிப்பாக சிறுபான்மை இனப்பெண்களின் பிரதிநிதித்துவம் மிகவும் கீழ்மட்டத்தில் உள்ளது. இறுதியாக 2020ஆம் ஆண்டில் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் எந்தவொரு தமிழ், முஸ்லிம் பெண்களும் வெற்றி பெறவில்லை. தமிழ், முஸ்லிம் பெண்கள் கல்வி ரீதியாக வளர்ச்சியடைந்திருந்தாலும் அரசியல் பங்குபற்றுதலில் ஆர்வம் குறைவாக காணப்படுகின்றது. இதனை ஆய்வுப் பிரச்சினையாகக் கொண்டு இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. தமிழ்ப்பெண்களின் அரசியல் ஈடுபாடு குறைந்து செல்வதற்கான காரணங்களைக் கண்டறிவதையும், தமிழ்ப் பெண்களின் பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தின் அவசியத்தை அறிவதையும், அவர்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்க மேற்கொள்ள வேண்டிய வேலைத்திட்டங்கள் பற்றி ஆராய்வதனையும் நோக்கமாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வு தமிழ்ப் பாராளுமன்றப் பெண்பிரதிநிதிகளை அடிப்படையாகக் கொண்டு முதலாம் மற்றும் இரண்டாம் நிலைத்தரவு சேகரிப்பு முறைகளை பயன்படுத்தி வரலாற்று மற்றும்,விமர்சன ஆய்வு முறைகளை அடிப்படையாக கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்கான முதல்நிலைத்தரவுகளாக நேர்காணல், பாராளுமன்ற அறிக்கை என்பனவும் இரண்டாம் நிலைத்தரவுகளாக நூல்கள், சஞ்சிகைகள், இணையத்தள கட்டுரைகள் என்பனவும் பயன்படுத்தப்பட்டன. இவ்வாய்வானது தமிழ்ப்பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதற்கான ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் முன்வைப்பதாகவும் எதிர்காலத்தில் இவ்வாறான ஆய்வுகளை மேற்கொள்ளும் போது வழிகாட்டியாகவும் அமையும்.

**திறவுச்சொற்கள்:** *அரசியல்; பிரதிநிதித்துவம்; பெண்கள்; தமிழ்ப் பெண்கள்; சிறுபான்மையினம்*

# Environment,Economy, Planning and Development

# Determinants of Paddy Production Special Reference Study within Maritimepattu Divisional Secretariat in Mullaitivu District

**Kowsiya.V., Kamalakumari.K.**
*Department of Economics, University of Jaffna*

As rice is the stable food of Sri Lanka and provides about half of the daily calorie requirement, every successful government has given the first priority for self-sufficiency in paddy production for food security at the national level. The main objective of this study is to investigate the key factors that affect paddy production in the Maritimepattu Divisional Secretariat in Mullaitivu District. This survey spans the crop year Maha 2018 to Maha 2019 and data was gathered through questionnaires. The data sample consists of 100 farmers selected through random sampling method. To achieve the main objective, a multiple regression model was created based on Cobb – Douglas production function. The variables were estimated in this model using Ordinary Least Squared technique. The data is analyzed using STATA 16.0 statistical software. In this research, paddy production is the dependent variable and land size, capital, labour, years of experience, fertilizer, gender, house hold size, herbicide, age, education level are independent variables. The results show that land size, age, fertilizer and gender have a significant and positive impact on paddy production. Further the results show that experience and access to resources are the main factors that contribute to continued paddy cultivation in this area. This study concludes that economic and social factors have a strong influence on paddy production in this area. Therefore, it is recommended that by improving the relevant economic and social factors, paddy production can be developed and sustained.

**Keywords:** *Cobb-Douglas Production Function; Paddy production; Economic factors; Social factors*

# திருகோணமலை மாவட்ட பட்டினமும் சூழலும் பிரதேசசெயலகப் பிரிவின் கரையோர வலய முகாமைத்துவம்

**சோபிகா.ச., சுபாஜினி.உ**
*புவியியல்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*

இலங்கையில் நீண்ட கரையோரங்களைக் கொண்ட மாவட்டங்களுள் திருகோணமலையும் ஒன்றாகும். திருகோணமலை மாவட்டத்தின் பட்டினமும் சூழலும் பிரதேச செயலகப் பகுதியினுள் வரும் கயோர வலயமானது அதிக வளங்களை கொண்டு சமூக பொருளாதார ரீதியில் முக்கியத்துவம் பெற்றுக் காணப்படுகின்ற போதிலும் இயற்கை மற்றும் மானுட நடவடிக்கைகள் இக் கரையோர வலயத்தின் அச்சுறுத்தலுக்கு காரணமாகின்றன. இவ்வாறானதொரு நிலைமை தொடர்ச்சியாக காணப்படுமானால் குறித்த கரையோர வலயம் அதன் முக்கியத்துவத்தையும் தனித்துவத்தையும் இழக்க நேரிடுவதுடன் சூழல் சமூக மற்றும் பொருளாதார ரீதியான பிரச்சினைகளையும் எதிர்கொள்ள வேண்டி ஏற்படும். கரையோர முகாமைத்துவம் தொடர்பான நடவடிக்கைகள் இக் கரையோர வலயத்தில் முன்னெடுக்கப்படுகின்ற போதிலும் அவற்றில் உள்ள குறைபாடுகள் காரணமாக நீண்டகால பயன்பாட்டை கொண்டனவாகக் காணப்படவில்லை. கரையோர வலயம் இவ்வாறு தொடர்ச்சியாக சீர்குலைந்து வருவதனால் ஒழுங்கான முகாமைத்துவச் செயன்முறைகளை திட்டமிட வேண்டிய அவசியம் உணரப்பட்டுள்ளது. அந்த வகையில் இவ் ஆய்வானது திருகோணமலை மாவட்ட பட்டினமும் சூழலும் பிரதேச செயலகப் பிரிவின் கரையோர வலய முகாமைத்துவம் எனும் தலைப்பில் முன்னெடுக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் கரையோர மாசாக்கத்துக்கான காரணங்களை கண்டறிதல், கரையோர அரிப்பினால் ஏற்பட்டுள்ள மாற்றங் களை படமாக்குதல், கரையோரப் பாதிப்புக்களை குறைப்பதற்கு பொருத்தமான முகாமைத்துவ நடவடிக்கைகளை முன்வைத்தல் என்பன ஆய்வின் நோக்கங்களாக அமைந்துள்ளன. இவ் ஆய்வின் முதலாம் நிலைத் தரவுகள், குறித்த பகுதியில் மேற்கொண்ட நேரடி அவதானம், கலந்துரையாடல், வினாக்கொத்து என்பவற்றினூடாக பெறப்பட்டன. இவ்வாறு பெறப்பட்ட தரவுகள் புள்ளிவிபர பகுப்பாய்வு மற்றும் GIS பகுப்பாய்வுக்கு உட்படுத்தி முடிவுகள் பெறப்பட்டுள்ளன. ஆய்வின் முடிவுகளாக பட்டினமும் சூழலும் பிரதேச கரையோர வலயம் தொடர்பான பிரச்சினைகள் மற்றும் முகாமைத்துவத்தின் தற்போதய நிலைகளும் அதனால் ஏற்பட்டுள்ள கரையோரம் சார் பாதிப்புக்களும் உறுதிசெய்யப்பட்டு பாதிப்புக்களை குறைப்பதற்காக, வினைத்திறனான முகாமைத்துவ நடவடிக்கைகள் பரிந்துரைகளாக முன்வைக்கப்பட்டுள்ளன.

**திறவுச்சொற்கள்:** *கரையோர வலயம்; கரையோர வலய முகாமைத்துவம்; பட்டினமும் சூழலும்; கரையோர மாசாக்கம்; கரையோர அரிப்பு*

# Profit Sharing of Vegetables Between Producers and Intermediators - A Case Study in Thirunelvely Agricultural Village, Jaffna, Sri Lanka

**Saranya.T., Kabilan.S.**
*Department of Geography, University of Jaffna*

Vegetable cultivation is known as secondarily important cultivation on the basic of ensuring food security globally. (Sakidha, 2019). The study focuses on identifying the proportion of profit sharing between the Vegetable Producers and Market Intermediators in terms of vegetable marketing, assessing the factors that are influencing in the profit sharing between the Vegetable Producers and Market Intermediators, and developing market strategies to equalize and stabilize the profit sharing between the Vegetable Producers and Market Intermediators under planning context in Thirunelvely village, as one of the agriculture village that have been cultivating 15-18 types of vegetable crops annually in the Jaffna district. 18 focus groups were identified from the Vegetable Producers in term of the production of 18 types of vegetables in order to collect the primary data such as selling price of the vegetables that are determined by the vegetable producers, market factors that are influencing in the determination of prices for vegetables, and net profits that are earned by both Vegetable Producers from the cultivated vegetable. 35 questioners survey were conducted with the Market Intermediators who were selected through purposive sampling method in order to collect primary data such as buying and selling price of the vegetables that are determined by the Market Intermediators, market factors that are influencing in the determination of prices for vegetables, and net profits that are earned by Intermediators from each vegetable. Descriptive statistical method was adopted to analyse the data with the support of computer-based software platforms, Microsoft Excel in order to find the measure of deviation and correlation in the profit sharing between both parties. The study conclude that the profit has been shared among the Market Intermediators is 20-30% higher than the Vegetable Producer, the Vegetable Producers has been struggling to get financial support from the government banks due to the instability of rate of return from the small scale of cultivating and the producers do not have the storage facilities to preserve their cultivations until getting better market price. The study proposed to conduct training to the Vegetable Producers on the techniques and methods to increase the production of vegetable at small scale in order to get profit in stable manner, and hybrid techniques for production and marketing of vegetables. In addition, the study suggested that to empower the Vegetable Producers to practice on self-marketing and shared preservation methods to overcome from the market issues in terms of Vegetable Marketing.

**Keywords:** *Self-marketing; Intermediaries; Profit Sharing; Vegetable Producers; financial support*

# Population Trends and Fertility Issues in an Isolated Island: Special Focus on Delft Island, Jaffna District, Sri Lanka

**Revathy.T., Kabilan.S.**
*Department of Geography, University of Jaffna*

The population density, that is more or less, compared to the resource capacity of a specific area affects the development of that area negatively (ESRA, 2015). Fertility plays a significant role in the rise and decline in the population of an area (Rafeeka, 2019). Delft, as an isolated island from the mainland, is the least populated division out of the 15 Divisional Secretariats of Jaffna District. A significant issue is that the population pattern has been changing negatively for the last four decades in this island. This study focuses on the population trends of an area from 2010 to 2020 assessing the fertility issues of its inhabitants, and identifying the factors that have been affecting the fertility of the population. The reports of the Divisional Secretariat, Medical Officer of Health Division, Grama Niladhari Divisions are referred to in this paper to illustrate the population trends in Delft. The families in the data sample are purposively divided into 3 groups: 1. Married couples with children, 2. Married couples without children, and 3. Unmarried persons in order to assess the fertility issues observed among the community. The factors that influence fertility and population in Delft were identified through interviews with professionals, consultants and public health officials. This study concludes that fertility has been unstable in this area not only for the past 10 years but for four decades; 55% of the families have only one child; family members who got married late (35 – 45 years) are indifferent to fertility matters and unwilling to attend awareness programs on fertility conducted by public health officials due to various reasons. Moreover, internal displacement and foreign migration are causes for the population decline in the past 10 years. This study proposes to educate the families in Delft on fertility matters to increase the fertility rate from 1.7 that is observed at present in the area.

**Keywords:** *Delft; Fertility; Population; Health*

# Collection of Revenue and Its Efficient Utilization in the Local Government System of Sri Lanka: Special Reference to Nallur Pradeshiya Sabha, Jaffna

**Sathiyawani.A., Kabilan.S.**
*Department of Geography, University of Jaffna*

As the lifeblood of every state, revenue refers to the income of a government at any level. Revenue is critical as it determines, to a large extent, how much money is available for a government's expenditure (Seen Mohamed Aliff, 2014). Local government institutions that communicate directly with the grassroots are required to provide a variety of services such as local road development, water supply and sanitation, waste management and public health services within their administrative areas. They are also seen as having the power to collect revenue at the local level. However, the revenue is insufficient to provide these services. This study aims at exploring the sources of revenue in a local government system, and its challenges in managing and utilizing the revenue for the development of the local area at the Pradeshiya *Sabha* level in Nallur, Jaffna. This study uses primary and secondary data gathered through interviews, focus group discussions, and a documentary review. The samples are collected purposively from the population that is divided into clusters on the basis of revenue collectors, planners, budget makers and the general public. Data is analyzed with the descriptive and statistical methods. This study concludes that the income of the local government system is generated in the forms of taxes, licenses, service charges, rents, warrant cost and fines, and revenue grants. However, the actual income is not collected efficiently from all the revenue sources due to the lack of public awareness, lack of own-source revenues, political interventions in the council, lack of transparency in the council's activities, weak administrative management and corruption at the local government level. This study especially recommends to the Nallur *Pradeshiya Sabha* to conduct property reassessment within a year to increase the annual revenue by 45% - 60%. In addition, it is important that the Nallur *Pradeshiya Sabha* provide effective services to the people in a timely manner through effective revenue management mechanisms while undertaking efforts to reduce such gaps and increase its own-source revenues.

**Keywords:** *Expenditure; Income; Local Government; Public Finance; Revenue; Reassessment*

# Surface Water Cascade Systems and Its Challenges: A Case Study of the Vavuniya Urban Development Region

**Rishitharan.P., Kabilan.S.**
*Department of Geography, University of Jaffna*

Ground water resources and water flow influence the stability of surface water (U.S geological survey,1998). This study is grounded on the surface water network pattern and human intervention in changing the surface water flow direction in the Vavuniya urban development region. The study focuses on identifying the location of tanks in the study area, exploring the natural flow network and the connection between those tanks, and evaluate development activities that may interfere with the surface water network. In the development context of the urban area of Vavuniya, as the natural flow patterns are blocked due to rapid urbanization and human activities, this area faces severe drought from July to October and floods from December to January during the monsoon season annually. Data such as the number of tanks, their water storage, watersheds and the usage of land in the watershed network were obtained from primary and secondary sources. Geographical Information System (GIS) and Remote sensing techniques (RS) are used to develop models such as digital elevation and the hydrological by performing spatial functions such as fill, flow direction, flow accumulation, stream order and dissolve. The overlay analysis is performed to determine the issues in the natural water flow due to uncontrolled human interventions. This study concludes that all the ponds in the Vavuniya urban development area are in line with the natural flow, and at present, the natural flow network is blocked in several places due to human interventions. Particularly, human settlements and paddy cultivation cause these blocks in the natural flow path eventually. This study observes that the canals set up to drain excess water from the tanks are at different ground levels: Canals are developed without considering the natural flow direction that is altered by human activities. Thus, a small tank depends on the excess water supply of another tank to reach its maximum storage capacity despite it having the natural flow in its catchment area to fill its capacity independently. Rather than being fed from its own catchment through natural flow paths, the storage capacity of a tank now depends on the availability of excess water in adjoining tanks. Therefore, the existing pond network system is unable to function effectively during the rainy season due to obstructions to the natural flow path in different places. It creates an adverse impact on water storage as well. These two phenomena contribute to the occurrence of annual floods and droughts in the study area.

**Keywords:** *Hydrology; Natural water flow; Floods; Droughts; Geographical information system and Remote sensing; Overlay*

# மன்னார் மாவட்டத்தின் குடிப்புள்ளியியல் பகுப்பாய்வு

**ஜெயந்திரன்.ர., சுதாகர்.க.**
*புவியியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*

ஒரு நாட்டினுடைய வளங்களில் பிரதானமான வளமாக மனிதவளம் கருதப்படுகின்றது. ஒரு நாட்டினுடைய அபிவிருத்தியானது அதன் வளங்களிலும் குடித்தொகையிலும் தங்கியுள்ளது. உலகளாவிய ரீதியில் நாளுக்கு நாள் அதிகரித்து செல்லும் குடித்தொகையினால் பல நெருக்கடிகளுக்கும் சவால்களுக்கும் பல நாடுகள் முகம் கொடுத்து வருகின்றன. அதேவேளை இன்னும் சில நாடுகள் தமது நாட்டின் வளங்களுக்கு ஏற்ற குடித்தொகை இன்மையாலும் பல சவால்களை எதிர்கொள்கின்றன. அந்த வகையில் மன்னார் மாவட்டத்தினுடைய குடிப்புள்ளியியல் பகுப்பாய்வு (1999-2019) என்ற இவ்வாய்வில் ஆய்வு பிரதேசமான மன்னார் மாவட்டத்தினுடைய குடிப்புள்ளியியலில் கடந்த 20 வருட காலப்பகுதியில் எவ்வாறான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன என்பதை அறிய 1999-2019 வரையான காலப்பகுதிக்கான குடித்தொகை தொடர்பான இரண்டாம் நிலை தரவுகள் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. குடித்தொகை கட்டமைப்புக்களில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் குறிப்பாக கிராமசேவகர் பிரிவுகள் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவுகளின் அடிப்படையில் குடித்தொகை பரம்பல் மற்றும் அடர்த்தியில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை புவியியல் தகவல் தொகுதி ஊடாக காட்சிப்படுத்தல், இம்மாற்றங்களுக்கான பிறப்பு, இறப்பு, இடப்பெயர்வுகள் ஊடான காரணங்களை அறிதல் ஆகிய நோக்கங்களை மையமாக கொண்டு இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. குடித்தொகையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை அறிய பயன்படுத்திய இரண்டாம் நிலை தரவுகளின் மூலம் குடித்தொகை பரம்பல் மற்றும் அடர்த்தியில் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்கள் கிராம சேவகர் பிரிவுகள் ரீதியாக காட்சிப்படுத்தப்பட்டதுடன் இன, மத, ரீதியான வேறுபாடுகளும் பிறப்பு, இறப்பு, இடப்பெயர்வு போன்றவற்றின் வேறுபாடுகளும் பிரதேச செயலாளர் ரீதியாக எவ்வாறு அமைந்துள்ளன என்பனவும் காட்சிப்படுத்தப்பட்டு இம்மாற்றங்களுக்கு கடந்த காலத்தில் ஏற்பட்ட சமூக பொருளாதார அரசியல் விளைவுகளும் உள்நாட்டு யுத்தமும் அதனால் ஏற்பட்ட இடப்பெயர்வுகளும் காரணிகளாக அமைந்துள்ளன என முடிவாக பெறப்பட்டுள்ளது.

**திறவுச்சொற்கள்:** *இடப்பெயர்வு; குடித்தொகை; புவியியல் தகவல் தொகுதி*

# கரைதுறைப்பற்று பிரதேச கால்நடைவளர்ப்பு: சவால்களும் அபிவிருத்தி வாய்ப்புக்களும்

**கிருஜன்.செ., சுதாகர்.க.**
*புவியியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*

முதலாம் நிலை பொருளாதார நடவடிக்கைகளில் ஒன்றாகவும், வாழ்வாதார சொத்தாகவும் கால்நடை வளர்ப்பு காணப்படுகின்றது. அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் கால்நடை வளர்ப்பானது தவிர்க்க முடியாத பொருளாதார நடவடிக்கையாக உள்ளது. இலங்கையில், குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேசம் கால்நடை வளர்ப்பில் முக்கியம் பெறுகின்றது. குறித்த பகுதியில் நந்திக்கடல், நாயாறு கடல் நீரேரிகள் முதலானவை இயற்கை ஒதுக்கு பகுதிகளாக பிரகடனப்படுத்தப்பட்டமை மற்றும் மேய்ச்சல் நிலங்களின் நிலப்பயன்பாட்டு மாற்றம் முதலானவற்றினால் மேய்ச்சல் நிலப் பற்றாக்குறை நிலவுகின்றது. இதனால் கால் நடைகள் இறத்தல் மற்றும் விபத்துக்குள்ளாதலுக்கு உட்படுகின்றதோடு மனித முரண்பாடுகளையும் தோற்றுவிக்கின்றன. ஆகவே கால்நடை வளர்ப்பின் தற்போதைய நிலையையும், சவால்களையும் மதிப்பீடு செய்து அபிவிருத்தி வாய்ப்புகளை பரிந்துரை செய்யும் நோக்கில் இவ் ஆய்வானது முன்னெடுக்கப்பட்டது. கால்நடை வளர்ப்பின் தற்போதைய நிலை, எதிர்நோக்கும் சவால்கள் மற்றும் உள்ளார்ந்த வாய்ப்புகளை கண்டறிவதற்காக வினாக்கொத்து, முக்கிய நபர்களுடனான நேர்காணல் மற்றும் கள அவதான முறைகள் கையாளப்பட்டு சமூக விஞ்ஞான புள்ளிவிபர தொகுப்பு (SPSS) ஊடாக தரவுகளைத் தொகுத்தலும், வரைபடமாக்கலினூடாகவும் முன்வைக்கப்பட்டன. கால்நடை மேய்ச்சலிற்கான பொருத்தமான இடங்களைத் தெரிவு செய்யும் நோக்கில் நிலப்பயன்பாட்டு படத்தினை பிரதானமாகக் கொண்டு பங்குதாரர்களின் கருத்துக் களுக்கமைய Arc GIS 10.4 நுட்பத்தின் இடையகப்படுத்தல் (buffering) மற்றும் மேற்படிதல் (overly) முறைகளுக்கூடாக பகுப்பாய்வு செய்யப்பட்டன. ஆய்வின் பெறுபேறுகளின் அடிப்படையில் கரைதுறைப்பற்று பிரதேசத்தில் மேய்ச்சல் நிலமின்மையே கால்நடை வளர்ப்பதில் பாரிய சவாலாக உள்ளது. கரைதுறைப்பற்று பிரதேசத்தில் 1015 குடும்பங்கள் மாடுவளர்ப்பினை மேற்கொள்கின்ற னர். அவர்கள் சுமார் 40% உள்ளூர் மாடுகளையே அதிகமாக வளர்க்கின்றனர். இவற்றை பருவக் காற்றுக்களின் செல்வாக்கிற்கேற்ப இடம்மாறி வளர்த்தல் முறையையும் மேற்கொள்கின்றனர். ஆகவே குறித்த பகுதியில் கொக்குத்தொடுவாய், தண்ணிமுறிப்பு, மதுவளசிங்கன்குளம், அம்பல வன் பொக்கணை மற்றும் கேப்பாப்பிலவு முதலான பகுதிகள் மேய்ச்சல் தளத்திற்கு பொருத்தமான பகுதியாக பரிந்துரை செய்யப்பட்டன. குறித்த ஆய்வினை நடைமுறைப்படுத்தும் வேளையில் எதிர்காலத்தில் கால்நடை சார்ந்த சவால்களை குறைத்து மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த கூடியதாக அமையும்.

**திறவுச்சொற்கள்:** *கால்நடை; மேய்ச்சல்நிலம்; முரண்பாடு; புள்ளிவிபரவியல்;*

# மன்னார் மாவட்டத்தில் வரட்சியின் தாக்கம்

**லோகேசன்.மு., சுதாகர்.க.**
*புவியியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*

தற்போதைய காலநிலை மாற்றங்களினால் வரட்சி, வெள்ளம் போன்ற வானிலை நிகழ்வுகளின் தீவிரம் அதிகரித்துக் கொண்டு செல்லும் போக்கே காணப்படுகின்றது. அண்மைய தசாப்தங்களில் மழைவீழ்ச்சியின் அதிக எதிர்மறை மற்றும் ஒழுங்கின்மையின் விளைவாக இவ் அனர்த்தங்களின் பாதிப்பை வருடந்தோறும் இவ் ஆய்வுப் பிரதேசம் அனுபவித்தே வருகின்றது. "மன்னார் மாவட்டத்தில் வரட்சியின் தாக்கம்" என்னும் இவ்வாய்வானது 1948 – 2019ம் ஆண்டு வரையான 70 வருட காலப்பகுதியின் மழைவீழ்ச்சி தரவுகள் ஆய்விற்கு உட்படுத்தப்பட்டு ஆய்வுப் பிரதேசத்தின் வருடாந்த மழைவீழ்ச்சி போக்கு, வரட்சியினுடைய போக்கு, இவ் வரட்சியினால் விவசாயத்தில் குறிப்பாக நெற்பயிர் செய்கையில் ஏற்பட்டுள்ள தாக்கம் என்பவற்றினை கண்டறிவதை நோக்கமாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வில் மழைவீழ்ச்சியின் போக்கினை கண்டறிவதற்கு Least Square Method மற்றும் வரட்சி பிரிவு காலங்களை அடையாளம் காண்பதற்கு தரப்படுத்தப்பட்ட வருடாந்த படிவுவீழ்ச்சி குறிகாட்டி (Standardized Index Annual Precipitation SIAP) என்னும் வரட்சி குறிகாட்டி பயன்படுத்தப்பட்டு வரட்சி ஆண்டுகள் மதிப்பிடப்பட்டுள்ளன. ஆய்வின் முடிவில் கடந்த 70 வருட காலப்பகுதியில் பிரதேசத்தின் மழைவீழ்ச்சி போக்கானது ஒரு சிறியளவில் அதிகரித்துச் செல்லும் போக்கே காணப்படுகின்றது. மழைவீழ்ச்சியின் போக்கானது சிறியளவில் அதிகரிப்பதனால் வரட்சியின் தீவிரத் தன்மையானது குறைவடைந்து ஒரு மிதமான வரட்சி போக்கிலேயே காணப்படுகின்றமை கண்டறியப்பட்டுள்ளது. 70 ஆண்டு ஆய்வுக் காலப்பகுதியில் 18 வருடங்கள் தீவிர மற்றும் கடுமையான வரட்சி காலங்களாகவும், 34 வருடங்கள் மிதமான வரட்சி காலங்களாகவும், ஏனைய 18 வருடங்கள் ஈரமான மற்றும் தீவிர ஈரமான மற்றும் வெள்ள அனர்த்தத்திற்கு உட்படக்கூடிய காலங்களாகவும் அடையாளம் காணப்பட்டுள்ளன. ஆய்வுக் காலப்பகுதியில் முன்னைய காலங்களில் வரட்சியின் தீவிரம் அதிகமாக காணப்பட்டாலும் தற்காலங்களில் வரட்சியின் தீவிரம் குறைவடைந்து மிதமான வரட்சி (Moderate Drought) போக்கே காணப்படுகின்றது. பயிர்ச்செய்கையிலும் குறிப்பாக நெல்லுற்பத்தியிலும் வரட்சியின் தாக்கம் வெகுவாக உணரப்பட்டுள்ளது. மழையை நம்பிய பெரும்போக நெற்செய்கையில் இவ் வரட்சியின் தாக்கம் குறைவாக காணப்பட்டாலும் முற்றுமுழுதாக நீர்ப்பாசனத்தை நம்பிய சிறுபோக நெல்லுற்பத்தியின் போக்கில் வரட்சியின் தாக்கம் பாதிப்பினை ஏற்படுத்தியுள்ளமை கண்டறியப் பட்டுள்ளது. தீர்வாக தரைக்கீழ் நீரின் அளவான பயன்பாடு, மீள்காடாக்கம், குளங்களின் மீள்நிர் மாணம், வினைத்திறனான நீர்ப்பாசன முறை, குறைவான நீர்ப்பயன்பாடுள்ள பயிர்ச்செய்கை போன்றவற்றை செயற்படுத்தும் போது வரட்சியின் தாக்கங்களை குறைத்துக் கொள்ள முடியும் என்பது இவ் ஆய்வின் தீர்வாக கண்டுகொள்ள முடிகின்றது.

**திறவுச்சொற்கள்:** *வரட்சி; வரட்சி குறிகாட்டி; வெள்ளம்; மழைவீழ்ச்சி;*

# முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேசத்தின் நிலப்பயன்பாட்டு முரண்பாடுகளும் திட்டமிடலும்

**நிருபா.த., சுதாகர்.க.**
*புவியியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*

இவ் ஆய்வானது முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்றுப் பிரதேசத்தின் நிலப் பயன்பாடுகளுக்கிடையேயான முரண்பாடுகளை அடையாளம் கண்டு அதற்கேற்ப நிலப் பயன்பாட்டுத் திட்டமிடலை மேற்கொள்வது பற்றி ஆராய்கிறது. இதனடிப்படையில் தற்போதைய பிரதான நிலப்பயன்பாட்டு வகைகள் (உற்பத்தி நிலம், நகர நிலம், பாதுகாக்கப்பட வேண்டிய நிலம்) அடையாளப்படுத்தப்பட்டு பல்பரிமாண பகுப்பாய்வு (Multi Criteria Analysis) மற்றும் GIS நுட்பத்தைப் பயன்படுத்தி நிலப்பயன்பாடுகளுக்கிடையில் பொருத்தமதிப்பீடு மேற்கொள்வதற்கு நிலப்பயன்பாட்டுத் தரவுகள், சனத்தொகை அடர்த்தி, வீதிகளின் அடர்த்தி, விவசாயிகள், மண் வகை, வெள்ளநீர் தேங்கி நிற்கும் பகுதிகள் ஆகிய கட்டளைக்கற்கள் உட்செலுத்தப்பட்டு பின்னர் மேற்படி வாக்கம் செய்யப்பட்டு நிலப்பயன்பாட்டு வகைகளுக்கான பெறுமதியிடப்பட்டு நெய்யரிப் படங்களாக மாற்றப்பட்டது. பின்னர் மீள்வகுப்பாக்கம் மேற்கொள்ளப்பட்டது. ஒவ்வொரு நிலப் பயன்பாடு களக்கும் முக்கியத்துவத்தின் அடிப்படையில் நிறையளிக்கப்பட்டு உயர் பொருத்தம், ஓரளவு பொருத்தம், குறைவான பொருத்தம் எனும் அடிப்படையில் நிலப்பயன்பாடுகளுக்கான பொருத்தம் மதிப்பிடப் பட்டுள்ளது. நிலப்பயன்பாட்டு படத்தினை அடிப்படையாகக் கொண்டு கலந்துரையாடல் மற்றும் நேரடி அவதானிப்பின் மூலம் அதிக விருப்பம். ஓரளவு விருப்பம், குறைவான விருப்பம் எனும் அடிப்படையில் நிலப்பொருத்தப் படமானது நிலப்பயன்பாட்டு விருப்பப்படமாக மாற்றப்பட்டது. இவ் நிலப்பயன்பாட்டு விருப்பப்படங்கள் மேற்படிவு செய்யப்பட்டு பிரதான நிலப்பயன்பாடுகளுக்கிடையிலான முரண்பாடுகள் அதிக முரண்பாடுடைய பிரதேசம், ஓரளவு முரண்பாடுடைய பிரதேசம், முரண்பாடற்ற பிரதேசம், என இனங்காணப்பட்டது. இதனடிப் படையில் அதாவது 23% க்கு உட்பட்ட பிரதேசமே நிலப்பயன்பாட்டு முரண்பாடுகளைக் கொண்டுள்ளபோதும் 4% ஆன நிலப்பிரதேசம் மூன்று நிலப்பயன்பாடுகளுக்குமான உயர்ந்தளவு முரண்பாட்டை கொண்டுள்ளது. அத்தோடு 77% ஆன பிரதேசமானது முரண்பாடற்ற பிரதேச மாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. இவ் நில முரண்பாட்டிற்கான பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்டு குறித்த நிலமானது எந்த வகையான நிலப்பயன்பாட்டிற்கு அதிக பொருத்தத் தன்மை காணப்படுகின்றது என்பதைக் கருத்திற்கொண்டு திட்டமிடலானது மேற்கொள்ளப் பட்டுள்ளது. ஆய்வுப்பிரதேசமானது அதிகரித்து வரும் சனத்தொகை, துரித அபிவிருத்தி செயற்பாடுகள் காரணமாக அதிகளவு உற்பத்தி மற்றும் பாதுகாக்கப்பட வேண்டிய நிலப்பயன் பாடுகளுக்கிடை யிலே முரண்பாடுகள் அதிகம் இனங்காணப்பட்டுள்ளன. அத்தோடு ஆய்வுப் பிரதேசத்தில் அடையாளப்படுத்தப்பட்ட பாதுகாக்கப்பட வேண்டிய நிலப் பயன்பாடுகளில் இலகுவாக பாதிப் படையக் கூடிய பிரதேசங்களை மக்களிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட தகவல்களின் அடிப்படை யில் இலகுவாக அடையாளம் செய்து கொள்ள முடிவதுடன் பிரதேசத்துக்கான பாதுகாப் பினையும் உறுதிப்படுத்திக்கொள்ள முடியும். இவ் ஆய்வானது ஆய்வுப்பிரதேசத்தின் உள்ளூர் மற்றும் பிராந்திய அபிவிருத்தித் திட்டமிடலுக்கான அடிப்படைத்தகவல்களை பெற்றுக்கொள்ளவும், நிலப் பயன்பாட்டுப் பாங்குகளை விளங்கிக் கொள்ளவும், சூழல் தொடர்பான திட்டமிடல்களை மேற் கொள்ளவும் வழிகாட்டுவதாக விளங்குகின்றது.

**பிரதானசொற்கள்:** *பல்பரிமாண பகுப்பாய்வு; நிலமுரண்பாடுகள்; நிலப்பயன் பாட்டு திட்டமிடல்; புவியியல் தகவல் ஒழுங்குமுறை; நிலப்பொருத்த மதிப்பீடு*

# நுவரெலியா மாவட்டத்தின் மண்சரிவு நிகழ்வுகளின் இட ரீதியான மற்றும் கால ரீதியான பாங்கு ஓர் இடர் மதிப்பீடு

**பிரதீனா.சு.**
*புவியியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*

உலகலாவிய ரீதியில் மனிதன் எதிர்கொள்ளும் பாரிய சவாலாக காலநிலை மாற்றமும், இயற்கை அனர்த்தங்களும் காணப்படுகின்றன. இலங்கை புவிச்சரிதவியல் மற்றும் நீரியல் சார் அனர்த்தங்களால் அதிகமாக பாதிக்கப்படுகின்றது. இந்தவகையில் மண்சரிவு அனர்த்தம் இலங்கையில் தீவிரமடைந்து வருகிறது. இலங்கையின் 20 வீதமான நிலப்பரப்பு மண்சரிவு அபாயம் மிக்க பகுதிகளாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. நுவரெலியா மாவட்டம் மண்சரிவு அடிக்கடி இடம் பெறும் பிரதேசமாகும். இவ் ஆய்வில் நுவரெலியா மாவட்டத்தின் மண்சரிவு நிகழ்வுகளின் இட ரீதியான கால ரீதியான பாங்கு ஓர் இடர்மதிப்பீடாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதனடிப்படையில் இம் மாவட்டத்தில் 2005-2019 வரையான மண்சரிவு நிகழ்வுகளின் எண்ணிக்கையினையும் அவை இடம்பெற்ற இடங்களையும் அடையாளப்படுத்துவதுடன் மண்சரிவுகளை தூண்டக்கூடிய காரணிகளையும் அவற்றினுடைய பாதிப்புக்களையும் மதிப்பிடுவதனை நோக்கமாக கொண்டு இவ் ஆய்வு முன்னெடுக்கப்பட்டுள்ளது. இவ் ஆய்வானது இரண்டாம்நிலை தரவுகளை மாத்திரமே கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்தரவுகள் புவியியல் தகவல் முறைமை (ArcGIS10.4) ஊடாக மண்சரிவு நிகழ்வுகளுக்கான படம் உருவாக்கப்பட்டு அபாயநிலை படத்துடன் ஆராயப் பட்டது. மேலும் மேற்படிதல் செயன்முறைக்கும் உட்படுத்தப்பட்டது. விபரண புள்ளிவிபரவியல் நுட்பங் கள் ஊடாகவும் பகுப்பாய்வு செய்யப்பட்டு முடிவுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இதனடிப்படையில் நுவரெலியா மாவட்டத்தில் 2005-2019 வரையான காலப்பகுதியில் இடம்பெற்ற மண்சரிவு நிகழ்வுகளில் அதிக மண்சரிவு அனர்த்த அபாய நிலை காணப்படும் 33 கிராமசேவகர் பிரிவுகளில் 33 மண்சரிவுகள் இடம்பெற்றுள்ளன. 2005-2019 வரையான மண்சரிவு நிகழ்வுகளில் குறைந்த மண்சரிவு அனர்த்த அபாய நிலை காணப்படும் 14 கிராமசேவகர் பிரிவுகளில் 14 மண்சரிவுகள் இடம்பெற்றுள்ளன. மேலும் ஏனைய பிரதேச செயலாளர் பிரிவுகளில் இவ்வலயத்தில் மண்சரிவுகள் இடம்பெறாமை இனங்காணப்பட்டுள்ளது. நுவரெலியா மாவட்டத்தில் அதிக மண்சரிவு அபாயம் கொண்ட பகுதிகளில் சராசரி 3100 மிமீ மேற்பட்ட மழைவீழ்ச்சியினை பெறல், மலைப்பாங்கான செங்குத்து சாய்வுகள், 4000மிமீ மேலான நீர் வழிந்தோடும் பகுதிகள், மற்றும் திட்டமிடப்படாத நிலப்பயன்பாட்டு முறைகள், பருவகால பயிர்செய்கை முறைகள் போன்ற காரணிகள் மண்சரிவினை தூண்டும் காரணிகளாக இனங்காணப்பட்டுள்ளன. நுவரெலியா மாவட்டத்தில் நடுத்தர மண்சரிவு அபாயம் கொண்ட பகுதிகளில் மண்சரிவினை தூண்டும் காரணிகளாக சராசரி 2200மிமீ மழைவீழ்ச்சியினை பெறல், 400மீ மேற்பட்ட செங்குத்து சாய்வுகள், திட்டமிடப்படாத நிலப்பயன்பாட்டு முறைகள், பருவகால பயிர்செய்கை மற்றும் கைத்தொழில் ரீதியான நடவடிக்கைகள் போன்றன இனங்காணப்பட்டுள்ளன. மேலும் குறைவான மண்சரிவு அபாயம் கொண்ட பகுதிகள் பெரும்பாலும் மேய்ச்சல் நிலங்களாகவும், காட்டுபோர்வைகளாகவும், 1600மிமீ மேற்பட்ட மழைவீழ்ச்சியினை பெறும் பகுதிகளாகவும் இனங்காணப்பட்டுள்ளன. 2005-2019 வரையான மண்சரிவு நிகழ்வுகளினால் உயிரிழப்புக்கள், வீடுகள் பகுதியளவில் பாதிப்படைதல், வீடுகள் முற்றாக அழிவடைதல் போன்ற பாதிப்புக்கள் இடம்பெற்றுள்ளன. இவற்றுள் மறைமுகமான விளைவுகளே அதிகமாகும். அதாவது விவசாய நிலம் பாதிக்கப்படல், பொருளாதார ரீதியாக பாதிக்கப்படல் போன்றவற்றால் 1500 மேற்பட்ட மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக அடையாளப் படுத்தப்பட்டது. நுவரெலியா மாவட்டத்தில் நிலப்பயன்பாடு ரீதியான கட்டுப்பாடுகளையும் திட்டமிடல்க ளையும் மேற்கொள்ளுதல் மற்றும் மக்களுக்கான முறையான விழிப்புணர்வுகளை வழங்குவதன் மூலமும் மண்சரிவின் தீவிரதன்மையினை கட்டுப்படுத்த முடியும்.

**திறவுச்சொற்கள்:** *புவியியல்தகவல்முறைமை; இடர்; அபாயநிலை; இரண்டாம் நிலைத்தரவு*

# யாழ்ப்பாண மாவட்டத்தின் குருவிக்காடு இயற்கை மூலதனப்பகுதியின் தற்போதைய நிலையும் பாதுகாப்பு வழிமுறைகளும்

**கிருசனா.சி., சுதாகர்.க**
*புவியியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*

இயற்கை மூலதனமானது மனிதனின் நல்வாழ்வின் விருத்திக்கு உதவுவதுடன், மனித ஆரோக்கியத்திற்கும் இன்றியமையாத கூறாகக் காணப்படுகின்றது. இயற்கை மூலதனம் என்பது பூமியின் இயற்கை சொத்துக்கள் (மண், சுத்தமான நீர், காற்று, தாவரங்கள் மற்றும் விலங்கினங்கள்) மற்றும் அவற்றின் விளைவாக ஏற்படும் சுற்றுச்சூழல் அமைப்பு சேவைகளை உள்ளடக்கியதாகக் காணப்படுகின்றது. இன்று இயற்கை மூலதனப் பகுதியானது அதிகளவில் நுகரப்படுவதுடன் தரமிழத்தலுக்கும் உட்பட்டு வருவதன் காரணமாக மனித நல்வாழ்வும் எதிர்கால பொருளாதார வளர்ச்சியும் பாதிக்கப்பட்டு வருகின்றன. யாழ்மாவட்டத்தின் தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட சரசாலை குருவிக்காடு உயிரினப் பல்வகைமை நிறைந்த இயற்கை மூலதனப் பகுதியாகும். கண்டல் தாவரங்களினால் சூழப்பட்டதும், 1598.2 ஹெக்டேயர் பரப்பை கொண்டது மான இவ்வியற்கை மூலதனப்பகுதியானது இன்று மனித நடவடிக்கைகளின் காரணமாக பாதிக்கப்பட்டு வருகின்றது. அதாவது இப்பகுதியின் முக்கியத்துவத்தினை மக்கள் உணராது திண்மக்கழிவுகளைக் கொட்டுதல், கண்டல் தாவரங்களினை வெட்டுதல், வேட்டையாடல், சட்டவிரோத மது உற்பத்தி மற்றும் விற்பனை, விழிப்புணர்வின்மை, மணலகழ்வு, தனியாரின் நில அபகரிப்பு, மனித முதலை முரண்பாடு என்பன காரணமாக பாதிக்கப்பட்டு வருகின்றது. இவ்வாய்வானது மக்கள் பங்களிப்பு முறையினூடாக குருவிக்காடு இயற்கை மூலதனப் பகுதியினை படமாக்கல், இயற்கை மூலதன நோக்கில் தற்போதைய நிலையினை மதிப்பிடல், பாதுகாப்பு வழிமுறைகளினை முன்வைத்தல், மற்றும் விழிப்புணர்வு உத்திகளை சிபார்சு செய்தல் என்ப வற்றினை நோக்கமாகக் கொண்டுள்ளது. இவ்வாய்வானது முதன்நிலைத்தரவுகள் மற்றும் இரண் டாம் நிலைத்தரவுகளை பெற்று விபரணரீதியிலான புள்ளிவிபரவியல் நுட்பம் மற்றும் இடம் சார் பகுப்பாய்வு என்பவற்றின் மூலமாகவும் பகுப்பாய்வுகள் மேற்கொள்ளப்பட்டு முடிவுகள் பெற்றுக்கொள்ளப்பட்டன. இவ்வியற்கை மூலதனப்பகுதியானது கண்டல் தாவரங்களினால் சூழப்பட்ட தும், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பறவைகளின் புகலரணாகவும் காணப்படுகின்றது. அத்துடன் ஆய்வுப்பிரதேசத்தினைச் சூழவுள்ள மக்கள் அம்மூலதனங்களினை அடிப்படையாகக் கொண்டு தமது பொருளாதார நடவடிக்கைகளினை மேற்கொண்டுவருகின்றனர். அதாவது மீன்பிடி, விறகுத்தேவை, சுற்றுலா நடவடிக்கைகள் மற்றும் மருத்துவத் தேவைகள் போன்ற சேவைகளைப் பெற்றுவருகின்றமை குறிப்பிடத்தக்கது. இருப்பினும் இன்று இப்பகுதியானது பல சவால்களை எதிர் நோக்கி வருகின்றது. எனவே இப்பிரச்சினைகளை தீர்த்துக்கொள்ளும் முகமாக வினைத்திறனான முகாமைத்துவ நடவடிக்கைகள் பரிந்துரைகளாக முன்வைக்கப்பட்டுள்ளன.

**திறவுச்சொற்கள்:** *இயற்கை மூலதனப்பகுதி; கண்டல்தாவரம்; உயிரின பல்வகைமை; சூழற்தொகுதி பாதுகாப்பு வழிமுறை*

# நீர்ப்பாசனக் குளங்களின் கீழ் வாழும் மக்கள் எதிர்நோக்கும் சவால்கள்: வவுனியா மாவட்ட வேலங்குளம் கிராமசேவகர் பிரிவினை மையமாகக் கொண்ட ஆய்வு

**லகிந்தினி.க., சுபாசினி.உ.**
*புவியியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*[1]

வவுனியா மாவட்டம் நீர்ப்பாசனத் துறைக்கும் அவற்றை வழங்கும் நீர்ப்பாசனக் குளங்களிற்கும் தனிச் சிறப்புடைய இடமாக திகழ்கிறது. வவுனியா மாவட்டத்தின் பொருளாதார நடவடிக்கைகளில் நீர்ப்பாசனக் குளங்களே பெரிதும் பங்காற்றுகின்றன. ஆனால் நீர்ப்பாசனக் குளங்கள் வினைத் திறனான நீர்ப்பாசனத்தினை வழங்குவதில் பல காரணிகள் சவால்களாக அமைகின்றன. அவற்றுள் குளங்கள் சீராக புனரமைக்கப்படாமையும் முதன்மையான ஒன்றாகும். இதனால் நீர்ப்பாசனத்தினை நம்பிய விவசாயப் பொருளாதாரம் பாதிப்படைகின்றது. இதனடிப்படையில் ஆய்வுப் பிரதேசத்தில் உள்ள புனரமைக்கப்பட்ட குளங்களினை நம்பி பயிர்ச்செய்கையில் ஈடுபடும் மக்களின் வாழ்வாதாரம் உயர்வான நிலையில் அமைவதோடும் புனரமைக்கப்படாத குளங்களை நம்பிய விவசாயிகள் வாழ்வாதாரத்தில் பாரிய பின்னடைவினை எதிர்கொண்டும் வருகின்றனர் இவ் ஆய்வானது ஆய்வுப் பிரதேசத்தில் உள்ள நீர்ப்பாசனக் குளங்களின் இன்றைய நிலையினைக் கண்டறிதல், புனரமைக்கப்படாத குளங்களினால் விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை இனங்காணல், ஆய்வுப்பகுதியிலுள்ள நீர்ப்பாசனக் குளங்களினைப் புனரமைப்பதில் தடையாக உள்ள சவால்களினை அடையாளப்படுத்தல், ஆய்வுப் பிரதேசத்திலுள்ள நீர்ப்பாசனக் குளங்களினைப் புனரமைப்புச் செய்வதன் மூலம் எதிர்காலத்தில் ஏற்படும் அனுகூலங்களை முன்வைத்தல் போன்ற நோக்கங்களை மையமாகக் கொண்டு நோக்கத்தெரிவு மாதிரி அடிப்படை யில் 16 குளங்கள் தெரிவு செய்யப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆய்விற்காக முதல் நிலை, இரண்டாம்நிலைத் தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன. முதலாம் நிலைத் தரவுகள் மையக்குழுக் கலந்துரையாடல், நேர்காணல், நேரடி அவதானிப்பு மூலம் சேகரிக்கப்பட்டுள்ளன. இரண்டாம் நிலைத் தரவுகளாக கமநல சேவைகள் திணைக்கள அறிக்கை, நீர்ப்பாசனத் திணைக்கள அறிக்கை, வவுனியா பிரதேச செயலக மற்றும் மாவட்ட புள்ளிவிபரவியல் அறிக்கை, கமக்கார அமைப்புக்களின் பதிவேடுகள் போன்றவற்றிலிருந்து குளங்கள் தொடர்பான தற்கால அடிப்படை விபரங்கள் மற்றும் ஆய்வுப் பிரதேசம் தொடர்பான விபரங்கள் சேகரிக்கப்பட்டன. பெறப்பட்ட தரவுகள் விபரணப்புள்ளிவிபரவியல் முறை மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டன. இவ் ஆய்வின் பகுப்பாய்வினூடாக புனரமைக்கப்படாத குளங்களினை நம்பிய விவசாயிகள் நீர்ப்பற்றாக்குறை, சிறுபோக நெற்செய்கையை முற்றாக இழந்துள்ளமை, விளைநிலங்கள் கைவிடப்படல், விளைச்சல் குறைவடைதல், உற்பத்திச் செலவிற்கேற்ற வருமானம் கிடைக்காமை, போன்ற பிரச்சினைகளை எதிர்நோக்குவதுடன் நீர்ப்பாசனக் குளங்களைப் புனரமைப்பதற்கு ஆய்வுப்பிரதேசம் நிர்வாக எல்லையாக அமைந்துள்ளமை, இராணுவம், விமானப்படைகளின் கட்டுப்பாடு, நீர்ப்பாசனக் குளங்கள் அளவீடு செய்து எல்லைப்படுத்தப்படாமை, சட்டவிரோத ஆக்கிரமிப்பும் முரண்பாடுகளும் போன்றன பாரிய சவால்கள் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. ஆகவே இங்குள்ள நீர்ப்பாசனக் குளங்கள் சிறந்த பொறியியற் கட்டமைப்பினை உள்வாங்கி குளத்தொடர்ச்சி முறைகளினைப் பின்பற்றி புனரமைக்கப்படின் மக்களின் வருமானம் உயர்வடைவதுடன் விவசாயப் பொருளாதாரத்திலும் முன்னேற்றம் ஏற்படும்.

**திறவுச்சொற்கள்:** *கிராம சேவகர் பிரிவு; சவால்கள்; நீர்ப்பாசனக் குளங்கள்; மாவட்டம்; வாழ்வாதாரம்*

# யாழ்ப்பாண மாவட்டத்தின் கைத்தறி நெசவாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்

**அ.ருசியா பானு.மு.ச., குலராஜசிங்கம்.ப.**

*மனைப்பொருளியல் அலகு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*

கைத்தறி உபகரணங்களைக் கொண்டு நூல் நூற்று புடவைகளாக மாற்றியமைக்கும் தொடர் செயற்பாடு கைத்தறி நெசவு என அழைக்கப்படுகின்றது. இத்தொழில் துறையானது குறைந்த மூலதனம், குறைந்த உற்பத்திச் செலவு மற்றும் சூழல் நேயம் கொண்ட ஒரு குடிசைக் கைத் தொழிலாக விளங்குவதுடன், தன்னகத்தே ஏராளமான கைத்தறி நெசவு சார்ந்த தொழில் வாய்ப்புக்களையும் அதிக அளவிலான ஊழியர் படையினரையும் கொண்ட தொழிற்துறையாகவும் விளங்குகின்றது. இலங்கையின் பொருளாதாரத்தில் 5% தொழில் வாய்ப்பினைக் கொண்டு விளங்கிய யாழ்ப்பாண மாவட்டத்தின் அரச கைத்தறி நெசவுத் தொழில்துறை 1977 ஆம் ஆண்டு இலங்கையில் அமுலாக்கப்பட்ட திறந்த பொருளாதாரக் கொள்கையினால் வீழ்ச்சி அடைந்தது. இவ்வாறு வீழ்ச்சியுற்ற யாழ்ப்பாண மாவட்டத்தின் அரச கைத்தறி நெசவுத் தொழிற்துறையானது 1980களின் பிற்பகுதியில், வடபகுதியில் தொடர்ச்சியாக நடைபெற்ற உள்நாட்டு போரினால் மேலும் பலவீனம் அடைந்தது. அதனடிப்படையில் யாழ்ப்பாண மாவட்டத்தின் கைத்தறி நெசவாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை இனங்காண்பதே ஆய்வின் பிரதான நோக்கமாகும். யாழ்ப்பாண மாவட்டத்தில் அமைந்துள்ள பத்து கைத்தறி நெசவு உற்பத்தி நிலையங்களும் அங்கு பணியாற்றும் முப்பது நெசவாளர்களும் ஆய்வு மாதிரிகளாக தெரிவு செய்யப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப் பட்டுள்ளது. ஆய்வின் போது வினாக்கொத்து, சம்மந்தப்பட்டவர்களுடனான நேரடி உரையாடல் மற்றும் நேரடி அவதானம் போன்றன முதலாம் நிலைத்தரவுகளாகவும் கைத்தறி நெசவு சார்ந்த நூல்கள், ஆய்வறிக்கைகள், இணையத்தளம் மற்றும் யாழ்ப்பாண மாவட்டத்தின் கைத் தொழிற்துறைத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட ஆண்டறிக்கைகள் போன்றன இரண்டாம் நிலைத்தரவுகளாகவும் சேகரிப்பட்டு பண்புசார் முறையியல் தரவுப்பகுப்பாய்வு மேற்கொள்ளப் பட்டுள்ளது. இத்தரவு அடிப்படையில் பணியாற்றும் 80% நெசவாளர்கள் நாற்பத்தைந்து வயதிற்கு மேற்பட்டவர்களாவர். 56% நெசவாளர்கள் 10,000 ரூபாவிற்குக் குறைவான ஊதியமே மாதவரு மானமாகப் பெறுகின்றனர். வாழ்க்கைச் செலவு அதிகரிப்பினால் ஊதியம் போதாமையே யாழ்ப் பாண மாவட்டத்தின் கைத்தறி நெசவுத் தொழிற்துறை வீழ்ச்சியடைய முக்கிய காரணியாக அமைகின்றது. அத்துடன் வளப் பற்றாக்குறையும் கட்டிட வசதிபோதாமை பாதுகாப்பு 62%, களஞ் சிய வசதி 66%, அத்தியவசிய உட்கட்டமைப்பு வசதிகள் 40% போன்றன இதன் வளர்ச்சிக்குத் தடையாக உள்ளன. மேலும் சுற்றுப்புறச் சூழல், அலங்கார நெசவுத் தறிகளின்மை, மனித வளங்க ளின் பற்றாக்குறை, ஆசிரியர்களின் தவறான அணுகுமுறைகள், குறைந்தளவிலான மேற்பார்வை போன்றவை ஆய்வின் போது நெசவாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளாக இனங்காணப் பட்டுள்ளது. அரசானது இம் மாவட்டத்தின் கைத்தறி நெசவாளர்களுக்கு போக்குவரத்துச் சலுகை, ஊழியர் சேமலாப நிதி வழங்குதல், இளம் தலைமுறையினரை இத்தொழிற் துறையில் பயிற்று வித்தல், நெசவாளர்களது தொழிற்திறனை விருத்தி செய்தல், உட்கட்டமைப்பு வசதிகளை முழுமைப்படுத்துவதுடன் அதன் பாதுகாப்பினையும் உறுதிப்படுத்தல், நெசவு ஆசிரியர்களுக்கான நியமனங்களை வழங்குதல், பாடசாலைக் கல்வித்திட்டத்தில் மீண்டும் கைத்தறி நெசவுப் பாடஅலகினை தொழிநுட்பப் பாடமாக அறிமுகப்படுத்துதல், கைத்தறி நெசவு தொழிற்துறை சார்ந்த கடன் திட்டங்களை வழங்குதல், அனைத்து நெசவு உற்பத்தி நிலையங்களையும் பிரதேச வாரியாக ஒன்றிணைத்து ஒரு கைத்தொழில் துறையாக செயற்படுத்துதல் போன்ற தீர்மானங்களை முன்வைப்பதன் மூலம் இம்மாவட்டத்தின் கைத்தறி நெசவாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினை களைத் தீர்க்க முடியும்.

**திறவுச்சொற்கள்:** *கைத்தறி நெசவுத் தொழிநுட்பம்; குடிசைக் கைத்தொழில்; நூல் நூற்றல்; நெசவாளர்*

# கொரோனா பெருந்தொற்றும் மாணவர்கள் எதிர்நோக்கும் ஆரோக்கியம்சார் பிரச்சினைகளும்:

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு

**கேஉரசி.வே., குலராஜசிங்கம்.ப.**

*மனைப்பொருளியல் அலகு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*

உலக சுகாதார அமைச்சு நாட்டு மக்களின் அழிவுக்குக் காரணமாக விளங்கிய கோவிட்-19 இனை 2020 மார்ச் 11 ஒரு தொற்று நோயாக அறிவித்தமையினை முன்னிட்டு பெரும்பாலான அரச பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், பிற தனியார் நிறுவனங்கள் உள்ளிட்ட கல்வி நிறுவனங்கள் தற்காலிகமாக மூடப்பட்டன. நீண்ட காலமாக இலங்கை பல்கலைக்கழகங்களில் நேருக்கு நேரான வகுப்பறைக் கற்றல், கற்பித்தலே நடைமுறையில் காணப்பட்டது. இந்த பாரம்பரியத்தினை உடைத்து புதுமையான நிகழ்நிலை சூழலில் கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்வற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. இச் செயற்பாடுகள் மாணவர்களிடையே புத்தம் புதிய சூழலை உருவாகியுள்ளது. ஆய்வுப்பிரச்சினைகளாக குறுகியகால கற்றல்-கற்பித்தல் செயற்பாடுகள் இடம்பெறல், நிகழ்நிலை விரிவுரைகள் இடம்பெறல், போக்குவரத்து வசதியின்மை, வளப்பற்றாக்குறை போன்றன காணப்படுகின்றன. கொரோனா பெருந்தொற்றுச் சூழ்நிலையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கலைப்பீடத்தில் கல்வி கற்கும் இறுதி வருட மாணவர்கள் (ஆண்,பெண்) எதிர்நோக்குகின்ற ஆரோக்கியம்சார் பிரச்சினைகளை இனங்காணுதலை பிரதான நோக்கமாக கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்விற்காக 2018 ஆம் கல்வியாண்டில் சிறப்புக்கலையினை பயிலுகின்ற 366 இறுதி வருட மாணவர்களிலிருந்து எழுமாறாக 100 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டனர். ஆய்வு முறைமையான நேர்காணல், வினாக்கொத்து, கலந்துரையாடல் முறைகளும், இவ்வாய்வு தொடர்பான ஆய்வேடுகள், நூல்கள், ஆய்வு சஞ்சிகைகள், மற்றும் இணையத்தினூடாக பெறப்பட்ட தகவல்களையும் பயன்படுத்தி இவ்வாய்வானது பண்புசார் விபரணமுறையில் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. மாணவர்க ளிடத்தில் உடல் ரீதியான விளைவுகளாக கண் நோ 95%, கண் எரிவு 80%, முதுகு வலி 90%, களைப்பு 70%, பசியின்மை 50%, நித்திரையின்மை 60%, காது வலி 90%, குடற்புண், மலச் சிக்கல், தலைவலி, தலைச்சுற்று, மாதவிடாய் பிரச்சினை, ஒவ்வாமை என்பவற்றினையும், உளரீதி யான விளைவுகளாக மனக்குழப்பம் 92%, வெறுப்பு 89%, கவலை 90%, கோபம் 72%, மனச் சோர்வு 65%, விரக்தி 75%, மன அழுத்தம் 83%, பயம் 100%, பதட்டம், சுயநம்பிக்கை குறைவடை தல் என்பன இனங்காணப்பட்டுள்ளதுடன் ஆரோக்கியம்சார் பிரச்சினைகள் வகுப்பறைக் கற்றல்-கற்பித்தல்களில் பெறப்பட்ட பரீட்சைப் பெறுபேறுகளிலிருந்து வேறுபடுதல், இறுதி வருட மாணவர்க ளின் மனநிலையில் மாற்றத்தை ஏற்படுத்தல் என்பவற்றினை அவதானிக்கக் கூடியதாகவும் அவர்களுடைய கல்வியில் மட்டுமன்றி உடல், உள ஆரோக்கியத்திலும் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. ஒவ்வொரு மனிதனுடைய வாழ்விலும் உடல் உள ஆரோக்கியமானது ஒன்றோ டொன்று தொடர்புபட்டிருப்பதைப் போல ஆரோக்கியத்திற்கும் கல்விக்குமான தொடர்பு ஒன்றோ டொன்று தொடர்புடையதாக காணப்படுகின்றன. ஆகவே பெருந்தொற்று நிலை தொடருமாக இருந்தால் பல்கலைக்கழக மாணவர்கள் ஒவ்வொருவரும் தமது ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டுமென்பதனை எடுத்துரைப்பதுடன், அடுத்து வரும் சந்ததியினருக்கு விழிப்புணர் வினை ஏற்படுத்துதல் மற்றும் உடல் உள பிரச்சினைகளிலிருந்து அவர்களை வெளிக்கொணரல், விடுதிக ளில் வசதிவாய்ப்புக்களை ஏற்படுத்தல், வீட்டிலிருந்து நிகழ்நிலைக் கல்வி நடவடிக்கைகளை திறம் பட தொடர்வதற்கு மாணவர்கள், விரிவுரையாளர்களுக்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கி கொடுத்தல், மாணவர்களது நலனில் அக்கறை கொண்ட ஆசிரிய சமூகத்தினை உருவாக்கு தல், அரசின் கீழ் இயங்கும் பல்கலைக்கழகம் என்பதால் மாணவர்களுக்கான வசதிகள் பலவற்றினை ஏற்படுத்திக்கொடுத்தல், இலவச இணைய இணைப்பினை வழங்குதல், உளவியல் ஆலோசனை களையும், வழிகாட்டல்களையும் வழங்குதல் போன்ற விடயங்களை உருவாக்குதல் மற்றும் நடைமுறைப் படுத்தல் என்பவற்றின் மூலம் எதிர்கால மாணவர்களின் உடல் உள ஆரோக்கியத்தினை பாதுகாக்க வழிகோல முடியும்.

**திறவுச்சொற்கள்:** *ஆரோக்கியம்; உளப்பிரச்சினை; கொரோனா; நிகழ்நிலை கற்றல்*

# History, Heritage and Cultural Diversity

# ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட மரபுரிமைச்சின்னங்கள் ஓர் ஆவணப்படுத்தல்

**அலெஸ்ரிகா.ஸ்.**

*வரலாற்றுத் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*

இலங்கையின் வடபகுதிகளில் உள்ள தீவுக் கூட்டங்களுள் ஊர்காவற்றுறையும் ஒன்றாகும். இன்று வரலாற்றுத் தடயங்களை தாங்கியும் கைவிடப்பட்ட நிலையிலும் உள்ள இத்தீவானது பாளி இலக்கியங்களில் 'சூகரதித்த' என்றும், பல்லவ சோழ நிர்வாகக் குறிப்புகளில் 'ஊராத்துறை' எனும் இடப்பெயர் மூலம் அடையாளம் காணமுடிகிறது. பண்டுதொட்டு அறியப்பட்டு வந்த இப்பிராந்தியம் காலணித்துவ ஆட்சியாளர்கள் காலத்தில் நிர்வாக, வர்த்தக, பண்பாட்டு ரீதியில் கட்டியெழுப் பப்பட்டது. எனினும் காலணித்துவ ஆட்சியாளர்களது கலையழிப்புக் கொள்கை மற்றும் உள்நாட்டு போர்கள், இடப்பெயர்வுகளின் காரணமாக இன்றளவும் கைவிடப்பட்ட நிலையில் இப்பிராந்தியம் காணப்படுகின்றது. இன்று இம்மண்ணில் காணப்படும் மரபுரிமைச்சின்னங்கள் ஊர்காவற்றுறை யின் வரலாற்றை கூறுவதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. இம் மரபுரிமைச் சின்னங்களின் மூலமாக ஊர்காவற்றுறையின் மறந்துபோன வரலாற்றை மீளக்கட்டியெழுப்புவதை இவ் ஆய்வு கவனம் செலுத்தியுள்ளது. ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பகுதிகளாக கரம்பொன், நாரந்தனை, சுருவில், ஊர்காவற்றுறை மற்றும் தம்பாட்டி, புளியங்கூடல் எனும் உட்கிராமப்பகுதியை அடையாளப்படுத்தி இங்குள்ள தொட்டுணரக்கூடிய மரபுரிமைச்சின்னங்களை இனங்கண்டு அவை சார்ந்த வரலாற்று உண்மைத் தன்மைகளை தேடிக்கண்டறிந்து, தரவுகளை அலசி ஆராய்ந்து நேர்தியாக தொகுத்து ஆவணப்படுத்துவதன் மூலமாக ஊர்காவற்றுறை சார்ந்து அறியப்படாத அல்லது மறந்துபோன வரலாற்றுத் தடயங்களை மீளக்கட்டியெழுப்ப முடியும். இப்பிராந்தியத்தில் மேற்கொண்ட தொல்லியல் மேலாய்வில் பெருவாரியாக போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் காலத்தில் முக்கிய இருப்பிடமாக காணப்பட்டது என்பதை அவர்களால் எழுப்பப்பட்ட கோட்டைகள், கொத்தளங்கள், வர்த்தக துறைமுகம், தேவாலயங்கள், பாடசாலைகள் மற்றும் உள்ளூர் உயர் குடிகளால் கட்டமைக்கப்பட்ட கட்டடங்கள் சில இன்றளவும் சிதைந்தும், முழுமையாகவும் காணப் படுகின்றன. இதனால் கிடைக்கப்பெற்ற தொட்டுணரக்கூடிய மரபுரிமைச்சின்னனங்களை தேடிக் கண்டறிந்து அவைசார்ந்த தகவல்களை நூல்கள், ஆய்வுக்கட்டுரைகள், ஆவணப்படுத்தல்கள் மூலமாகவும் வினாக்கொத்து முறை, நேர்காணல், குழுக் கலந்துரையதடல் மற்றும் நேரடி அவதானிப்புக்கள் ஊடாக தரவுகளை பகுப்பாய்வு செய்து சேகரிக்கப்பட்டவற்றை ஆவணப் படுத்திய தன் மூலமாக இப்பிராந்திய மக்களுடைய 100 வருடங்களுக்கு மேற்பட்ட வரலாற்றுத் தகவல்கள் மக்களின் வாழ்வியலையும், பண்பாட்டுக்கோலத்தையும் காட்சிப்படுத்துவதில் இவ் ஆவணப் படுத்தல் ஒரு சிறந்த தளமாக திகழுகின்றது. பலராலும் அறியப்படாத இப் பிராந்திய மரபுரிமைச்சின்னங்ளில் கிறிஸ்தவ தேவாலயங்கள், இந்து ஆலயங்கள், கடற்கோட்டை மற்றும் காவல் அரண் சார்ந்த கட்டடங்கள், கல்வெட்டுக்கள், ஊர்காவற்றுறை துறைமுகம் மற்றும் சுங்கத் திணைக்களம் சார்ந்த சிதைவுகள், சமாதிகள், புறாக்கூடு, தொல்லியல் சின்னங்கள், மக்களுடைய வாழ்வியல் சின்னங்கள் (சங்குமால், புராதன வீடுகள், புராதன வீதிகள், பாவனைப் பொருட்கள்) என்பவற்றை ஆவணப்படுத்தியதன் மூலமாக இவற்றின் முக்கியத்துவம் உணரப்பட்டதுடன் மக்களுக்கு மரபுரிமைச்சின்னங்கள் சார்ந்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதும், மேலும் அழிவிலுள்ள மரபுரிமைச்சின்னங்களை பாதுகாத்து முகாமைத்துவம் செய்வது இன்றைய காலகட்டத்தில் அவசியமானதொன்றாகும்.

**திறவுச்சொற்கள்:** *ஆவணப்படுத்தல்; ஊர்காவற்றுறை; பாரம்பரியம்; மரபுரிமைச் சின்னங்கள் ; வாழ்வியல்*

# ஊர்காவற்றுறையில் கத்தோலிக்க மதத்தின் தோற்றமும் வளர்ச்சியும்

**மதுரா.செ., அருந்தவராசா.க.**
*வரலாற்றுத் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*

கி.பி 16ஆம் நூற்றாண்டுக் காலமானது இலங்கை வரலாற்றிலே மிகுந்த முக்கியத்துவம் பெற்ற காலப்பகுதியாக விளங்குகின்றது. ஏனெனில் இக்காலப்பகுதியிலே போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், பிரித்தானியர் போன்ற ஐரோப்பிய நாட்டவர்கள் இலங்கையிலே தமது ஆதிக்கத்தினை ஏற்படுத்திய தோடு அரசியல், பொருளாதார, சமய, சமூக, பண்பாட்டு ரீதியாகப் பல்வேறு மாற்றங்களையும் விளைவுகளையும் ஏற்ப்படுத்தியிருந்தனர். இத்தகைய மாற்றங்களும் விளைவுகளும் இன்றுவரை இலங்கை வரலாற்றிலே செல்வாக்குச் செலுத்தி வருகின்றமையைக் காணமுடிகின்றது. இவ் ஐரோப்பிய நாட்டவர்களுள் போர்த்துக்கேயர்களது ஆட்சிக்காலம் மிக முக்கியத்துவம் பெறுகின்றது. ஏனெனில் இலங்கையிலே முதன்முறையாக கத்தோலிக்க மதத்தின் பரவலுக்கும் வளாச்சிக்கும் வித்திட்ட இனத்தவர்களாக இவர்கள் காணப்படுகின்றனர். இவர்களுடைய வருகைக்கு முன்பே கத்தோலிக்க மதத்தின் செல்வாக்கு இலங்கையில் ஓரளவு காணப்பட்டாலும் ஓர் ஒழுங்கான நிறுவனமயப்படுத்தப்பட்ட கத்தோலிக்க மதத்தின் பரவலுக்கு வித்திட்டவர்களாக இவர்கள் காணப்படுகின்றார்கள். இதன் விளைவாக இன்று இலங்கையிலே கத்தோலிக்க மதமானது மிகுந்த முக்கியத்துவம் பெற்ற மதமாக விளங்குகின்றது எனலாம். கி.பி 1618 இலே யாழ்ப்பாண அரசைக் கைப்பற்றிய போர்த்துக்கேயர் யாழ்குடாநாட்டிலும் அதன் அயற் தீவுகளிலும் பல்வேறு வழிகளின் மூலம் கத்தோலிக்க மதத்தினைப் பரப்பும் நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டனர். இப்பின்னணியிலே போர்த்துக்கேயரது ஆட்சி இலங்கையில் முடிவடைந்த பின்னரும் கத்தோலிக்க மதமானது யாழ் குடாநாட்டில் மட்டுமன்றி இலங்கை முழுவதிலும் செல்வாக்குப் பெற்று விளங்குகின்றது. அதனடிப்படையில் யாழ் குடாநாட்டின் அயற்தீவுப் பகுதிகளில் ஒன்றான ஊர்காவற்றுறையானது பண்டைய காலம் முதல் இலங்கை வரலாற்றிலே வரலாற்றுச் சிறப்பும் தொன்மையும் மிக்க இடமாகக் காணப்படுகின்றது. ஊர்காவற்றுறையில் போர்த்துக்கேயர் காலத்திலே முதன்முறையாக கத்தோலிக்க மதமானது வேரூன்றத் தொடங்கியது. அவர்களைத் தொடர்ந்து வந்த ஐரோப்பிய நாட்டவரான ஒல்லாந்தரினால் பல்வேறு அடக்குமுறைகளுக்கு உட்பட்டிருந்தாலும் அவர்களின் பின்பு வருகை தந்த பிரித்தானியர் காலத்திலே வழங்கப்பட்ட பூரண மதச்சுதந்திரத்தின் மூலமாக மீண்டும் புத்தெழுச்சி பெற்றுக் கொண்டது. இன்று ஊர்காவற்றுறையில் கத்தோலிக்க மதமானது முதன்மை பெற்றுக் காணப்படுவதுடன் இங்கு வாழும் மக்களில் பெரும்பான்மையினர் கத்தோலிக்கர்களாகவே காணப்படுகின்றனர். குறிப்பாக கத்தோலிக்க மதமானது இங்கு செல்வாக்குடன் காணப்பட்டாலும் அம் மதமானது இந்து மதத்திற்கோ அல்லது பிற மதங்களுக்கோ மத வழிபாடுகளுக்கோ எவ்விதப் பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். இவ்வாறு ஊர்காவற்றுறையில் கத்தோலிக்க மதம் செல்வாக்குப் பெற்று விளங்குவதற்கு இங்குள்ள கத்தோலிக்க மத நிறுவனங்களினதும் மக்களினதும் செயற்பாடுகள் அடிப்படையாக உள்ளன. இவ் ஆய்வானது வரலாற்று அணுகுமுறையில் களஆய்வு, நேர்காணல், அறிக்கைகள், நூல்கள் மற்றும் சஞ்சிகைகளை அடிப்படையாகக் கொண்டு ஊர்காவற்றுறையில் கத்தோலிக்க மதத்தின் செல்வாக்கை எடுத்துக்காட்டும் வகையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**திறவுச்சொற்கள் :** *ஊர்காவற்றுறை; கத்தோலிக்க மதம்; போர்த்துக்கேயர்*

# கைதடி நாவற்குழி தெற்குப் பிரதேசத்தின் பாரம்பரிய மீன்பிடித்தொழில் அன்றும் - இன்றும்

**கேதீஸ்வரி.கு.**
*வரலாற்றுத் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*

நமது முன்னோரின் அடையாளங்கள் தனித்துவமானவை, போற்றிப் பாதுகாக்கப்பட வேண்டியவை. ஆனால் இன்றைய காலகட்டத்தில் அவை மறக்கப்பட்டும், மறைக்கப்பட்டும், அழிக்கப்பட்டும் வருகின்றன. அதிலும் குறிப்பாக தமிழரின் பாரம்பரிய பண்பாட்டு அடையாளங்கள் மறைந்தும், அழிந்தும் போகின்றன. பாரம்பரியமாக பின்பற்றப்பட்டு வந்த சடங்குகள், சம்பிரதாயங்கள், விழாக்கள், தொழில்கள் என்பன உலகமயமாக்கலின் மூலம் பல்லினப் பண்பாட்டின் தோற்றத்துடன் அழிவடைந்து அல்லது வேறு பண்பாட்டுடன் கலப்புற்று புதிதாக ஒரு பண்பாடு தோற்றம் பெற அடியிட்டுக் கொடுத்துள்ளது. எனவே இதனைக் கருத்திற் கொண்டு உலக நாடுகள் ஒவ்வொன்றும் 1970களிற்கு பின்னர் தமது மூதாதையினரின் பாரம்பரிய பண்பாட்டு அம்சங்களை மீளுருவாக்கம் செய்வதில் அதிக அக்கறை காட்டி வருகின்றன. இப்பின்னணியில் இவ்வாறு மறைந்து போகும் அல்லது மறந்து போகும் பாரம்பரியங்களை ஆராய்ந்து ஆவணப்படுத்துவது ஒவ்வொருவரினதும் கடமை ஆகும். அதிலும் தொன்றுதொட்டு பின்பற்றப்பட்டு வந்த தொழில் முறைகளில் முன்னோரின் பாரம்பரிய மீன்பிடித் தொழில் மறைந்து போய் இன்று பல மாற்றங்கள் ஏற்பட்டுவிட்டன. பாரம்பரிய மீன்பிடித் தொழிலை அடையாளப்படுத்து வதுடன் அது தொடர்பாக மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதும் பெருமை வாய்ந்த இம் மீன்பிடித்தொழிலை எதிர்கால சந்ததியினரும் அறிந்து பயன்பெறச் செய்வதும் இவ்வாய்வின் நோக்கங்களாகும். அந்தவகையில் நம் முன்னோரின் பாரம்பரிய மீன்பிடித் தொழிலின் தோற்றம், வளர்ச்சி மற்றும் பாரம்பரிய மீன்பிடி உபகரணங்கள், மீன்பிடியில் ஏற்பட்டுவரும் மாற்றங்கள், அதற்கான காரணங்கள் மற்றும் அச்சமூக மக்கள் எதிர் நோக்கும் சவால்கள் என்ன என்பதை கைதடி நாவற்குழி தெற்கு (கோவிலாக்கண்டி துறை) பிரதேசத்தை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டது. இவ் ஆய்வில் பாரம்பரிய மீன் பிடித்தொழிலின் தோற்றம் என்பது வரலாற்றுதய காலத்தில் இருந்தே தோற்றம் பெற்று விட்டது என்றும் அதன் வளர்ச்சிப் போக்கை இலக்கிய தொல்பொருள் மூலாதாரங்கள் மட்பாண்டங்கள், கல்வெட்டுக்கள், நாணயங்கள், பண்டைய மீன்பிடி சார் பாவனைப் பொருட்கள் என்பவற்றை ஆதாரமாகக் கொண்டு வெளிப்படுத்துவதுடன் மீன் பிடிக்குச் சாதகமாக அமைந்த புவியியல் காரணிகளையும், இலங்கையின் மீன்பிடித் தொழிலின் வளர்ச்சி, கைதடி நாவற்குழி தெற்குப் பிரதேசத்தின் மீன்பிடித் தொழிலின் தோற்றம் , வளர்ச்சி , பாரம்பரிய மீன்பிடி சாதனங்கள், வலைகள் , பாரம்பரிய மீன்பிடிக் கான்கள், தற்போதைய மீன்பிடிக் கான்கள், பாரம்பரிய மீன் பிடித் தொழிலும், தற்போதைய மீன்பிடித் தொழிலினதம் அனுகூலம், பிரதிகூலம், பாரம்பரிய மீன்பிடித் தொழில் மறைந்து போவதற்கான காரணங்கள், மீனவ சமூகத்தின் வாழ்வியல் முறைகள், கடற்றொழிலில் ஈடுபடும் போது மீனவர்களுக்கு ஏற்படும் நோய்கள், அவர்கள் எதிர் நோக்கும் சவால்கள், அப்பிரச் சினைகளுக்கான தீர்வுகளும் ஆலோசனைகளும் என்பன அவர்களுக்கு கிடைப்பதற்கான வழி முறைகள் என்பவற்றை வெளிப்படுத்துவதாக இவ்வாய்வு அமைந்துள்ளது.

**திறவுச்சொற்கள்:** *தென்மராட்சி; பாரம்பரியம்; மீனவச்சமூகம்; மீன்பிடித்தொழில்; மீன்பிடி உபகரணங்கள்*

# தொன்மைக் குடியிருப்புக்களில் இரணைமடு ஆற்றுப்படுக்கை

**ஜென்சன்.வி.**
*வரலாற்றுத் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*

இலங்கையில் வறண்ட பிரதேசத்தில் வாழும் மக்களுக்கு உயிர் நாடியாக அமைவது குளத்து நீர்ப்பாசனமாகும். ஆரம்பகாலம் தொட்டு அரசாண்ட மன்னர்கள் மக்களின் நல்வாழ்வுக்காக குளங்களை கட்டியுள்ளனர். இத்தகைய குளங்களே மக்களின் பண்பாட்டு நாகரிக உருவாக்கத்திற்கு வித்திட்டன. அவ்வாறு தோற்றம் பெற்ற ஒரு ஆற்றுப்படுக்கையாக இரணைமடு ஆற்றுப்படுக்கை உள்ளது. இரணைமடு ஆற்றுப்படுக்கையானது வரலாற்றுக்கு முற்பட்ட காலம் தொட்டு தற்காலம் வரைக்கும் முக்கியத்துவம் பெற்ற ஒரு ஆற்றுப்படுக்கையாக காணப்படுகின்றது. வட இலங்கையி னுடைய நாகரிக உருவாக்கத்தினை வெளிச்சம் போட்டு காட்டும் அம்சமாக இவ் இரணைமடு சார்ந்த அம்சங்கள் காணப்படுகின்றன. தமிழர் பண்பாடுகளையும் நாகரிக உருவாக்கங்களையும் அடையாளப்படுத்தி நிற்கும் முதல் இடமாக இவ் ஆற்றுப்படுக்கையினை அவதானிக்க முடிகின்றது. இரணைமடுக் குளமானது ஆரம்பத்தில் கற்கால மக்கள் வாழ்வதற்கு ஏற்ற பகுதியாக விளங்கியுள்ளது. கனகராஜன் ஆற்றுப்படுக்கையினை அடிப்படையாகக் கொண்டு செழிப்பான பகுதியாகவும், நீர் உணவு போன்றன இவ்விடத்திலே கிடைத்தமையினால் இங்கே கற்கால மக்கள் வாழ்வதற்கான சூழல் காணப்படுவதனை வரலாற்றாசிரியர்கள் எடுத்துக் காட்டியுள்ளனர். குறிப்பாக மேலைப்பழங்கற்கால, குறுணிக்கற்கால, பெருங்கற்கால பண்பாட்டு அம்சங்களை அடையாளம் காண முடிந்ததுடன் இதன் பின்னணியில் தமிழர்களின் வரலாற்றுத் தொண்மையையும், தமிழர்களின் பூர்வீகத்தையும், தமிழர்களின் பண்பாட்டையும், தமிழர்களின் மதங்களையும், தமிழர்களின் மொழி சார்ந்த நடவடிக்கைகளையும் வெளிச்சமிட்டுக்காட்டும் பிராந்தியமாக இப்பிராந்தியம் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. ஆரம்பகாலம் முதலே நீர்வளமிக்க செழிப்பான பகுதியாக இப்பிராந்தியம் காணப்படுவதனை அவதானிக்கலாம். இயற்கையாகவே குளம் அமைப்பதற்கான வளங்களை கொண்டிருந்ததன் பின்னணியிலேதான் செயற்கையான குளம் இப்பகுதியில் அமைக்கப்பட்டது. குறிப்பாக இரணைமடுவின் தரைத்தோற்ற இயல்பானது இயற்கையாகவே குளம் அமைப்பதற்கான சாதக தன்மையினையும் கனகராஜன் ஆற்றுப் படுக்கையின் கீழ் இரணைமடு பள்ளமான பகுதியாகவும், நீர் தேங்கி நிற்கும் பகுதியாகவும் காணப் பட்டமையால் பிரித்தானியர் ஆட்சியில் இரணைமடு ஆற்றுப்படுக்கையை மையமாகவைத்து குளம் அமைக்கும் முறைமை ஏற்படுத்தப்பட்டது. குறிப்பாக 1885 இல் H.T.S வோட் என்பவரின் திட்டத்திற்கு அமைய 1886 இல் ஹென்றி பாக்கர் என்பவரால் குளத்திற்கான அறிக்கையும், செயற்றிட்டமும் ஏற்படுத்தப்பட்டு 1900 ஆம் ஆண்டு பிரவுண்ட் என்பவர் இத்திட்டத்தை அமுல்படுத்தினார். இந்த ஆய்வின் மூலம் மேற்குறித்த இடங்கள் அடையாளப்படுத்தப் பட்டுள்ளதுடன் ஆய்வினை முழுமையடையச் செய்யும் பொருட்டு இலக்கிய மீளாய்வுகள், களவாய்வு, நேர்காணல் மேற் கொள்ளப்பட்டு தகவல்கள் திரட்டப்பட்டு ஆய்வானது முழுமைப் படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் இரணைமடு பிராந்தியத்தின் வரலாற்று முக்கியத்துவத்தையும் தொன்மையையும் புரிந்து கொள்ள முடியும்.

**திறவுச்சொற்கள்:** *இரணைமடு; கிளிநொச்சி; குடியிருப்புக்கள்; வரலாற்றுக்கு முற்பட்டகாலம்; ஆற்றுப்படுக்கை*

# தென்மராட்சிப் பிரதேசத்தில் அமைந்துள்ள பழமை வாய்ந்த இந்து ஆலயங்கள் கலாசார சுற்றுலாவில் பெறுகின்ற வகிபாகம்

**சர்மிளா.சு.**
*வரலாற்றுத் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*

உலகலாவிய ரீதியிலே வளர்ச்சியடைந்து வரும் ஒரு துறையாகவும், உலக நாடுகளுக்கு வருமானத்தை பெற்றுக்கொடுக்கின்ற ஒரு துறையாகவும் சுற்றுலாத்துறை காணப்படுகின்றது. இதிலும் சிறப்பாக இலங்கை நாட்டைப் பொறுத்த வரையில் பொருளாதார வளர்ச்சியில் பங்கெடுக்கும் துறையாக மட்டுமன்றி மக்களின் பண்பாட்டுப் பாரம்பரியங்களை பாதுகாப்பதுடன் அதனை உலகறியச் செய்யும் ஊடகமாகவும் சுற்றுலாத்துறை காணப்படுகின்றது. ஏனெனில் இலங்கை நாடானது பல்லினப் பண்பாடு கொண்ட நாடாக காணப்படுவதால் இங்கு ஒவ்வொரு மத, இனத்தவர்களுக்கும் வெவ்வேறான கலாசாரங்கள், பண்பாடுகள் காணப்படுகின்றன. அந்தவகையிலே யாழ்ப்பாண மாவட்டத்தில் தென்மராட்சிப் பகுதியானது பழம்பெரும் பாரம்பரியங்களை தன்னுள் கொண்டமைந்த பிரதேசமாக காணப்படுகிறது. எனினும் அபிவிருத்தி, நாகரிகப் போர்வைக்குள் சிக்கி அழிவடைந்து போய்க்கொண்டிருக்கின்ற பண்பாடு, கலாசாரம் சார்ந்த பல்வேறுபட்ட விடயங்களை தென்மராட்சியில் அமைந்துள்ள பழமை வாய்ந்த இந்து ஆலயங்களின் ஊடாக எடுத்துக்கூறி அவை கலாசார சுற்றுலாவில் பங்கெடுக்கும் விதத்தினை ஆராய்ந்து– கலாசார சுற்றுலாவின் மூலம் மறைந்துபோகும் வரலாறுகளையும், பண்பாட்டு பாரம்பரியங்களையும் வெளிக்கொண்டு வருவது இவ்வாய்வின் நோக்கமாகும். இதற்காக தென்மராட்சியின் வரணி, சாவகச்சேரி, மட்டுவில், மிருசுவில், மீசாலை, கச்சாய், விடத்தற்பளை, அல்லாரை, தவசிகுளம், இராமாவில் போன்ற பிரதேசங்களில் உள்ள காலத்தால் முற்பட்ட ஆலயங்களை தெரிவுசெய்து அவற்றின் வரலாறுகள் மற்றும் விழாக்கள், கொண்டாட்டங்கள், சமய நம்பிக்கைகள் என்பவற்றினை– தென்மராட்சிப் பிரதேசம் சார்ந்த நூல்கள், ஆலயங்களில் வெளியிடப்பட்ட கும்பாபிஷேக மலர்கள், நேர்காணல், குழுக்கலந்துரையாடல் மற்றும் நேரடி அவதானிப்பு என்பவற்றின் மூலமாக தரவுகள் சேகரிக்கப்பட்டன. இதனூடாக காலவோட்டத்தில் மறக்கப்பட்ட சில சம்பிரதாயங்கள், பழக்கவழக்கங்கள், பண்பாடுகள் எனபவற்றினை அறிந்து அவற்றினை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் கவனத்தை ஈர்க்கும் வகையில் தரப்படுத்தி கலாசார சுற்றுலாவின் மூலம் இவற்றினை மீளவும் உருவாக்கி தென்மராட்சி மண்ணில் கலாசார சுற்றுலாவை ஊக்கப்படுத்துவதோடு மட்டுமல்லாது மக்களின் பண்பாட்டு பாரம்பரியங்களை பேணுவதுடன் அவற்றினை உலகறியச் செய்யவும் முடியும். முன்னைய காலங்களில் ஆலயங்களை மையப்படுத்தியே கிராமியக்கலைகள் வளத்தெடுக்கப்பட்டன. ஆனால் இன்று நாகரிக மோகத்தினால் கிராமிய கலைகள் முற்றுமுழுதாக இளையசந்ததியினரால் மறக்கப்பட்டு வருகின்றது. எனவே தென்மராட்சிப் பிரதேச ஆலயங்களை மைய்படுத்தி சுற்றுலாப் பயணிகளைக் கவரும் ஆலயங்களில் உள்ள தொட்டுணரக்கூடிய மரபுரிமை அம்சங்கள், தொட்டுணரமுடியாத மரபுரிமை அம்சங்கள் பற்றிய ஒரு பார்வையுடன் அவற்றினை மையப்படுத்தி கலாசார சுற்றுலாவை வளர்ப்பதற்கான சாதகமான காரணிகளையும் அவற்றிலுள்ள இடர்பாடு களையும் ஆராய்ந்து அவ் இடர்பாடுகளை தீர்ப்பதற்கான சில ஆலோசனைகளையும் இவ்வாய்வு முன்வைக்கின்றது.

**திறவுச்சொற்கள்:** *இந்து ஆலயங்கள்; கலாசாரம்; கலாசாரசுற்றுலா; தென்மராட்சி; வரலாற்றுப்பழமை*

# Society, Community Participation and Social Work

# Diaspora's Contribution to Community Development: A Sociological Study Based on the J/69 Grama Niladhari Division, Gurunagar

**Vegini .G., Jeevasuthan. S.**
*Department of Sociology, University of Jaffna, Sri Lanka*

One who leaves forcefully from his motherland and enjoys scattered life in foreign countries is called diaspora. The civil war in Sri Lanka is considered a major factor for the increase in Sri Lankan diaspora who speak the Tamil language and maintain strong ties with their community in Sri Lanka. The Tamil diaspora engages in various community activities in their native places especially in the Northern and Eastern parts of Sri Lanka. The main aim of this study is to evaluate the contribution of the Tamil diaspora to the community development of the J/69 Gurunagar Grama Niladhari Division. This descriptive study adopts a mixed method. A hundred samples are selected from the beneficiaries of the diaspora in the GN Division by snowball sampling method. Data collection methods include questionnaires, focus group discussions, case study, key informant interviews and direct observations. Quantitative data is used to analyze the descriptive statistical methods by using the SPSS software and qualitative data is used to analyze the various themes of this study. Social welfare services such as educational and occupational facilities, religious contribution, contribution of community level organizations and facilities for destitute people have been carried out by the particular GN Division during the pre- and post-war periods. The aforementioned activities play a major role in community development. 98% of the participants state that the social welfare services done by the diaspora aids community development. Such contributions have led to educational, vocational, sports, community and other developments of the said community. Clubs and organizations of the diaspora play a major role in developing social welfare services in the said community. According to this study, the activities assisted by the diaspora have had positive impacts on the said community. It is identified that the people in this community anticipate obtaining a sustainable and prolonged life from the diaspora. This study investigates whether the contributions of the diaspora has had an impact on the formation of diaspora identity and the development of the said community.

**Keywords:** *Community Development; Diaspora's contribution; Social Welfare Services; Tamil Diaspora*

# பதின்மவயதுத் திருமணங்களும் குடும்ப ஒழுங்கமைவின்மையும்: தென்மராட்சி பிரதேசசெயலகப் பிரிவிற்குட்பட்ட பதின்மவயதில் திருமணமான பெண்களை அடிப்படையாகக் கொண்ட ஒரு சமூகவியல் ஆய்வு

**கனிசிகா.சு.**

*சமூகவியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*

இந்த ஆய்வு பதின்மவயதுத் திருமணங்களுக்கான காரணங்கள் மற்றும் அது குடும்ப ஒழுங்கமைவின்மையில் செல்வாக்குச் செலுத்தும் வடிவங்கள் என்பவற்றினை இனங்காண்பதனை நோக்கமாகக் கொண்டும் பதின்மவயதினரிடையே திருமணத்திற்கான உந்தல்(காரணிகள்) எவ்வாறு அமைந்துள்ளது? குடும்பத் தெழிற்பாட்டில் ஏற்படுத்திய மாற்றங்கள் யாவை? மற்றும் தடுப்பாய்வு நடவடிக்கைகள் யாவை? போன்ற வினாக்களுக்கு விடையளிப்பதாகவும் அமைந்துள்ளது. இது ஒரு விபரண ஆய்வாகும். இங்கு கலப்பு முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. முதலாம் நிலைத் தரவுகளாக நேர்காணல், வினாக்கொத்து முறை, விடய ஆய்வு மற்றும் பிரதான தகவல் தருநருடனான நேர்காணல் என்பனவும் இரண்டாம் நிலைத் தரவுகளாக முன்னைய ஆய்வுகள், சஞ்சிகைகள், சுகாதார அமைச்சின் தரவுகள், பிரதேசசெயலகத் தரவுகள், என்பனவும் பயன்படுத்தப்பட்டுள்ளன. வினாக்கொத்து முறைக்காக பதின்மவயதில் திருமணம் செய்துகொண்ட தற்போது குடும்பநல உத்தியோகத்தர்களின் கண்காணிப்பிலுள்ள 25 பெண்களும் மாதிரிகளாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். அத்தோடு ஆய்விற்காக பத்து விடய ஆய்வுகளும் மூன்று பிரதானதகவல் தருநருடனான நேர்காணலும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. வினாக்கொத்தின் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட தரவுகள் அளவுசார் பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டுள்ளது. இவை விபரணப் புள்ளிவிபரவியல் முறையிலும் Excel மென்பொதி மூலமும் பண்புசார் தரவுகள் கருப்பொருள் ரீதியான தரவுப் பகுப்பாய்விற்கும் உட்படுத்தப்பட்டுள்ளன. இவ் ஆய்வின் அடிப்படையில் நோக்குகின்றபோது, பெரும்பாலானவர்கள் பதின்மவயதில் திருமணம் செய்வதற்கு காதல்(96%) காரணமாக அமைந்துள்ளதுடன் 56% ஆனவர்களுக்குத் தொலைபேசிப் பாவனையும் காரணமாக அமைந்துள்ளது. 32% ஆனவர்களுக்கு கல்வியறிவு குறைவாகக் காணப்படுதல் மற்றும் 26% ஆனவர்களுக்கு சட்டம் தொடர்பான அறிவின்மை போன்ற காரணங்களும் பதின்மவயதுத் திருமணத்தில் செல்வாக்குச் செலுத்தியுள்ளது. மேலும் குடும்ப வறுமை, பாடசாலை இடைவிலகல், பாதுகாப்பின்மை போன்ற காரணிகளும் செல்வாக்குச் செலுத்துவதனை இவ் ஆய்வில் இனங்காணப்பட்டுள்ளது. குடும்பத் தீர்மானமெடுத்தலில் பெரும்பாலும் ஆண்களே(52%) செல்வாக்குச் செலுத்துகின்றனர். 76% ஆனவர்களுக்கு சொந்த வீடு இல்லை. வீடற்றவர்கள் பெரும்பாலானவர்கள்(89%) உறவினர்களுடன் வசிக்கின்றனர். பெரும்பாலான(72%) பெண்களது கணவர்மார் கூலித் தொழிலில் ஈடுபடுகின்றனர். பெரும்பாலான குடும்பங்களில் மாதாந்த ஊழிய வருமானம் 10000-15000 ஆகக் காணப்படுகின்றது. இவர்களுக்கு அன்றாட வாழ்க்கைச் செலவீனம்(92%) என்பது முதன்மையான பிரச்சினையாகவும் காணப்படுகின்றது. 84% ஆன பெண்கள் பதின்மவயதுக் கர்ப்பத்திற்குள்ளாகியிருக்கின்றனர். 48% ஆனவர்கள் கருத்தடை முறைகளைப் பயன்படுத்தியுள்ளனர். இவ் ஆய்வின்படி அனைத்துப் பெண்களும்(100%) ஏதோ ஒரு வன்முறையினை எதிர்கொண்டுவருகின்றனர். பெண்கள் பெரும்பாலும் குடும்பத்தில், பொருளாதாரம்(48%) தொடர்பான காரணங்களினாலேயே வன்முறையினை எதிர்கொள்கின்றனர். அத்துடன் கணவன் - மனைவி உறவுநிலை, குடும்பப் பராமரிப்பு, தீர்மானமெடுத்தல், சீதனம், என்பனவும் குறிப்பிட்ட அளவில் வன்முறையில் செல்வாக்குச் செலுத்துகின்றது. மேலும் கைவிடப்படல், மணமுறிவு, குடும்ப வன்முறை, கணவன் மனைவிக்கு இடையிலான விரிசல் என்பன இத்திருமணங்களினால் குடும்பத்தில் ஏற்பட்ட விளைவுகளாகக் காணப்படுகின்றன. ஆய்வின்படி பதின்மவயதுத் திருமணங்களைக் குறைப்பதற்கான தீர்வுநடவடிக்கைகளைப் பெற்றுக் கொடுப்பதன்வழி பதின்மவயதுத் திருமணங்களைக் குறைத்துக்கொள்ள முடியும்.

**திறவுச்சொற்கள் :** *பதின்மவயதுத் திருமணம்; குடும்ப ஒழுங்கமைவின்மை; காதல்; குடும்பத் தொழிற்பாடு; பதின்மவயதுக் கர்ப்பம்*

# கிராமியப் பெண் விவசாயிகள் எதிர்கொள்ளும் வாழ்வாதாரப் பிரச்சினைகள்: சேமமடு கிராம சேவகர் பிரிவினை அடிப்படையாகக் கொண்ட ஒரு சமூகவியல் ஆய்வு

**ஜெயப்பிரியா.த.**

*சமூகவியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*

இலங்கை கிராமியப் பெண்களின் முக்கிய வாழ்வாதாரமாக விவசாயம் காணப்படுகின்றது. போருக்குப் பின்னதான இலங்கைச் சூழமைவில் பெண் விவசாயிகள் தீவிரமான வாழ்வாதாரப் பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்து வருகின்றனர். கிராமியப் பெண் விவசாயிகள் எதிர்கொள்ளும் வாழ்வாதாரப் பிரச்சினைகள் எனும் ஆய்வானது வவுனியா பிரதேச செயலகர் பிரிவுக்குட்பட்ட சேமமடு கிராம சேவையாளர் பிரிவினை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆய்வுப் பிரதேசத்தில் மூன்று தசாப்த காலங்களாக இடம்பெற்ற ஆயுதமோதல் பல்வேறு பாதிக்கப்பட்ட குழுக்களின் உருவாக்கத்திற்கு வழிகோலியுள்ளது. குறிப்பாக குடும்பத் தலைவர்களான ஆண்களின் இறப்பு மற்றும் ஆண்கள் வேலைக்காக நகரங்களுக்கு குடிபெயரவும் வழிசமைத்தது. கிராமியப் பெண் விவசாயிகள் எதிர்கொள்ளும் வாழ்வாதாரப் பிரச்சினைகளை மதிப்பிடுவதே இவ் ஆய்வின் பிரதான நோக்கமாகும். இந்த ஆய்வில் கலப்பு முறை ஆய்வு வடிவம் பயன்படுத்தப்பட்டுள்ளது. சேமமடு கிராம சேவகர் பிரிவினை சேர்ந்த 50 பெண் விவசாயிகள் நோக்கம் கருதிய மாதிரி அடிப்படையில் ஆய்விற்காக தெரிவு செய்யப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. வினாக்கொத்து, விடய ஆய்வு, பிரதான தகவல் தருநருடனான நேர்காணல் போன்ற ஆய்வுக் கருவிகள் ஊடாக முதலாம் நிலைத்தரவுகளும் ஆய்வுக்கட்டுரைகள், கமநலசேவை அறிக்கைகள், சஞ்சிகைகள் மற்றும் இணையத்தளங்கள் ஊடாக இரண்டாம் நிலைத்தரவுகளும் பெறப்பட்டுள்ளன. பண்புசார் தரவுகள் கருப்பொருள் உள்ளடக்கப் பகுப்பாய்விற்கும் அளவுசார் தரவுகள் சமூக விஞ்ஞானங்களுக்கான புள்ளிவிபரவியல் மென்பொதி (SPSS) மூலம் விபரணப் புள்ளிவிபரவியல் பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டுள்ளன. ஆய்வு முடிவுகளின்படி பெண் விவசாயிகள் பல்வேறு வாழ்வாதாரப் பிரச்சினைகளை எதிர்கொள்கின்றமை கண்டறியப்பட்டுள்ளது. ஆய்வுப்பிரதேசத்தில் உள்ள பெண் விவசாயிகளில் 68% ஆன பெண் விவசாயிகள் இயற்கை மூலதனத்தை அணுகுவதில் சவால்களை எதிர்கொண்டுள்ளனர். இதில் காணிப்பற்றாக்குறை, நீர்பற்றாக்குறை மற்றும் மண் வளமின்மை முக்கியப் பிரச்சினைகளாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. மேலும் 88% ஆனோர் மனித மூலதனம் தொடர்பான பிரச்சினைகளையும் எதிர்கொண்டுள்ளனர். இதனுள் விவசாய கூலிகளின் பற்றாக்குறை, அதிக நேர உடல் உழைப்பு மற்றும் உடல்நலக்குறைவு என்பன உள்ளடங்குகின்றன. அத்துடன் 90% ஆன பெண் விவசாயிகள் நிதி மூலதனத்தை அணுகுவதில் பிரச்சினைகளை எதிர்கொள்கின்றமையை ஆய்வு முடிவுகள் வெளிப்படுத்துகின்றன. இதனுள் மூலதனப்பற்றாக்குறை, போதிய வருமானமின்மை, சேமிப்புக்குறைவு, முறையான கடன்களை பெறுவதற்கான வசதிகள் குறைவாக காணப்படுகின்றமை, தேவையான நேரம் பணத்தை பெற்றுக்கொள்ள முடியாத நிலைமை மற்றும் தேவைப்படுகின்ற கடன் தொகையை பெற்றுக்கொள்ள முடியாத நிலைமை என்பன முக்கியப்பிரச்சினைகளாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. சந்தை வசதிகளை அணுகுவதில் உள்ள சிக்கல்கள், பெண் விவசாயிகளை சமூக பொருளாதார ரீதியாக வலுபடுத்தக் கூடிய சமுதாயமட்ட அமைப்புக்கள் காணப்படாமை, விவசாய உள்ளீடுகள் மற்றும் உற்பத்தி பொருட்களை பெற்றுக்கொள்வதில் உள்ள சிரமங்கள், வீட்டுப்பணியும் குடும்பப் பராமரிப்பும், காலநிலை மாற்றம், காட்டுவிலங்குகளின் தாக்கம், களைகள் மற்றும் பீடைகள் போன்றவை ஏனைய முக்கிய பிரச்சினைகளாக அடையாளப் படுத்தப்பட்டுள்ளன. பெண் விவசாயிகளை வலுவூட்டுதலையும் பெண் விவசாயிகளுக்கான சந்தை வாய்ப்புக்களை உரிய முறையில் ஏற்படுத்திக் கொடுப்பதையும் பெண் விவசாயிகளுக்கான சுய கடன்களை உரிய முறையில் வழங்கப்பட வேண்டும் என்பதையும் இந்த ஆய்வானது வலுவாக பரிந்துரைக்கின்றது.

**திறவுச்சொற்கள்:** *பெண் விவசாயி; மூலதனம்; யுத்தம்; வறுமை*

# முறுத்தானை வேடர்களின் வாழ்வாதாரம்: அண்மைக்கால மாற்றங்கள் பற்றிய விடயக்கலை ஆய்வு

**டிலக்சலா.து., சிறிகாந்தன்.ச.**
*சமூகவியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*

தொல்குடிகள் பற்றிய அண்மைக்கால சமூக-மானிடவியல் ஆய்வின் தொடர்ச்சியாக இவ்வாய்வானது இலங்கையின் தொல்குடியான வேடர்களின் வாழ்வாதாரக் கட்டமைப்பும் அவற்றில் நிகழ்ந்து வரும் மாற்றங்கள் தொடர்பாக ஆய்வு செய்கின்றது. மக்களின் வாழ்வாதார நடவடிக்கை என்பது குறிப்பிட்ட சுற்றுச் சூழமைவிற்கு ஏற்ப மக்கள் ஏற்படுத்திக்கொண்ட பண்பாட்டு தகவமைப்பு முறைமையாகும். எனினும் அண்மைக்கால சமூக அசைவியக்கத்தின் வழியாக மக்களின் பண்பாட்டு பாரம்பரியத்துடன் கூடிய வாழ்வாதார நடவடிக்கைகள் மாற்றமடைந்து வருகின்றன. இந்தவகையில் இவ்வாய்வின் பிரதான நோக்கம் மட்டக்களப்பு மாவட்டத்தின் கோரளைப்பற்று தெற்கு பிரதேச செயலத்திற்குட்பட்ட முறுத்தானை வேடுவர்களின் வாழ்வாதார கட்டமைப்பும் அவற்றில் நிகழ்ந்து வருகின்ற மாற்றங்களையும் அதற்கான காரணங்களையும் பகுப்பாய்வு செய்வதாக காணப்படுகின்றது. இது பண்புசார் முறையில் அமைந்த விபரண ஆய்வாகும். விடய ஆய்வு, பிரதான தகவல் தருநருடனான நேர்காணல், பங்குபற்றல் அவதானம் ஆகியவற்றின் அடிப்படையில் ஆய்வின் முதல்நிலைத் தரவுகள் சேகரிக்கப்பட்டன. இரண்டாம் நிலைத்தரவுகள் பிரதேச செயலக அறிக்கைகள் மற்றும் இலங்கையில் வேடர்கள் பற்றி ஆய்வாளர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளிலிருந்து சேகரிக்கப்பட்டுள்ளன. கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் முறுத்தானை பிரதேசத்தில் வாழும் வேடுவர் சமூகத்தை சேர்ந்த குடும்பங்களிடையே மேற்கொள்ளப்பட்ட களாய்வின் வழியாக சேகரிக்கப்பட்ட தரவுகளை கருப்பொருள் பகுப்பாய்வின் அடிப்படையில் பகுப்பாய்வு செய்துள்ளது. முறுத்தானை பிரதேசத்தில் 273 குடும்பங்களைச் சேர்ந்த 902 வேடுவ மரபிலான மக்கள் வாழ்ந்துவருகின்றனர். இவர்களின் பாரம்பரியமான வாழ்வாதார நடவடிக்கையாக வேட்டையாடுதல் சேனைப்பயிர்ச்செய்கை, மீன்பிடித்தல், விறகு வெட்டுதல் வீட்டுத்தோட்டம் போன்றனவும் உணவு சேகரிக்கும் முறைகளாக தேன் எடுத்தல், கிழங்குசேகரித்தல் போன்றனவும் காணப்படுகின்றன. மேற்குறிப்பிட்ட பாரம்பரியமான வாழ்வாதார நடவடிக்கைகள் இலங்கை சுதந்திரம் அடைந்ததன் பிற்காலத்தில் மேற்கொள்ளப்பட்டுவருகின்ற சுற்றுச் சூழலியல், சமூக-பொருளதார, இலவசக் கல்வி மற்றும் அரசியல் செயற்பாட்டு திட்டங்களின் வழியாக பல்வேறுபட்ட மாற்றங்களைச் சந்தித்து வந்துள்ளன. குறிப்பாக விவசாய செயற்பாட்டில் ஈடுபடல், விவசாயம் சார்ந்த கூலிகளாக ஈடுபடல், விவசாயம் சாராத கூலிகளாக ஈடுபடல், தனியார் துறைகளில் வேலை செய்தல் போன்றவை காணப்படுகின்றன. 2009 ஆண்டு வரையாக நாட்டில் இடம்பெற்றுவந்த உள்நாட்டு யுத்தம் வேடர்களின் பாரம்பரிய பொருளாதார நடைவடிக்கையான காடுகளில் தேன் எடுத்தல், சேனைப் பயர்ச்செய்கை செய்தல் போன்றவற்றில் பல்வேறு தடைகளை உருவாக்கியுள்ளது. இதனால் இளைஞர்கள் தொழில் வாய்ப்பினைத் தேடி நகரம் மற்றும் வெளிநாடுகளுக்குச் செல்லத் தூண்டப்பட்டதும் குடும்ப மற்றும் சமூக அந்தஸ்துநிலை மாற்றங்களும் முறுத்தானை வேடர்களின் பாரம்பரியமான வாழ்வாதர நடைமுறைகளில் மாற்றங்களைக் கொண்டுவந்துள்மையினை இவ்வாய்வின் வழியாக கண்டறியப்பட்டுள்ளது.

**திறவுச் சொற்கள்:** *முறுத்தானை வேடுவர்; பாரம்பரிய வாழ்வாதார நடவடிக்கைகள்; சமூக அசைவியக்கம்; வாழ்வாதாரம்; மாற்றங்கள்*

# நுண்நிதிக்கடனும் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளும்: குடத்தனை கிழக்கு கிராம சேவையாளர் பிரிவினை அடிப்படையாகக் கொண்ட சமூகவியல் ஆய்வு


**லோசிகா. ப.**

*சமூகவியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*



உலகளாவிய ரீதியில் நுண்கடன் சார்ந்த பிரச்சினையானது மிகவும் முக்கியமானதொரு பிரச்சினையாகக் காணப்படுகின்றது. இலங்கையில் கடன் பெறுபவர்கள் மொத்த தொகையில் 60% ஆனோர் பெண்களாகக் காணப்படுகின்றனர். இந்த ஆய்விற்காகத் தெரிவு செய்யப்பட்ட வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட குடத்தனை கிழக்கு கிராம சேவையாளர் பிரிவில் அதிகளவான பெண்கள் நுண்கடன் பெற்றுள்ளதோடு பல்வேறு பிரச்சினைகளையும் எதிர்கொள்கின்றனர். நுண்நிதிக்கடன் பெற்றுக் கொள்வதற்கான காரணங்களினையும் அதன் சமூக, பொருளாதார விளைவுகளையும் மதிப்பிடுதல் இவ் ஆய்வின் பிரதான நோக்கமாகும். இங்கு கலப்புமுறை பயன்படுத்தப்பட்டுள்ளது. நுண்நிதிக்கடன் பெற்று அதனை மீளச் செலுத்திக்கொண்டிருக்கின்ற 60 பெண்கள் நிகழ்தகவு சாராத இலகு மாதிரி எடுப்பு முறை மூலம் ஆய்வு மாதிரியாகத் தெரிவு செய்யப்பட்டனர். மேலும் 18 வயதிற்கு மேற்பட்ட நுண்நிதிக்கடன் பெற்ற பெண்கள் ஆய்வுக் குடித்தொகையாகத் தெரிவுசெய்யப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் நேர்காணல் மூலமான வினாக்கொத்தின் கணியம்சார் தரவுகள் SPSS உதவியுடன் விபரணப் புள்ளிவிபரவியல் முறையைப் பயன்படுத்தி பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. மேலும் விடய ஆய்வு, நேர்காணல் மூலம் பெறப்பட்ட பண்புசார் தரவுகள் கருப்பொருள் பகுப்பாய்விற்கும் உட்படுத்தப்பட்டுள்ளன. நுண்நிதி நிறுவனங்களால் வழங்கப்பட்ட பெரும்பாலான கடன்கள் சுயதொழில் மற்றும் விவசாயம் போன்ற நோக்கங்களுக்காக பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதுடன் 80% ஆனவர்களே குறித்த நோக்கத்திற்கு பயன்படுத்தியுள்ளதுடன் பெரும்பாலானவர்கள் அதனை சுயதொழிலுக்குப் பயன்படுத்தாது ஏனைய தேவைகளுக்குப் பயன்படுத்தியுள்ளனர். 74.5% ஆனவர்கள் கடன்களை மீளச் செலுத்தவே கடன்களைப் பயன்படுத்தியுள்ளனர். நிபந்தனைகள் குறைவாக இருப்பதனாலும் இலகுவில் கடன் பெறலாம் என்பதனாலும் 100% ஆனவர்களும் நுண்நிதி நிறுவனங்களை நாடுகின்றனர். 70% ஆனவர்கள் கடன்களை உரிய காலத்தில் மீளச் செலுத்துகின்றனர். 85% ஆனவர்கள் வருமானம் போதாமையினாலும் 85% ஆனவர்கள் கடன்களை உரிய தேவைக்கு பயன்படுத்தாமையினாலும் கடன்களை மீளச்செலுத்த முடியாமல் உள்ளனர். நுண்கடன்களைப் பெற்றுக்கொண்டவர்களில் 70% ஆனவர்களுக்கு கடன்களின் வட்டிவீதம் தொடர்பான அறிவு இல்லை. 30% ஆனவர்களே கடன்களின் வட்டி வீதம் தொடர்பாக அறிந்துள்ளனர். நுண்நிதிக் கடன்களைப் பெற்றவர்களில் 75% ஆனவர்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்து வருவதுடன் அவர்களில் 95% ஆனவர்கள் பொருளாதார ரீதியான பிரச்சினைகளை எதிர்கொள்வதோடு 80% ஆனவர்கள் சமூக ரீதியான பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். நுண்நிதிக் கடன் மூலம் பிரச்சினைகளை எதிர்கொண்டாலும் 58.3% ஆனவர்கள் நன்மையடைந்துள்ளனர். இவ் ஆய்வின் மூலம் நுண்நிதிக் கடன் சார்ந்த பிரச்சினைகளுக்கு சிறந்த தீர்வு நடவடிக்கைகளைப் பெற்றுக் கொடுப்பதுடன் நுண்நிதிக்கடன்களின் வட்டி வீதத்தைக் குறைப்பதுடன் மாதாந்த தவணை முறையிலான கடன்களை வழங்கவேண்டும் என்பதனையும் வலுவாகப் பரிந்துரைக்கின்றது.



**திறவுச்சொற்கள் :** *நுண்கடன் ; சுயதொழில்; வீட்டுவன்முறை; சமூகப்பிரச்சினை*

# பெண் தொழில் முயற்சியாளர்களும் வாழ்வாதார வலுவூட்டலும்: தெல்லிப்பளை மீள்குடியேற்றப்பட்ட பகுதிகளில் சிறுகைத்தொழிலை மேற்கொள்ளும் பெண்களை அடிப்படையாகக் கொண்ட ஒரு சமூகவியல் ஆய்வு

**நிஷாந்தினி.கோ.**
*சமூகவியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*

இந்த ஆய்வானது தெல்லிப்பளை மீள்குடியேற்றப்பட்ட பகுதிகளில் வசிக்கும் பெண்களை மையமாகக் கொண்டு அங்கு பெண் தொழில் முயற்சியாளர்களும் அவர்களின் வாழ்வாதார வலுவூட்டலினை இனங்கண்டு மேம்படுத்துவதனை மையமாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. பெண் தொழில் முயற்சியாளர்கள் எவ்வகையான வாழ்வாதார வலுவூட்டல்களை அடைந்துள்ளார்கள் என்று இனங்காணுதலும் அதனை மேம்படுத்துவதற்கான பரிந்துரைகளை முன்வைத்தலும் என்ற வகையில் பெண்தொழில் முயற்சியாளர்கள் எவ்வகையான தொழில்களில் ஈடுபடுகின்றனர் என்பதை அறிந்தமையும், எவ்வகையான வாழ்வாதார உள்ளீடுகளை பெறுகின்றனர் என அறிந்தமையும் தமது தொழிலை மேற்கொள்ளும் பொழுது எதிர்கொள்ளும் சவால்களையும் இனங்காணப்பட்டுள்ளதுடன் தங்களுடைய உற்பத்திப் பொருட்கள் சார்ந்து வருமானம் ஈட்டுதலில் எதிர்கொள்ளும் சவால்களையும் வாழ்வாதாரங்களை மேம்படுத்துவதற்கான பரிந்துரைகளை முன்வைத்தல் அடிப்படையில் ஆய்வு மேற் கொள்ளப்பட்டுள்ளது. இது ஒரு விபரண ஆய்வாகும். கலப்பு முறையினைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டுள்ளது. சிறுதொழில் முயற்சிகளில் ஈடுபடும் பெண்கள் 59 பேர் நோக்கம் கருதிய மாதிரி எடுப்பு முறையின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டு வினாக்கொத்து முறை, குவிமையக் குழுகலந்துரையாடல்,பிரதான தகவல் தருநருடனான நேர்காணல், விடயஆய்வு மற்றும் நேரடி அவதானம் மூலம் தரவுகள் சேகரிக்கப்பட்டன. கணியம்சார் தரவுகள் சமூக விஞ்ஞானங்களுக்கான புள்ளிவிபரவியல் மென்பொதியினை பயன்படுத்தி விபரண புள்ளிவிபரவியல் முறையிலும் பண்புசார் தரவுகள் கருப்பொருள் பகுப்பாய்வுக்கும் உட்படுத்தப்பட்டு ஆய்வு மேற் கொள்ளப்பட்டுள்ளது. தொழில் முயற்சியில் ஈடுபடும் பெண்களினால் மேற்கொள்ளப்படும் சிறுதொழில்களாக தையல், நெசவு வேலை, பனையோலை உற்பத்தி, மெழுகுதிரி உற்பத்தி, தும்பு வேலை, கைவினைப் பொருட்கள் செய்தல், உணவுப்பொருட்களை தயாரித்தல், அழகுக்கலை தொழில், கருவாடு பதனிடுதல் போன்ற தொழில்களில் ஈடுபடுகின்றனர் எனவும் இவர்களுக்கு அரசாங்கத்தினால் அதிகமாக தொழிற்பயிற்சிகளும், கருத்தரங்குகள், தலைமைத்துவப் பயிற்சிகள், சிறு உதவிகள் போன்றவற்றை அரச சார்பற்ற நிறுவனங்கள் வழங்கியுள்ளமையும் அத்துடன் தொழிற்பயிற்கள் தொழிலைத் தொடங்குவதற்கும் தொழிலை மேற்கொள்வதற்கு ஏனைய பயிற்சிகள் தொழிலை முறையான வகையில் கொண்டு செல்லவும் தொழிற்பயிற்சியின் பின்பு இவர்களுக்கு வழங்கப்பட்ட வாழ்வாதார உதவிகள் குடும்ப மட்டத்திலும் வருமான மட்டத்திலும் உயர்வினை ஏற்படுத்தியுள்ளது. 59.3% ஆன பெண்கள் தொழிற் பயிற்சி பெற்ற பின் சிறு தொழில் முயற்சிகளில் ஈடுபடுகின்றனர் என்பது ஆய்வின் வழியாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அத்துடன் சிறுதொழில் முயற்சியாளர்கள் மூலப்பொருள் வசதியின்மை, இடவசதியின்மை, பொருட்களுக்கான கேள்வி குறைவு போன்றவற்றையும் அத்துடன் இவர்களின் தொழில் தொடர்பிலும் வாழ்வாதார மூலதனங்களை மேம்படுத்தல் இவர்களுக்கான பயிற்சிகளை வழங்குதல் போன்ற நடவடிக்கைகளை அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் கவனம் செலுத்த வேண்டும் என்பது முக்கியம் பெறுகின்றது.

**திறவுச்சொற்கள்:** *தொழிற் பயிற்சி; வாழ்வாதாரம்; வாழ்வாதார ஊக்குவிப்பு; மனித மூலதனம்*

# பாடசாலை மாணவர் இடைவிலகலும் சமூகவிளைவுகளும்: கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவினை அடிப்படையாக கொண்ட ஒரு சமூகவியல் ஆய்வு

**கோபிகா.சே., ஜீவசுதன்.சு.**
*சமூகவியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*

கல்வி என்பது மனிதவாழ்விற்கு அவசியமானதொன்று அதில் பாடசாலைக்கல்வி முக்கிய இடத்தை வகிக்கின்றது. கல்வியில் பலதரப்பட்ட பிரச்சினைகள் காணப்படுகின்றன. அதில் மாணவர் இடைவிலகல் முக்கியமானது. இது சர்வதேச தேசியரீதியில் காணப்படும் ஓர் அடிப்படை பிரச்சினை ஆகும். இந்த ஆய்வானது கரைச்சிப்பிரதேசசெயலகப்பிரிவுக்குட்பட்ட தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளில் மாணவர்களின் இடைவிலகலில் செல்வாக்கு செலுத்தும் காரணிகளினையும் அதனால் ஏற்படும் சமூகவிளைவுகளினையும் மதிப்பிடுவதாக அமைகின்றது. கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சிப்பிரதேசசெயலகப்பிரிவுக்குட்பட்ட தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளினை மையமாக கொண்ட பிரதேசங்களில் இடைவிலகிய மாணவர்கள் 44 பேர் கலப்பு மாதிரிகளாக தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். ஆய்வுக்கான முதனிலைத்தரவுகளாக இடைவிலகிய மாணவர்களிடமிருந்து வினாக்கொத்துக்கள் விடயஆய்வு மற்றும் பிரதான தகவல் தருநருடனான நேர்காணல் போன்றவற்றின் ஊடாக தரவுகள் பெறப்பட்டுள்ளன. இரண்டாம் நிலைத்தரவுகளாக பாடசாலைத் தரவுகள், வலயக்கல்வி அலுவலக தரவுகள், பிரதேச செயலக தரவுகள், ஆய்வுக்கட்டுரைகள் மற்றும் அரச இணையத்தளங்கள் மூலம் தரவுகள் பெறப்பட்டுள்ளன. பெறப்பட்ட பண்புசார் தரவுகள் கருப்பொருள்ரீதியான பகுப்பாய்விற்குட்படுத்தப்பட்டும் அளவுசார்தரவுகள் விவரணப்புள்ளிப் பகுப்பாய்விற்குட்படுத்தப்பட்டு அவை அட்டவணை, வரைபுகள் மூலமாக அறிக்கை செய்யப்பட்டுள்ளன. ஆய்வுமுடிவுகளின் படி ஆய்வுப்பிரதேசத்தில் இடைநிலைக்கல்வி பயிலும் மாணவர்களிடமே இடைவிலகல் அதிகளவில் காணப்படுகின்றது அதாவது 97.7% ஆனவர்கள் இடைநிலைக்கல்வி கற்றவர்களாக காணப்படுகினற் துடன். இடைவிலகலானது ஆண்களிடமே அதிகளவு காணப்படுகின்றது. அதாவது 70.5% ஆனவர்கள் ஆண்களாக உள்ளனர் ஆய்வுப்பிரதேசத்தில் பாடசாலையை விட்டு இடைவிலகிய மாணவர்களில் 78% ஆனவர்கள் ஏதாவது ஒரு தொழில் ஈடுபடுகின்றனர். ஆய்வுப்பிரதேசத்தில் மாணவர்களின் இடைவிலகலுக்கு குடும்பம்சார்காரணிகளும் மாணவர்சார் காரணிகளின் செல்வாக்கே பிரதானமாக காணப்படுகினற் து. குடும்பம்சார்காரணிகளில் 89% வீதமானவர்கள் குடும்பவறுமை காரணமாகவே இடைவிலகியுள்ளடன் மாணவர்சார்காரணிகளில் 75% மாணவர்கள் தாம் கற்பதில் ஆர்வமின்மை காரணமாக பாடசாலையை விட்டு விலகியுள்ளனர். பாடசாலைக்காரணிகள் ஆய்வுப் பிரதேசத்தின் மாணவர்களின் இடைவிலகலில் செல்வாக்கு செலுத்தவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இடைவிலகலின் பின்னர் மாணவர்கள் சமூக அந்தஸ்து குறைவடைந்தமை, சமூகப் புறமொதுக்கல், விலகல் நடத்தை நணபர்களின் சகவாசம், வேலையின்மை, சமூகப் புறமொதுக்கல் போதைப்பெருள் பாவனை, வேலையின்மை போன்ற விளைவுகளை எதிர்கொண்டு உள்ளனர். மாணவர்களின் இடைவிலகலினை குறைப்பதற்கு கல்வியின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை பெற்றோர்கள் மற்றும் மாணவர்களுக்கு வழங்குதல், இடைவிலகல் குறித்த சட்டநடவடிக்கைகளை தீவிரப்படுத்தல், வறிய குடும்ப மாணவர்களின் கல்விக்கு புலமைப்பரிசில்களை, உதவித்திட்டங்களை பெற்றுக்கொடுத்தல், நாடு பூராகவும் உள்ள பாடசாலைகள் அனைத்திற்கும் சமமான வளப்பகிர்வினைப் பெற்றுக்கொடுத்தலும் ஒவ்வொரு மாணவர்களும் தமது இலக்கினை விரும்பியபடி நாடிச் செல்ல வாய்ப்புக்களை உருவாக்குதல் போன்ற செயற்பாடுகளின் ஊடாக இடைவிலகலினை இழிவளவாக்க கூடியதாக இருக்கும்

**திறவுச்சொற்கள்:** *இடைவிலகல் கல்வி; பாடசாலை; கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவு*

# விளையாட்டில் பெண்களின் பங்குபற்றுதலில் செல்வாக்குச் செலுத்தும் சமூகக் காரணிகள்: வடமராட்சி வடக்கு பிரதேச செயலகத்தை அடிப்படையாக கொண்ட ஒரு சமூகவியல் ஆய்வு

**ரஜனா. கோ.**
*சமூகவியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*

விளையாட்டில் பெண்களின் பங்குபற்றுதலில் செல்வாக்குச் செலுத்தும் சமூகக் காரணிகள் எனும் ஆய்வானது யாழ்ப்பாண மாவட்டத்தின் வடமராட்சி வடக்கு பிரதேச செயலக பிரிவினை மையமாகக் கொண்டதாக அமைகின்றது. இந்த ஆய்வானது விளையாட்டில் ஈடுபடும் பெண்கள் மீது செல்வாக்குச் செலுத்தும் சமூகக் காரணிகளை இனங்காணுதல் அவர்களின் விளையாட்டுப் பங்குபற்றுதலை அதிகரிப்பதற்கான பொறிமுறைகளையும் முன்மொழிதலையும் பிரதான நோக்கமாக கொண்டுள்ளது. இந்த ஆய்வில் பண்புசார் மற்றும் அளவுசார் ஆய்வு முறையில் நுட்பங்களை இணைத்து கலப்புமுறை பயன்படுத்தப்பட்டுள்ளது. பண்புசார் தரவுகள் கருப்பொருள் ரீதியான பகுப்பாய்விற்குட்பட்டும் அளவுசார் தரவுகள் விவரணப்புள்ளிப் பகுப்பாய்விற்குட்பட்டும் வரைபுகள் மூலமாக அறிக்கை செய்யப்பட்டுள்ளன. முதலாம் நிலைத் தரவுகளாக வினாக்கொத்து முறை, விடய ஆய்வுகள், பிரதான தகவல் தருநருடனான நேர்காணல்கள் என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன. வசதிகருதிய மாதிரி எடுப்பு முறையினை பயன்படுத்தி இந்த ஆய்விற்காக 40 பெண் வீராங்கனைகள் மாதிரிகளாக தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். வினாக்கொத்து முறைக்காக வடமராட்சி வடக்கு பிரதேச செயலகர் பிரிவினை அடிப்படையாகக் கொண்டு மாதிரி எடுப்பு முறையானது அமைந்துள்ளது. 14 வயதிற்கு மேற்பட்ட 2020 ஆம் ஆண்டு விளையாட்டில் பங்குபற்றிய பெண்கள் மட்டுமே ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். 2020 ஆம் ஆண்டு விளையாட்டில் பங்குபற்றாத பெண்கள் இந்த ஆய்விலிருந்து விலக்கப்பட்டுள்ளனர். இந்த ஆய்விற்காக எட்டு விடய ஆய்வுகளும் மூன்று பிரதான தகவல் தருநருடனான நேர்காணல்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவற்றின் மூலம் பெறப்பட்ட தகவல்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. அதனூடாக பெண்களின் விளையாட்டுப் பங்குபற்றுதலில் செல்வாக்குச் செலுத்தும் சமூகக் காரணிகள் மதிப்பீடு செய்துள்ளன. இந்த ஆய்வின் ஊடாக விளையாட்டில் பெண்களின் பங்குபற்றுதலில் பல்வேறு சமூகக் காரணிகள் செல்வாக்குச் செலுத்துவது கண்டறியப்பட்டுள்ளது. அந்தவகையிலே பெண்களுடைய குடியியல் அந்தஸ்து பெண்களின் விளையாட்டுப் பங்குபற்றலில் செல்வாக்குச் செலுத்தும் சமூகக் காரணியாக காணப்படுகின்றது. பெண்களுடைய விளையாட்டில் குடும்பப் பொறுப்பு, சமூகக் கட்டுப்பாடு, சமய நடைமுறைகள், குடும்ப அங்கத்தவருடைய கட்டுப்பாடுகள், சுய விருப்பம், நோய் நிலைமைகள் என பல்வேறு விடயங்கள் குடும்பம் சார்ந்து பெண்களது விளையாட்டு பங்குபற்றுதலில் செல்வாக்குச் செலுத்துவதோடு ஊடகங்கள், பால்நிலை பாரபட்சம், சாதி மற்றும் இன வேறுபாடுகள், பொருளாதார பிரச்சினைகள், கழகத்தினுடைய வளங்கள், கழக உறுப்பினர்கள், சுற்றுச்சூழல், பயிற்றுவிப்பாளர்கள், பாடசாலை அதிபர் ஆசிரியர்கள், நண்பர்கள், காதலன், மதம், உடலியல் சார்ந்த நோய்கள், மொழி, உயிரியல் சார்ந்து பெண்களுக்கென காணப்படும் சில வழக்கங்கள், கல்வி போன்றன செல்வாக்குச் செலுத்துவதாகக் காணப்படுகின்றன. அரச, அரச சார்பற்ற உதவிகள் பற்றி நோக்குகையில் உதவித்திட்டங்களை வழங்குவதுடன் மட்டுமின்றி பெண்களை விளையாட்டில் ஊக்கிவிப்பதற்கான சிறந்த பயிற்சிகள் மற்றும் பங்குபற்றி திறமைகளை வெளிப்படுத்துபவர்களுக்கான வேலை வாய்ப்புக்களை பெற்றுக் கொடுப்பதன் மூலமும், விளையாட்டில் பங்குபற்றுவதால் பெண்கள் எதிர்நோக்குகின்ற நேரடியான மற்றும் மறைமுகமான பிரச்சினைகளை கண்டறிந்து அவற்றை நிவர்த்தி செய்வதன் மூலமாகவும் தனியாள் மற்றும் அமைப்பு சார் வல்லுநர்களின் ஆலோசனைகளை பெறுவதன் மூலமாகவும் பெண்களினுடைய விளையாட்டுப் பங்குபற்றுதலை அதிகரிக்க முடியும்.

**திறவுச்சொற்கள்:** *உதவித்திட்டங்கள்; சமூகக்காரணிகள்; பெண்கள் விளையாட்டு*

# விசேட தேவையுடைய மாணவர்களின் கற்றலில் பெற்றோர்கள் எதிர்கொள்ளும் சவால்கள்: வடமராட்சிப் பிரதேசப் பாடசாலைகளில் உள்ள விசேட கல்வி அலகுகளை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு

**சத்தியப்பிரபா.ச., ஜீவசுதன். சு.**
*சமூகவியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*

விசேட தேவையுள்ள மாணவர்கள் பல்வேறு தன்மை கொண்டு காணப்படுவதால் அவர்கள் கற்றல் செயற்பாடுகளில் மெல்லக் கற்போராகவோ, சிரமப்பட்டோ சவால்களுக்கு மத்தியில் கற்பவராகவோ காணப்படுகின்றனர். இவர்கள் உடல் ரீதியாகவும், உள ரீதியாகவும் செயற்பாடுகள் ரீதியாகவும் சவால்களை எதிர்கொள்வோராகக் காணப்படுகின்றார்கள். ஒன்றோ அல்லது அதற்கு கூடுதலான எண்ணிக்கையிலோ விசேட தேவையுள்ள பிள்ளைகளைக் கொண்ட குடும்பங்கள் சமூகமயமாக்கல் செயற்பாடுகளில் பாரிய சவால்களை எதிர்கொள்கின்றன. விசேட தேவையுள்ள பிள்ளைகள் தம்மைத் தாமே பராமரித்துக் கொள்ள இயலாதவர்களாகவும் தொடர்பாடல்களில் ஈடுபட முடியாதவர்களாகவும் பாடசாலைச் செயற்பாடுகளில் சிரமங்களை எதிர்நோக்குவோராகவும் காணப்படுகின்றார்கள். இவ்வாறான பிள்ளைகளைப் பராமரிப்பதற்குப் பெற்றோர்கள் அல்லது சகோதரர்கள் தமது நேரத்தையும் உழைப்பையும் பயன்படுத்துகின்றார்கள். இதனால் அவர்களும் உளரீதியாகப் பாதிப்புக்களை எதிர்கொள்கின்றார்கள். விசேட தேவையுடைய மாணவர்களின் பெற்றோர்கள் எதிர்கொள்ளும் சவால்களை மதிப்பிடுவதனை பிரதான நோக்கமாகக் கொண்டு வடமராட்சி பிரதேச்தில் விசேட கல்வி அலகு உள்ள பாடசாலைகளினை மையமாகக் கொண்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. நேர்காணல் மூலமான வினாக் னொத்தின் கணியம்சார் தரவுகள் SPSS உதவியுடன் விபரணப் புள்ளிவிபர முறையினைப் பயன்படுத்தி பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. மேலும் விடய ஆய்வு, நேர்காணல் மூலம் பெறப்பட்ட பண்புசார் தரவுகள் கருப்பொருள் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. இது ஒரு விபரண ஆய்வாகும் கலப்பு முறையினைப் பயன்படுத்தி வடமராட்சி பிரதேசத்தில் விசேட கல்வி அலகினை கொண்ட பாடசாலைகளில் கல்வி கற்கும் விசேட தேவையுடைய மாணவர்களின் பெற்றோர்களை மையமாகக் கொண்டு 41 பெற்றோர்கள் மாதிரியாகத் தெரிவு செய்யப்பட்டு நேர்காணலை அடிப்படையாகக் கொண்ட வினாக்கொத்து முறை, விடய ஆய்வு, பிரதான தகவல் தருநர்களுடனான நேர்காணல் மற்றும் நேரடி அவதானம் மூலம் தரவுகள் சேகரிக்கப்பட்டு சமூக விஞ்ஞானங்களுக்கான புள்ளிவிபரவியல் மென்பொதியைப் பயன்படுத்தி தரவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இங்கு பெற்றோர்கள் குடும்பங்களின் பங்களிப்பின்மை, கற்பிக்கும் ஆசிரியர்களின் பங்களிப்பின்மை, பாடசாலைச் சூழல் பிரச்சினைகள், போக்குவரத்து தொடர்பான பிரச்சினைகள், சமூகப் பிரச்சினைகள், பொருளாதாரப் பிரச்சினைகள் போன்றவற்றுக்கான ஆதரவுப் பொறிமுறைகளையும் முன்வைப்பதாக ஆய்வு அமைகின்றது. 56% ஆனவர்கள் வேலைச்சுமை அதிகம் காணப்படுவதனால் விசேட தேவையுடைய பிள்ளைகள் கற்றல் செயற்பாடுகளில் பிரச்சினைகளினை எதிர்கொள்கின்றனர். இருப்பினும் பிள்ளைகளின் எதிர்காலத்தினைக் கருத்திற்கொண்டு 93% வீதமானவர்கள் தமது விசேட தேவையுடைய பிள்ளைகளின் சமூக, உடல், உள நலன்களை மேம்படுத்த நடவடிக்கைகளை மேற் கொள்கின்றார்கள்.

**திறவுச்சொற்கள்:** *உட்படுத்தற்கல்வி; சமூகப்பிரச்சினைகள்; பொருளாதாரப் பிரச்சினைகள்; விசேட கல்வி; விசேட தேவையுடைய மாணவர்கள்*

# Water Scarcity: A Case Study of Poompuhar Village, Ariyalai East in Jaffna District

**Raam.R., Srikanthan.S**
*Department of Sociology, University of Jaffna*

Water scarcity is a major social problem at present and it is a major factor in creating other social problems. Clean drinking water is essential for maintaining the quality and health of human life. Access to clean drinking water is a fundamental human right at present as it is seen as one of the basic necessities of life. Water scarcity is, therefore, seen as the biggest challenge to the social development of the village. This study attempts to analyze the socio-economic issues resulting from water scarcity in the Poompuhar village of Ariyalai East, Jaffna District. Jaffna is an area that relies on groundwater resources. This study is a descriptive study based on a qualitative approach. Fieldwork spanning the period of August to October 2020 inform the primary data for the study. Case study method is used as a principal tool for collecting data along with key informant interviews. Records from the *Grama Niladari* and the Divisional Secretariat are used as secondary data sources. Primary data collected through purposive sampling method focuses on the theme of causes and socio-economic effects of water scarcity in the study area and secondary data express the nature and reality of the study village. There is a risk of water scarcity in Jaffna peninsula. Groundwater pollution as a result of increased agricultural fertilizers, human activities, variations in rainfall, soil erosion, depletion of water bodies such as ponds, fields, and rapid deforestation exacerbate water scarcity in Jaffna. The socio-economic implications of water scarcity in this village can be ascertained by analyzing the case studies done in the area. The current economic status of the village dwellers and the scarcity of water in the village further affect their socio-economic status. People spend a portion of their daily income to buy water while they spend more time and human resources to source water from distant places. It is worth noting here that, sometimes, internal conflicts arise between family members and neighbors as they source water from public wells or pipes. Even though efforts have been made by the government and Non-governmental Organizations alleviate the water shortage in Poompuhar, they are not sufficient. In this context, this study suggests that it is important that the government implement awareness programmes and projects to ensure the accessibility of water during drought seasons.

**Keywords:** *Case study; Socio-economic issues; Water scarcity*

# மீன்பிடி சமூகத்தில் பெண்களின் வகிபங்கு:

## நாகர்கோவில் J/423 கிராமப் பிரிவினை மையமாகக் கொண்ட ஒரு விடயக்கலை ஆய்வு

**கிருஷாந்தினி.லோ., சிறிகாந்தன்.ச**

*சமூகவியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*

உற்பத்தி மற்றும் வர்த்தக உறவுகளில் பெண்களின் வகிபங்கு முதன்மையானது. மனித பண்பாட்டு வரலாற்றில் பெண்களின் பொருளாதார பங்கேற்பு பல்வேறு மாற்றங்களைச் சந்தித்து வந்துள்ளது. எனினும் இன்றைய உலகில் பெண்கள் முதன்மையான பொருளதார பங்காளிகளாக உள்ளனர். இந்நிலையில் இவ்வாய்வானது மரபார்ந்த மீன்பிடித் தொழிலில் பெண்களின் வகிபங்கு தொடர்பாக ஆராய்கின்றது. யாழ்ப்பாண மாவட்டம் மிகவும் கடல்வளம் கொண்ட பகுதியை உள்ளடக்கிய ஒன்று. இங்கு கடற்கரையோரத்தினை அண்மித்து வாழ்கின்ற மக்களின் பிரதான வாழ்வாதார தொழில்முறையாக மீன்பிடி காணப்படுகின்றது. ஆண் மையமிட்ட பிரதான தொழில்முறையாக மீன்பிடித் தொழில் காணப்பட்டாலும் குடும்பப் பெண்களின் மீன்பிடித் தொழில்சார் வகிபங்கு என்பது பன்முகத் தன்மை வாய்ந்தது. இந்நிலையில் மீன்பிடிச் சமூகத்தில் பெண்களின் பன்முக வகிபங்கினை இனங்காணுதலும் அதுசார்ந்து அவர்கள் எதிர்நோக்கும் விடயங்களைப் பகுப்பாய்வு செய்தலும் இவ்வாய்வின் பிரதான நோக்கமாகும். மருதங்கேணிப் பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட கரையோரக் கிராமங்களில் ஒன்றான நாகர்கோவில் கிராமத்தினை அடிப்படையாக் கொண்டு பண்புசார் அணுகுமுறையின் வழியாக இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆய்வுக்கான முதல்நிலைத் தரவுகள் ஆய்வுப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட களஆய்வின் வழியாகச் சேகரிக்கப்பட்டன. நாகர்கோவில் பிரதேசத்தில் பெண்களின் பன்முக வகிபங்கினை இனங்காணும் நோக்கத்தில் மேற்கொள்ளப்பட்ட பங்குபற்றும் அவதானமும் வகைமாதிரியாக தெரிவு செய்யப்பட்ட வர்களிடம் சேகரிக்கப்பட்ட விடயக்கலை ஆய்வும் இவ்வாய்விற்கான பிரதான தகவல் மூலங்களா கும். மேலும் ஆய்வுப் பிரதேசத்தின் பிரதான தகவலாளியுடனான நேர்காணல்கள் பெண்களின் பன்முக வகிபங்கு தொடர்பான பகுப்பாய்வினை முறைப்படுத்த பயன்படுத்தப்பட்டன. சேகரிக்கப்பட்ட பண்புசார் தரவுகள் அனைத்தும் கருப்பொருட் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டு பொருத்தமான கருப்பொருட்களில் விவாதிக்கப்பட்டன. மீன்பிடிச் சமூகத்தில் பெண்களின் வகிபங்கானது தொழில்சார்ந்தது மற்றும் குடும்பத்தோடிணைந்த சமூகம்சார்ந்தது என இருபெரும் நிலைகளில் காணப்படுகின்றது. இங்கு பெண்களின் தொழில்சார் வகிபங்கு பன்மைத்துவமானது. கடல் உணவு பதப்படுத்துதல், வலைகளிலிருந்து மீன்களைக் கழட்டுதல், மீன்களை வகைகளாகத் தெரிதல், மீன்களை வெட்டிக் கொடுத்தல், மீன்களை உலர வைத்தல், கடலில் மீன்பிடிக்கும் வலையினை சிலக்குத் தட்டுதல், கரைவலை இழுத்தல், மீன்களை ஏலம் விடுதல், கடல் உணவுகளை விற்பனை செய்தல், கருவாடு விற்பனை செய்தல், மீன்களை ஐஸ் அடித்தல் போன்ற முதன்மையான செயற்பாடுகளில் பெண்களின் வகிபங்கு என்பது குறிப்பிடத்தக்கது. தொழில்சார் வகிபங்கிற்கு புறம்பாக மீனவப் பெண்களின் குடும்பக் கட்டமைப்புசார் வகிபங்கு என்பதும் பன்முகத் தன்மை வாய்ந்தது. குடும்பப் பராமரிப்பு, சமூக உறவுபேணல், சமய–சமூக பண்பாட்டம்சங்களில் பங்கேற்றல் என விரிந்து காணப்படுகின்றது. மேற்குறிப்பிட்ட பன்முகத் தன்மையுடை வகிபங்கினைக் கொண்டுள்ள ஆய்வுப் பிதேசப் மீனவப் பெண்கள் சமகாலத்தில் பல்வேறுபட்ட பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகின்றமையும் இவ்வாய்வின் வழியாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. குறிப்பாக பால்நிலை சமத்துவமற்ற நிலையில் காணப்படுவதுடன் இரட்டைச் சுமையுடையவர்களாக இருப்பது பெண்களின் சமூக மேம்பாட்டிற்கு மிகப்பெரிய சவாலாக உள்ளமை கவனிக்கத்தக்கது. மீனவ சமூகத்தில் வாழும் பெண்களின் பன்முகத்துவமான வகிபங்கு அவர்களுடைய உடல்–உள–சமூக ஆரோக்கியத்தினை பாதுகாக்கும் வகையில் ஒழுங்குபடுத்தல் என்பது இவ்வாய்வின் வழியாக முன்வைக்கப்படும் முதன்மையான பரிந்துரையாகக் காணப்படுகின்றது.

**திறவுச் சொற்கள்:** *பெண்கள்; பன்முக வகிபங்கு; மீனவசமூகம்; பண்புசார் அணுகுமுறை*

# இளைஞர்களின் குடும்ப உறவில் சமூக ஊடகங்களின் தாக்கம்: பருத்தித்துறை பிரதேசத்தின் மந்திகை(J/415) கிராமசேவகர் பிரிவினை மையமாகக் கொண்ட ஒரு சமூகவியல் ஆய்வு

**கீர்த்தனா.ப., ஜீவசுதன்.சு.**
*சமூகவியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*

இந்த ஆய்வானது பருத்தித்துறை பிரதேசசெயலத்தின் மந்திகை(J/415) கிராமசேவகர் பிரிவில் வாழும் இளைஞர்களின் சமூக ஊடகப் பாவனையின் தற்காலப் போக்கு, சமூக ஊடகப் பாவனைக்கான காரணங்கள், சமூக ஊடகங்கள் குடும்பஉறவில் எவ்வாறான நேரான மற்றும் எதிரான தாக்கங்களை செலுத்துகின்றன என்பதனை ஆராய்வதனை நோக்கமாக கொண்டுள்ளது. இது ஒரு விபரண ஆய்வாகும். பண்பு சார் மற்றும் கணியம் சார் முறைமையை இணைத்து கலப்பு முறையாக பயன்படுத்தப்பட்டுள்ளது. பண்புசார் தரவுகள் கருப்பொருள் ரீதியான பகுப்பாய்வுக்குட்பட்டும் அளவுசார் தரவுகள் விவரணப் புள்ளிவிபரவியல் பகுப்பாய்வுக்குட்பட்டும் அறிக்கை செய்யப்பட்டுள்ளதுடன் ஆய்வின் ஒழுக்கவியல் அனைத்துக் கட்டங்களிலும் பின்பற்றப்பட்டுள்ளது. முதலாம் நிலைத் தரவுகளாக வினாக்கொத்து, விடய ஆய்வும். இரண்டாம் நிலைத் தரவுகளாக பிரதேசசெயலகத் தரவுகள், ஆய்வுக்கட்டுரைகள், இணையத்தளத் தரவுகள் என்பன கொள்ளப்பட்டுள்ளன. மாதிரிகளாக மொத்த குடித்தொகையும் தெரிவு செய்யப்பட்டுள்ளது .வினாக்கொத்து முறைக்காக மந்திகை கிராமசேவகர் பிரிவிலிருந்து 95 இளைஞர்கள் மாதிரியாக செய்யப்பட்டுள்ளனர். இளைஞர்களின் குடும்ப உறவில் சமூக ஊடகங்களின் பாவனை நேரான தாக்கங்களை விட எதிரான தாக்கங்களையே அதிகம் செலுத்துகின்றது. அந்தவகையில் சமூக ஊடகங்கள் குடும்ப உறவுகளில் நேரான தாக்கத்தை செலுத்துவதாக 73% ஆனவர்களும் எதிரான தாக்கங்களை செலுத்துவதாக 27% ஆனவர்களும் குறிப்பிடுள்ளார்கள். இளைஞர்கள் தகவல் அறிய, கல்விச் செயற்பாடு, கருத்துப்பகிர்வு, வியாபாரம், பொழுதுபோக்கு, அன்பைப் பரிமாறல், உறவினர்களுடன் தொடர்பு பேணல், இருப்பிட அடிப்படையிலான சேவைகள், நண்பர்களுடன் தொடர்பை பேண, புதிய மனிதர்களை சந்திக்க போன்ற பல காரணங்களுக்காக சமூக ஊடகங்களை பயன்படுத்துகின்றார்கள். குடும்ப உறவுகளில் அன்பைப் பரிமாற முடிதல், குடும்பத்துடன் செலவழிக்கும் நேர அதிகரிப்பு, மகிழ்ச்சியான, துக்கமான தருணங்களை பரிமாறல், இலகுவாக குடும்பத்துடன் தொடர்பு, குடும்ப விழாக்களில் பங்குபற்றல், முரண்பாடுகளை தீர்த்தல் போன்ற நேரான தாக்கங்களை சமூக ஊடகங்களுடனான இளைஞர்களின் தொடர்பு குறைத்துள்ளது. தனிமைப்படுத்தப்படுகின்றமை, அமைதியின்மை, முரண்பாடுகள் ஏற்படல், சமூக புறக்கணிப்பு, குடும்ப நிகழ்வுகளில் பங்குபெறாமை போன்ற எதிரான தாக்கங்களையும் ஏற்படுத்துகின்றது. அந்தவகையில் இளைஞர்களின் குடும்ப உறவுகளில் ஏற்படும் எதிரான தாக்கங்களை குறைப்பதற்கு இளைஞர்கள் ஊடகப் பாவனையைக் குறைப்பதோடு குடும்பத்தவர்களுடன் நேரத்தை ஒதுக்கல், கல்விச் செயற்பாடுகளில் கவனம் செலுத்தல், அறிமுகமில்லாதவர்களுடன் தொடர்புகளை தவிர்த்து பயனுள்ள செயற்பாடுகளில் தங்களை ஈடுபடுத்தல், குடும்ப அங்கத்தவர்களுடன் நேரடித் தொடர்புகளை ஏற்படுத்தல் போன்ற தீர்வுகள் குடும்பஉறவுகளில் சமூக ஊடகங்களினால் ஏற்படும் எதிரான தாக்கங்ளைக் குறைப்பதற்கான தீர்வுகளாக முன்வைக்கப்பட்டுள்ளன. இவற்றை பின்பற்றுவதன் மூலம் இளைஞர்களின் குடும்பஉறவில் சமூக ஊடகங்களால் ஏற்படும் எதிரான தாக்கங்களை குறைக்க முடியும்.

**திறவுச்சொற்கள்:** *இளைஞர்கள்; குடும்ப உறவுகள்; சமூக ஊடகங்கள்; தொடர்பாடல்*

# மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதில் சமுர்த்தி கொடுப்பனவின் பங்கு: முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைத்துறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள ஹிஜ்ஜிராபுரம் (MU/115) கிராமத்தினை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு

**பிரியங்கா.க., சுபாஜினி.உ.**

*புவியியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைத்துறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள ஹிஜ்ஜிராபுரம் கிராமம் பின்தங்கிய கிராமமாக காணப்படுவதுடன் வறுமைபட்ட மக்கள் அதிகமாகக் காணப்படும் பிரதேசமாகவும் காணப்படுகின்றது. ஆய்வுப் பிரதேசத்தில் 47வீதமான மக்கள் வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் மக்களாக உள்ளார்கள். இவர்கள் அனைவருக்கும் சமுர்த்திக் கொடுப்பனவானது கிடைக்கின்றது. இவ்வாறு கொடுப்பனவுகள் கிடைத்தாலும் மக்கள் பல்வேறு பிரச்சினைகளினை எதிர்நோக்குகின்றார்கள். இவ் ஆய்வானது சமுர்த்தி நிகழ்ச்சித்திட்டத்தின் பங்களிப்பினை இணங்காணல், சமுர்த்திக் கொடுப்பனவின் பின்னர் மக்களின் வாழ்க்கைத்தர நிலையினை கண்டறிதல் மற்றும் சமுர்த்தி பயனாளிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளினை கண்டறிதல் ஆகிய நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ் ஆய்விற்காக முதலாம் நிலைத் தரவுகள் மற்றும் இரண்டாம் நிலைத்தரவுகள் போன்றன பெறப்பட்டுள்ளன. முதலாம் நிலைத்தரவுகளாக நேர்காணல், வினாக்கொத்து, இலக்கு குழு கலந்துரையாடல், நேரடி அவதானிப்பு போன்றனவற்றின் மூலம் தரவுகள் பெறப்பட்டுள்ளன. அதாவது ஆய்வுப்பிரதேசத்தில் உள்ள சமுர்த்தி பயனாளிகளிடம் குழு கலந்துரையாடலின் மூலமும், கிராம சேவகர் மற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர்களினை நேர்காணலின் மூலமும், சமுர்த்தி நிகழ்ச்சித்திட்டத்தினால் கடன் உதவித்திட்டம் கிடைக்கப்பெற்றுள்ள 94 குடும்பங்களிடம் வினாக்கொத்துக்கள் மூலமும் தரவுகள் பெறப்பட்டுள்ளன. இரண்டாம் நிலைத்தரவுகளாக சமுர்த்தி செயலாற்று அறிக்கைகள், மாவட்ட புள்ளிவிபரவியல் கையேடுகள், கிராமசேவகர் அறிக்கைகள், சமுர்த்தி வங்கி அறிக்கைகள் மூலமும் தரவுகள் பெறப்பட்டுள்ளன. இங்கு பெறப்பட்டுள்ள தரவுகளினை அடிப்படையாகக் கொண்டு விபரணப் பகுப்பாய்வு மற்றும் பண்பு சார் பகுப்பாய்வினை பயன்படுத்தி புள்ளிவிபரப்பகுப்பாய்வு முறை மூலம் முடிவுகள் அட்டவணைகளாகவும் வரைபடங்களாகவும் பெறப்பட்டுள்ளன. ஆய்வுப் பிரதேசத்தில் மக்களுக்கு சமுர்த்தி நிகழச்சித்திட்டத்தினால் பல்வேறு உதவித்திட்டங்கள் கிடைக்கப்பெற்றாலும் அங்குள்ள மக்கள் பல்வேறு பிரச்சினைகளினை எதிர்நோக்குகின்றார்கள். அதாவது, சமுர்த்திக் கொடுப்பனவானது மக்களுக்கு காலதாமதமாக கொடுக்கப்படுகின்றது, குடும்ப அங்கத்தவர்கள் அதிகமாக உள்ளமையினால் கொடுப்பனவுகளின் அளவு போதாமையாக உள்ளமை, தொழில் முயற்சிகளினை மேற்கொள்ளுவதற்கு மூலப்பொருள் பற்றாக்குறையாகக் காணப்படுகின்றமை, சமுர்த்தி நிகழ்ச்சித் திட்டத்தினால் பெற்றுக்கொள்ளப்பட்ட கடன்களினை மக்கள் சரியான முறையில் மீளச்செலுத்த முடியாமை, மக்களுக்கு சமுர்த்தி நிகழ்ச்சித்திட்டம் பற்றி போதிய தெளிவூட்டல் இன்மை போன்ற பிரச்சினைகள் காணப்படுகின்றன. இவ்வாறு காணப்படும் பிரச்சினைகளினை தீர்த்துக் கொள்வதற்காக சமுர்த்திக் கொடுப்பனவினை மக்களுக்கு உரிய காலத்திலும் அதேநேரம் குடும்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்பவும் வழங்குதல், தொழில்வாய்ப்புகளுக்கான முலப் பொருட்களை மானியமாக அல்லது குறைந்த அளவிலான கடன்களுக்கு வழங்குதல், கடன்களினை மீளசெலுத்துவதற்கான கால அவகாசத்தினை அதிகரித்தல் சேமிப்பு பழக்கத்தை ஊக்குவித்தல் மற்றும் மக்களுக்கு சமுர்த்தி நிகழ்ச்சித்திட்டம் பற்றித் தெளிவூட்டுதல் ஆகிய தீர்வுகளும் பரிந்து ரைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன.

**திறவுச்சொற்கள்:** *கடன்கள்; கிராமசேவகர்பிரிவு; சமுர்த்தி நிகழ்ச்சித்திட்டம்; தொழில்வாய்ப்பு*

# Health and well- being

# சிறுவர் பாலியல் துஷ்பிரயோகத்தினால் பாதிக்கப்பட்டவர்களிடையே உளக் கோளாறுகளின் பரம்பலும் அதோனோடு இணைந்த சமூகக் குடித்தொகை மாறிகளும்

**சுபாஜினி.யோ., ராஜ்குமார்.அ.**
*மெய்யியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*

இவ்வாய்வானது சிறுவர் பாலியல் துஸ்பிரயோகத்தினால் பாதிக்கப்பட்டவர்களின் உளக்கோளாறுகளின் பரம்பலைக் கண்டறிவதையும் அதனோடு இணைந்த சமூகக்குடித்தொகை மாறிகளுக்கும் உளக்கோளாறுகளுக்குமான தொடர்பினைக் கண்டறிவதையும் நோக்கங்களாகக் கொண்டமைந்திருந்தது. இவ்வாய்வானது வவுனியா பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட ஈச்சங்குளம், சாஸ்திரிகூழாங்குளம், மறக்காறம்பளை ஆகிய கிராம சேவகப் பிரிவுகளை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. சிறுவர் பாலியல் துஸ்பிரயோகமானது பல்வேறுபட்ட உளவியல் தாக்கங்களை ஏற்படுத்துகின்றது. அந்த வகையில் குழப்பம், குற்றவுணர்வு, கோபம், பழிவாங்கும் உணர்ச்சி, குறைந்த கவனம், கவலையுணர்வு, வெட்க உணர்வு, பயம், மனஅழுத்தம், மனச்சோர்வு, பதகளிப்பு, குறைவான சுயமதிப்பீடு, பிறர் மீது நம்பிக்கையின்மை போன்ற உளதாக்கங்களுக்கு ஆட்பட்டு தமது வாழ்வில் நம்பிக்கையையும் மகிழ்ச்சியையும் இழக்கின்ற ஆரோக்கியமற்ற நிலை உருவாகின்றது. இவற்றின் அடிப்படையில் இவ்வாய்விற்காக கடந்த ஐந்து வருடத்திற்குள் சிறுவர் பாலியல் துஸ்பிரயோகத்திற்குட்பட்ட 14 – 18 வயதிற்குட்டபட்ட 61 பிள்ளைகள் (16 ஆண் மற்றும் 45 பெண் பிள்ளைகள்) நோக்கத்தின் அடிப்படையிலான மாதிரிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர். பாதிக்கப்பட்டவர்களிடமிருந்து தரவுகள் வினாக்கொத்து மற்றும் டாஸ் – 21 அளவுகோல் மூலமாக பெற்றுக்கொள்ளப்பட்டன. பாதிக்கப்பட்ட பிள்ளைகள், உள மருத்துவர், உளவளத் துணையாளர்கள், சட்ட ஆலோசகர்களிடமிருந்து நேர்காணல் மூலமாகவும் தரவுகள் பெற்றுக்கொள்ளப்பட்டன. இவ்வாறுபெறப்பட்ட தரவுகள் சமூக விஞ்ஞானத்துக்கான புள்ளிவிபரப் பகுப்பாய்வு மென்பொருளினூடாக (SPSS 22) விபரண பகுப்பாய்வு மற்றும் இணைவுப் பகுப்பாய்வு ஆகிய நுட்பங்களைப் பயன்படுத்தி அளவுசார் பகுப்பாய்வாகவும் மற்றும் நேர்காணல் மூலம் பெறப்பட்ட தகவல்கள் பண்புசார் பகுப்பாய்வாகவும் மேற்கொள்ளப்பட்டன. இப்பகுப்பாய்விலிருந்து பின்வரும் முடிவுகள் பெற்றுக் கொள்ளப்பட்டன. சிறுவர் பாலியல் துஸ்பிரயோகத்தினால் பாதிக்கப்பட்டவர்களில் மன அழுத்தமானது தீவிரமாக (55.8%) காணப்படுகின்றது. சிறுவர் பாலியல் துஸ்பிரயோகத்தினால் பாதிக்கப்பட்டவர்களில் மனச்சோர்வானது மிதமாகக் (55.7%) காணப்படுகின்றது. சிறுவர் பாலியல் துஸ்பிரயோகத்தினால் பாதிக்கப்பட்டவர்களில் பதகளிப்பானது மிதமாகக் (54.1%) காணப்படுகின்றது. சிறுவர் பாலியல் துஸ்பிரயோகத்திற்கு உட்பட்டவர்களின் மனஅழுத்த நிலைக்கும் கல்வி நிலைக்கும் இடையில் 0.01 பொருண்மை மட்டத்தில் நேர்கணியத் தொடர்பு காணப்படுகின்றது $(r = 0.752)$. சிறுவர் பாலியல் துஸ்பிரயோகத்திற்கு உட்பட்டவர்களின் மனச்சோர்வு நிலைக்கும் கல்வி நிலைக்கும் இடையில் 0.01 பொருண்மை மட்டத்தில் நேர்கணியத் தொடர்பு காணப்படுகின்றது $(r = 0.679)$. சிறுவர் பாலியல் துஸ்பிரயோகத்திற்கு உட்பட்டவர்களின் கல்வி நிலைக்கும் பதகளிப்பு நிலைக்கும் இடையில் 0.01 பொருண்மை மட்டத்தில் நேர்கணியத் தொடர்பு காணப்படுகின்றது $(r=0.543)$. சிறுவர் பாலியல் துஸ்பிரயோகத்தினால் பாதிக்கப்பட்டவர்களின் மன அழுத்ததிற்கும் வயதெல்லைக்கும் இடையில் 0.01 பொருண்மை மட்டத்தில் நேர்கணியத் தொடர்பு காணப்படுகின்றது $(r=0.601)$. சிறுவர் பாலியல் துஸ்பிரயோகத்திற்கு உட்பட்டவர்களின் மனச்சோர்வு நிலைக்கும் வயதெல்லைக்குமான இடையில் 0.01 பொருண்மை மட்டத்தில் நேர்கணியத் தொடர்பு காணப்படுகின்றது $(r=0.661)$ சிறுவர் பாலியல் துஸ்பிரயோகத்திற்கு உட்பட்டவர்களின் பதகளிப்பு நிலைக்கும் வயதெல்லைக்குமான இடையில் 0.01 பொருண்மை மட்டத்தில் நேர்கணியத் தொடர்பு காணப்படுகின்றது $(r=0.597)$. அத்துடன் நேர்காணல் பகுப்பாய்வின் அடிப்படையில் சில உண்மைகள் வெளிப்படுத்தப்பட்டன. பாலியல் துஸ்பிரயோகத்தினால் பாதிக்கப்பட்டவர்களிடையே கோபம், பயம், பாதுகாப்புணர்வின்மை, குழப்பம், அதிர்ச்சி, அவமானம், அருவருப்பு, குற்றவுணர்வு, பழிவாங்கும் உணர்வு போன்ற உணர்வுகளும் மனவெழுச்சிகளும் மேலோங்கிக் காணப்படுகின்றன. துஸ்பிரயோகம் செய்யப்படும் வடிவம், நபர், இடங்கள்,தொடர்ச்சி நிலை என்பவற்றைப் பொறுத்தே அவர்களின் உணர்வு நிலைகளின் தன்மையும் தீவிரமும் தங்கியுள்ளது. மேலும் இங்கு பாதிக்கப்பட்டவரின் குடும்பச் சூழல், வளர்ப்பு முறைகள் போன்றனவும் செல்வாக்குச் செலுத்துகின்றன ஆகிய முடிவுகள் பெற்றுக்கொள்ளப்பட்டன.

**திறவுச்சொற்கள்:** *சிறுவர் பாலியல் துஸ்பிரயோகம்; உளவியல் கோளாறுகள்; மன அழுத்தம்; மனச்சோர்வு; பதகளிப்பு*

# முன்கட்டிளமைப்பருவ மாணவர்களிடையே இணையத்தள சாகச விளையாட்டுக்களின் பரம்பலும், அதனுடன் இணைந்த உளவியல் ரீதியான தாக்கமும்

**சோபிகா.சி., மேனகா.சி.**
*மெய்யியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*

முன்கட்டிளமைப்பருவ மாணவர்களிடையே இணையத்தள சாகச விளையாட்டுக்களின் பரம்பலும் அதனுடன் இணைந்த உளவியல் ரீதியான தாக்கத்தையும் இனங்காணல் என்ற ஆய்வின் நோக்கத்திற்கமைய முன்கட்டிளமைப்பருவத்தினரில் இணையத்தள சாகச விளையாட்டுக்களின் பரம்பலையும், உளவியல் ரீதியான தாக்கத்தையும் ஆராய்வதாக இவ்வாய்வு அமைந்துள்ளது. அந்த அடிப்படையில் யாழ் கோட்ட 1C பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்டு தரம் 8-9 வரையான தரங்களில் கல்வி கற்கும் 582 மொத்த மாணவர்களிலிருந்து பகுப்பு எழுமாற்று மாதிரி அமைப்பில் (Satisfied Random Sample) 15% அடிப்படையில் 88 மாணவர்கள் ஆய்வு மாதிரிகளாக தெரிவு செய்யப்பட்டனர். இவ் ஆய்வில் றொசான்பேர்க்கின் சுயமதிப்பீட்டு அளவுகோல் மற்றும் சுய தயாரிப்பு வினாக்கொத்து போன்ற ஆய்வுக்கருவிகள் பயன்படுத்தப்பட்டு தரவுகள் சேகரிக்கப்பட்டன. சுய தயாரிப்பு வினாக்கொத்தானது மூன்று பகுதிகளைக் கொண்ட வினாக்கொத்தாக மொத்தமாக 44 வினாக்களைக் கொண்ட வினாப்பத்திரமாக காணப்படுகின்றது. இவ்வினாக்கள் மதிப்பிடக்கூடிய வகையிலும் புள்ளியிடக்கூடிய வகையிலும் அமைந்துள்ளதுடன் வினாக்கள் தெளிவானதாகவும், எளிமையானதாகவும், விளங்கக்கூடிய வகையிலும் கட்டமைக்கப்பட்டுள்ளன. கள ஆய்வின் போது பெற்றுக்கொள்ளப்பட்ட தரவுகள் மற்றும் தகவல்கள் பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டுள்ளன. வினாக்கொத்து மூலம் பெறப்பட்ட தரவுகள் அளவுசார் தரவுப்பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டுள்ளன. அந்த அடிப்படையில் இங்கு சமூக விஞ்ஞானத்திற்கான புள்ளிவிபரத்தொகுப்பு எனும் மென்பொருள் (SPSS) பயன்படுத்தப்பட்டு விபரணப்புள்ளிவிபரவியல் பகுப்பாய்வு மூலமாக ஆய்வு மாதிரிகளுக்கான விபரங்களும், அனுமானப்புள்ளிவிபரவியல் பகுப்பாய்வு மூலமாக கருதுகோள்களுக்கான தரவுகளும் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. விபரணப்புள்ளிவிபரவியல் பகுதியில் மீடிறன் (Frequency) மற்றும் க்றொஸ்ரப்ஸ் (Crosstabs) பகுப்பாய்வு முறைகள் ஆய்வு மாதிரி தொடர்பான விபரங்களை வரைபடங்கள் மூலமாகவும் அட்டவணைகள் மூலமாகவும் சதவீத அடிப்படையிலும், விபரண அடிப்படையிலும் விளக்குவதற்கு பயன்படுத்தப்பட்டுள்ளன. அத்துடன் கருதுகோள்களைப் பரிசீலிப்பதற்கு அனுமானப்பகுப்பாய்வு முறைகளான T-Test மற்றும் Regression போன்றன பயன்படுத்தப்பட்டு முன்கட்டிளமைப்பருவ மாணவர்களிடையே இணையத்தள சாகச விளையாட்டுக்களின் பரம்பலும் அதனுடன் இணைந்த உளவியல் ரீதியான தாக்கமும் கண்டறியப்பட்டுள்ளது. ஆய்வு மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட பெறுபேறுகளாவன, இணையத்தள சாகச விளையாட்டுக்களை விளையாடும் முன்கட்டிளமைப்பருவத்தினரில் பால்நிலை அடிப்படையில் பொருண்மைப்பெறுமதி (P)=0.024 ஆக அமைந்து வேறுபாடுகள் காணப்படுகின்றன. இணையத்தள சாகச விளையாட்டுக்களை விளையாடும் முன்கட்டிளமைப்பருவத்தினரில் சமய அடிப்படையில் பொருண்மைப்பெறுமதி (P)=0.021 ஆக அமைந்து வேறுபாடுகள் காணப்படுகின்றன. முன்கட்டிளமைப்பருவத்தினரில் அதிகளவானோர் (88%) திறன்பேசியை உபயோகித்து இணைய சாகச விளையாட்டுக்களை விளையாடுவோராக உள்ளனர். முன்கட்டிளமைப்பருவ மாணவர்களில் அதிகளவானோர் (40%) Free Fire சாகச விளையாட்டுக்களை விளையாடுவோராக உள்ளனர். முன்கட்டிளமைப்பருவத்தினரில் அதிகளவானோர் (60%) ஒரு மணிநேரத்துக்கு அதிகமாக இணையத்தள சாகச விளையாட்டுக்களை விளையாடுவோராக உள்ளனர் மற்றும் இணையத்தள சாகச விளையாட்டுக்களை விளையாடும் முன்கட்டிளமைப்பருவத்தினரில் உளவியல் ரீதியாக கவலையை அதிகளவானோர் (44%) வழமையாக அனுபவிப்பவர்களாக உள்ளனர். எதிலும் கவனம் செலுத்த முடியாமையை அதிகளவானோர் (43%) வழமையாக அனுபவிப்பர்களாக உள்ளனர். அதிக கோபத்தை அதிகளவானோர் (39%) வழமையாக அனுபவிப்பவர்களாக உள்ளனர். எதற்கும் உபயோகமற்றவன் என்ற எண்ணத்தை அதிகளவானோர் (51%) வழமையாக அனுபவிப்பவர்களாக உள்ளனர். எளிதில் எரிச்சல் அடைவதை அதிகளவானோர் (44%) வழமையாக அனுபவிப்பவர்களாக உள்ளனர். இந்த அடிப்படையில் இணைய சாகச விளையாட்டுக்களை விளையாடும் முன்கட்டிளமைப்பருவத்தினரில் சீர்படுத்தப்பட்ட $R^2$=0.08 ஆகவும் பொருண்மைப் பெறுமதி (P)=0.031 அமைந்து உளவியல் ரீதியான தாக்கத்தை அதிகளவானோரில் (66%) நடுநிலை மட்டத்தில் ஏற்படுத்துகின்றன, போன்ற முடிவுகள் பெற்றுக்கொள்ளப்பட்டன.

**திறவுச்சொற்கள்:** *இணையத்தள சாகச விளையாட்டு; முன்கட்டிளமைப்பருவத்தினர்; மாணவர்கள் உளவியல்*

# கோவிட்-19 நோயாளிகளைக் கையாளுகின்ற தாதியர்களின் பதகளிப்பின் பரம்பலும் அதனுடன் இணைந்த காரணிகளும் அவற்றைக் கையாளும் நுட்பங்களும்: கோப்பாய் கோவிட்-19 சிகிச்சை நிலையத்தினை அடிப்படையாகக் கொண்டது

**மகிதாசி.ச., மேனகா.சி.**

*மெய்யியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*

இவ் ஆய்வானது கோவிட்-19 நோயாளிகளைக் கையாளுகின்ற தாதியர்களின் பதகளிப்பின் அளவுகளினை அளவீடு செய்வதனையும், அதனுடன் இணைந்த காரணிகளினை அடையாளம் காண்பதனையும், பதகளிப்பினை கையாள தாதியர்கள் பயன்படுத்தும் நுட்பங்களினைக் கண்டறிவதனையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. இதற்காக கோப்பாய் கல்வியியல் கல்லூரியில் இயங்கும் கோவிட்-19 சிகிச்சை நிலையமானது ஆய்வுப் பிரதேசமாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது. இங்கு ஆய்வுக்காக யாழ் போதனா வைத்தியசாலையிலிருந்து கோப்பாய் கோவிட்-19 சிகிச்சை நிலையத்திற்கு நோயாளிகளை கையாளச் சென்ற 85 தாதியர்கள் (30 ஆண் மற்றும் 55 பெண் தாதியர்கள்) எளிய எழுமாற்று நுட்பத்தின் மூலம் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். ஒக்டோபர் 2020 முதல் ஏப்ரல் 2020 வரை இவ் ஆய்வுக்கான தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன. இது அளவு சார் விபரண ஆய்வாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இங்கு தாதியரது பதகளிப்பின் பரம்பலை மதிப்பிடுவதற்காக Zung's Anxiety Self-Assessment Scale பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ் அளவுகோலானது 20 வினாக்களைக் கொண்டதாகும். வினாக்கள் ஒருவருடைய அறிவாற்றல், தன்னாட்சி, இயக்கத் திறன் மற்றும் மத்திய நரம்பு மண்டல அறிகுறிகளினை அடிப்படையாகக் கொண்டு பதகளிப்பின் அளவுகள் அளவீடு செய்யப்பட்டுள்ளன. மேலும் தாதியரது பதகளிப்பில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளினை இனங்காண ஆய்வாளனால் சுயமாகத் தயாரிக்கப்பட்ட வினாக்கொத்து முறையானது பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ் வினாக்கொத்தானது 20 கூற்றுக்களினைக் கொண்டுள்ளது. இக் கூற்றுக்களுடன் மாதிரிகள் எந்த அளவிற்கு பொருந்துகிறார்கள் என இனங்காண புள்ளித்திட்டங்கள் நான்கு வழங்கப்பட்டு பகுப்பாய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளன. பெறப்பட்ட தரவுகள் சமூக விஞ்ஞான புள்ளிவிபரவியல் பகுப்பாய்வின் (SPSS-21) இன் விபரணப்புள்ளிவிபரவியல் ஊடாகவும், இடைத்தொடர்புப் பகுப்பாய்வு (Pearson Correlation) நுட்பத்தினூடும் பகுப்பாய்விற்குட்படுத்தப்பட்டுள்ளது. இவ் ஆய்வின் முடிவுகளினை நோக்கின் கோவிட்-19 நோயாளிகளினைக் கையாளுகின்ற தாதியர்களின் பதகளிப்பானது 23 தாதியர்களிடம் சாதாரண அளவிலும், 59 தாதியர்களிடம் நடுத்தர அளவிலும், 03 தாதியர்களிடம் தீவிர அளவிலும் காணப்படுகின்றன. இதன்படி நோக்கும் போது தாதியர்களில் பெரும்பாலானர்வர்கள் நடுத்தர அளவிலான பதகளிப்பிற்கே ஆட்பட்டுள்ளனர். தாதியரது பதகளிப்பிற்கும் அவர்களது பால்நிலை. திருமணநிலை, வேலை அனுபவம், உடலியல், உளவியல் மற்றும் பொருளாதாரக் காரணிகளுக்கிடையில் குறிப்பிடத்தக்களவு தொடர்புள்ளது. பதகளிப்பினைத் தூண்டுவதில் உடலியல், உளவியல் மற்றும் பொருளாதாரக் காரணிகள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. 90% மான தாதியர்கள் கோவிட்19 தொடர்பான போதுமானளவு விழிப்புணர்வினைக் கொண்டுள்ளனர். 75% மான தாதியர்கள் பொருத்தமான ஓய்வைப் பெற்று பதகளிப்பினை கையாள்கின்றனர். 40% மானவர்கள் பதகளிப்பினை கையாள சமூக ஆதரவினைக் கொண்டுள்ளனர். 90% மான தாதியர்கள் பதகளிப்பினை கையாள சிறந்த உணவுப்பழக்க வழக்கங்களினைக் கொண்டுள்ளனர். 30% தாதியர்கள் கோவிட்19 காலத்தில் பதகளிப்பினைக் கையாள போதுமான வளங்களினைக் கொண்டுள்ளனர். இதனடிப்படையில் கோவிட்-19 நோயாளிகளினைக் கையாளுகின்ற தாதியர்கள் தமது பதகளிப்பினைக் கையாள ஆரோக்கியமான முறைகளினைக் கொண்டுள்ளனர் என இனங்காணப்பட்டுள்ளது. இவ் ஆய்வானது குறுகிய காலத்தில் அளவு சார் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளமையினால் எதிர்காலத்தில் ஆய்வுக்கான காலத்தினை அதிகரித்து அளவு மற்றும் பண்புசார் அடிப்படையில் மேற்கொள்ளுகின்ற போது மேலும் சிறந்த முடிவுகளினைப் பொற்றுக்கொள்ள முடியும்.

**திறவுச்சொற்கள்:** *பதகளிப்பு*; *கோவிட்-19*; *காரணிகள்*; *கையாளும் நுட்பங்கள்*; *தாதியர்கள்*; *பரம்பல்*

# மெய்நிகர் கற்றலின் பிரச்சினைகளும் யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட முதலாம் மாணவர்களின் கற்றல்சார் மனஅழுத்தமும்

**சுகன்யா.கோ., கஜவிந்தன்.க.**

*மெய்யியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*

இவ் ஆய்வானது மெய்நிகர் கற்றல்கள் யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட மாணவர்களின் கற்றல்சார் மனஅழுத்தம் உள்ளதா என்பதையும் அதனை ஏற்படுத்தும் காரணிகளை கண்டறிவதாகும். இவ் ஆய்விற்காக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீட முதலாம் வருடத்தைச் சேரந்த 118 மாதிரிகள் 59 ஆண்களும் 59 பெண்களும் எளிய எழுமாற்று மாதிரி மூலம் தெரிவுசெய்யப்பட்டனர். இவ் ஆய்வானது கோவிட்கால கற்றல்சார் மனஅழுத்த வினாக்கொத்து முறையிலும்,இணையவழி கலந்துரையாடல் மூலம் தரவுகள் பெறப்பட்டு அளவு மற்றும் பண்புசார் அடிப்படையில் SPSS-21 இல் Mean, t-test போன்றவற்றின் அடிப்படையில் பகுத்தாரயப்பட்ட விபரண ஆய்வாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ் ஆய்வானது 2020 October 2021 April வரையிலான கால வரையறையைக் கொண்டமைந்துள்ளது. ஆய்வு மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட பெறுபேறுகளானவை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு மெய்நிகர் கற்றல்களால் கற்றல்சார் மனஅழுத்தம் ஏற்படுகின்றது என்பதைக் காட்டுகின்றது. குறிப்பாக பெண் மாணவிகளைகள் 40% வீதமும் ஆண் மாணவர்கள் 60% வீதமும் உயர்ந்தளவிலான மனஅழுத்தத்தைப் பதிவுசெய்துள்ளனர், இதன் மூலம் மெய்நிகர் கற்றல்களால் ஏற்படும் கற்றல்சார் மனஅழுத்தத்தில் பால்நிலை வேறுபாடானது காணப்படுகின்றது. மெய்நிகர் கற்றலை முன்னெடுப்பதில் பொருளாதாரக் காரணிகள் 72% செல்வாக்குச் செலுத்துவதைப் போலவே தொழில்நுட்பக் காரணிகளும் 42 % செல்வாக்குச் செலுத்துவதை ஆய்வின் முடிவுகள் எடுத்துக் காட்டுகின்றன. மற்றும் மெய்நிகர் கற்றல்களினால் மாணவர்களிடையே ஏற்படும் கற்றல்சார் மனஅழுத்தத்தில் இட அடிப்படையிலான வேறுபாடு காணப்படுகின்றன. இந்த வகையில் நகர்ப்புறமாணவர்களை காட்டிலும் கிராமப்புற மாணவர்களே அதிகளவு கற்றல் சார் மனஅழுத்தத்தை க் கொண்டுள்ளதாக முடிவுகள் காட்டுகின்றன.

**திறவுச்சொற்கள்:** *மெய்நிகர் கற்றல்; கற்றல்சார் மனஅழுத்தம்; பல்கலைக்கழக மாணவர்கள்*

# கோவிட்- 19 பெருந்தொற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீட இறுதி வருட மாணவர்களின் பதகளிப்பும்

**யசோதா.ரா., கஜவிந்தன்.க.**
*மெய்யியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*

மனிதர்கள் வாழும் இவ்வுலகானது ஒவ்வொரு காலகட்டங்களிலும் பல்வகைப்பட்ட அச்சுறுத்தல்களை எதிர்கொண்டுள்ளது. அந்தவகையில் 2019ம் ஆண்டின் இறுதிப்பகுதியில் சீனாவில் கண்டறியப்பட்ட கோவிட் -19 வைரசானது உலகம் முழுவதையும் உடல், உள, சமூக ரீதியாக பாதித்த ஒரு நோய்ப் பெருந்தொற்றாக காணப்படுகின்றது. உலக சுகாதார ஸ்தாபனம் இதனைப் பெருந்தொற்று நோயாக அறிவித்துள்ளது. இலட்சக்கணக்கான மக்கள் இதனால் பாதிக்கப்பட்டு உயிரிழந்துள்ளனர். புறுக்ஸ் (Brooks) மற்றும் அவரது சகபாடிகளுடைய கருத்தின்படி கோவிட்- 19 வைரசில் இருந்து பாதுகாப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளான தனிமைப்படுத்தல், முகக்கவசம் அணிதல், கைகளை அடிக்கடி கழுவுதல் என்பன பயம், சலிப்புத்தன்மை, விரக்தி, கோபம், போன்ற உளவியல் ரீதியான பாதிப்புக்களை மக்கள் மத்தியில் ஏற்படுத்துவதாக குறிப்பிட்டுள்ளனர். இவ்வாறான உளவியல் தாக்கங்களில் பதகளிப்பும் முதன்மைப்படுத்தப்படுகின்றது. பதகளிப்பு என்பது பதட்ட உணர்வு, கவலைமிக்க எண்ணங்கள் மற்றும் அதிக இரத்த அழுத்தம் போன்ற உடலியல் மாற்றங்களால் வகைப்படுத்தப்படும் ஓர் உணர்வு நிலையாகும். இவற்றினை அடிப்படையாக கொண்டு இவ்வாய்வானது கோவிட்-19 காரணமாக யாழ்ப்பாண பல்கலைக்கழக கலைப்பீட இறுதி வருட மாணவர்கள் எதிர்கொள்ளும், பதகளிப்பினை ஆராய்வதனை நோக்காகக் கொண்டுள்ளது. இவ்வாய்வானது புள்ளிவிபரவியல் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், ஆய்வுக்கான மாதிரிகள் ஆண், பெண் என்ற பால்நிலை அடிப்படையில் முறையே 40:60 என்ற அடிப்படையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீட மாணவர்களில் இருந்து எழுமாற்றாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர். வில்லியம் W.K (William W.K Zung) என்பவரால் வடிவமைக்கப்பட்ட Zung Self rating anxiety scale இனை பிரதான ஆய்வுக் கருவியாகவும், நேர்காணல்முறை, அவதானமுறை என்பவறின் மூலமும் இவ்வாய்வுக்கான தரவுகள் திரட்டப்பட்டு விபரண புள்ளிவிபரவியல் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டு t-test, Mean, என்பவற்றினை வெளி கொண்டுவரும் வகையில் ஆய்வு முடிவுகள் பெறப்பட்டன. இதன்படி மாதிரிகளில் 27 வீதமானவர்கள் சாதாரண பதகளிப்பு நிலைமையினையும், 18 வீதமானவர்கள் குறைந்தளவு பதகளிப்பு நிலைமையினையும், 31 வீதமானவர்கள், மிக அதிகளவு பதகளிப்பு நிலைமையினையும் எதிர்கொண்டமை கண்டறியப்பட்டது. மேலும் யாழ் மாவட்டத்தினை சேர்ந்தவர்களை விட வெளிமாவட்டங்களை சேர்ந்த மாணவர்கள் அதிகளவு பதகளிப்பு நிலைமையினை எதிர்கொண்டமையும் ஆய்வின் முடிவாகப் பெறப்பட்டது. ஆண், பெண் ஒப்பீட்டு அளவில் 31 வீதமான பெண் மாணவர்கள் மிக அதிகமான பதகளிப்பு நிலைக்கு முகம் கொடுக்கின்றனர். இது ஆண்களுடன் ஒப்பிடும்போது மிக அதிகமாக காணப்படுகின்றது. மேலும் அளவு மற்றும் பண்பியல்சார் பகுப்பாய்வு அடிப்படையில் பதகளிப்பானது மாணவர்களுடைய கற்றல்சார் செயற்பாடுகளில், அதிகளவு தாக்கத்தினைச் செலுத்தியுள்ளமையும் ஆய்வின் முடிவாகப் பெறப்பட்டது.

**திறவுச்சொற்கள்:** *கோவிட் - 19; பதகளிப்பு; பல்கலைக்கழக மாணவர்கள்*

# யோகாவில் ஈடுபடும் மற்றும் ஈடுபடாத மாணவர்களின் உளநன்னிலை: யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கலைப்பீடத்தில் 2020ம் ஆண்டு கல்விபயிலும் மாணவர்களை அடிப்படையாகக் கொண்டது

**ஸ்ரீரங்கநாயகி.வ., மேனகா.சி.**

*மெய்யியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*

இந்த ஆய்வானது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கலைப்பீடத்தில் யோகாவில் ஈடுபடும் மற்றும் ஈடுபடாத மாணவர்களின் உளநன்னிலை பற்றி அளவீடு செய்வதனை நோக்கமாகக் கொண்டுள்ளது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கலைப்பீடத்தில் 2020ம் ஆண்டில் கல்வி கற்கும் 2100 மாணவர்களில் ஒவ்வொரு வருடத்திலிருந்தும் 10% அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டனர். இவர்களில் யோகாவில் பங்கு பற்றும் மற்றும் பங்கு பற்றாத மாணவர்கள் என மொத்தமாக 208 மாதிரிகள் பகுக்கப்பட்டு எழுமாற்று நுட்பத்தின் மூலம் செய்யப்பட்டுள்ளனர். இதனுள் யோகாவில் ஈடுபடுகின்ற மாணவர்கள் 104 பேரும் யோகாவில் ஈடுபடாத மாணவர்கள் 104 பேரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவ் ஆய்வுக்கான கருவியாக உளநன்னிலையினை அளவிடும் அளவு கோல் மற்றும் ஆய்வாளனால் சுயமாகத் தயாரிக்கப்பட்ட வினாக்கொத்து ஆகியன பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ் அளவு கோலானது 05 பகுதிகளை கொண்டதாகக் காணப்படுகின்றது. அது உடல், உள. சமூக மற்றும் ஆன்மீக, அறிவுசார் விடயங்களை உள்ளடக்கியதாகும். இப் பகுதிகள் ஒவ்வொன்றும் தலா பத்து வினாக்களை அடிப்படையாகக் கொண்டு மொத்தம் 50 வினாக்களைக் கொண்ட நேர்நிலை, எதிர்நிலை வினாக்களாக அமையப் பெற்றுள்ளன. பெற்றுக்கொள்ளப்பட்ட தரவுகள் சமூக விஞ்ஞானத்திற்கான புள்ளி விபரத்தொகுப்பு மென்பொருள் (SPSS 21) பயன்படுத்தி விபரணப்புள்ளி விபரவியல் மற்றும் அனுமானப்புள்ளி விபரவியல் மூலமும் பகுப்பாய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளன. ஆய்வு மூலமாக பெற்றுக் கொள்ளப்பட்ட பெறுபேறுகளாவன யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கலைப்பீடத்தில் யோகாவில் ஈடுபடுவோரின் உடல் நலம் தொடர்பான நன்னிலை சராசரி 3.90, ஆகவும் யோகாவில் ஈடு படாதோரின் உளநலம் தொடர்பான நன்னிலை சராசரி 2.78, ஆகவும் காணப்படுவதால் யோகா வில் ஈடுபடவோரது உடல் நலத்திற்கும் யோகாவில் ஈடுபடாதோரின் உடல் நலத்திற்கும் இடையில் வேறுபாடு காணப்படுகின்றது. யோகாவில் ஈடுபடுவோரின் ஆன்மீகம் சார் உளநன்னிலை சராசரி 1.5 ஆகவும், யோகாவில் ஈடுபடாதோரின் ஆன்மிகம் சார் உளநன்னிலையின் சராசரியானது 3.5 ஆகவும் காணப்படுவதால் யோகாவில் ஈடுபடவோரது ஆன்மீக உளநன்னிலைக்கும் யோகாவில் ஈடுபடாதோரின் ஆன்மிகம் சார்ந்த உளநன்னிலைக்கும் இடையில் வேறுபாடு காணப்படுகின்றது. யோகாவில் ஈடுபடுவோரின் அறிவுசார்ந்த உளநன்னிலையானது சராசரி 1.5 ஆகவும், யோகாவில் ஈடுபடாதோரின் அறிவுசார் உளநன்னிலையின் சராசரியானது 3.5 ஆகவும் காணப்படுவதால் யோகாவில் ஈடுபடுவோரது அறிவுசார் உளநன்னிலைக்கும் யோகாவில் ஈடுபடாதோரின் அறிவு சார் உளநன்னிலைக்கும் இடையில் வேறுபாடு காணப்படுகின்றது. யோகாவில் ஈடுபடுவோரின் மனவெழுச்சி சார்ந்த உளநன்னிலை சராசரி 3.93 ஆகவும் யோகாவில் ஈடுபடாதோரின் மன வெழுச்சி சார்ந்த உளநன்னிலை சராசரி 3.00 ஆகவும் காணப்படுவதால் யோகாவில் ஈடுபடு வோரது மனவெழுச்சி சார்ந்த நன்னிலைக்கும் யோகாவில் ஈடுபடாதோரின் மனவெழுச்சி சார்ந்த நன்னிலைக்கும் இடையில் வேறுபாடு காணப்படுகின்றது. யோகாவில் ஈடுபடுவோரின் சமூகநலன் சார்ந்த உளநன்னிலை சராசரி 4.00 ஆகவும் யோகாவில் ஈடுபடாதோரின் சமூக நலன் சார்ந்த உளநன்னிலையின் சராசரி 2.80 ஆகவும் காணப்படுவதால் யோகாவில் ஈடுபடவோரது சமூக நலன் சார்ந்த நன்னிலைக்கும் யோகாவில் ஈடுபடாதோரின் சமூகநலன் சார்ந்த நன்னிலைக்கும் இடையில் வேறுபாடு காணப்படுகின்றது. யோகாவில் ஈடுபடுவோரின் உளநன்னிலையானது சராசரி 3.7981, ஆகவும் யோகாவில் ஈடுபடாதோரின் உளநன்னிலையானது சராசரி 3.0000 ஆகவும் காணப்படுவதால் யோகாவில் ஈடுபடுவோரது உளநன்னிலைக்கும் யோகாவில் ஈடுபடாதோரின் உளநன்னிலைக்கும் இடையே வேறுபாடு காணப்படுகின்றது. எனவே யோகாவில் ஈடுபாடு கொண்ட மாணவர்களே சிறந்த ஆரோக்கியம் சார்ந்த உளநன்னிலையுடன் தொடர்படையோராகக் காணப்படுகின்றனர். யோகாவில் ஈடுபடுவோரில் ஆண்களை விடப் பெண்களே அதிகமானோராகக் காணப்படுகின்றனர். அத்துடன் அனைத்து மதம் சார்ந்த மாணவர்களும் கல்வி கற்ற போதிலும் இந்து மதத்தினைச் சேர்ந்த மாணவர்கள் மட்டுமே யோகாவில் ஈடுபடுகின்றனர் என்பதுவும் கண்டறியப்பட்டுள்ளது.

**திறவுச்சொற்கள் :** *உளநன்னிலை; யோகா; பல்கலைக்கழகமாணவர்கள்*

# Preventive Practices Related to Covid – 19 among Youth: A Medical Sociological Study Based on the Vadamaradchy North Divisional Secretariat in Jaffna District

**Kalaivani. R, Sivakanthan. S**
*Department of Sociology, University of Jaffna, Sri Lanka*

The Covid - 19 Pandemic has become a serious public health and social issue. The prime objective of this study is to assess the preventive practices associated with Covid - 19 among the youth in the Vadamaradchy North Divisional Secretariat, and examine the association between those preventive practices and socio-demographic factors. A mixed method is used in this study. Based on stratified random sampling technique, 427 youth were selected for this study. Primary data was collected via questionnaires, case studies and interviews. Quantitative data was used for descriptive statistical analysis with the help of the SPSS software. Qualitative data was analyzed thematically. Research ethics were strictly adhered to throughout the research process. Results reveal that 82.3% of the youth wore facemasks when they went out, while 31.4% of the youth did not wear facemasks regularly due to discomfort. Qualitative data highlights that major problems related to wearing a facemask were discomfort in wearing facemasks, negligence and fear of facing penalties for the violation of quarantine regulations. Results also indicate that 91.8% of the youth under consideration strictly followed the precautionary measures. According to the data gathered during the research, 59.4% of the youth used Complementary and Alternative Medicine as part of their preventive practices. Results also reveal that 60% of the youth avoided going to overcrowded places during the Covid - 19 pandemic, while 51.8% of the youth maintained social distance. Before the Covid - 19 pandemic, only 67.7% of the youth had the habit of washing their hands properly when they returned home from outside. However, following the outbreak of the pandemic, 98.1% of the youth practiced frequent hard-washing with soap or sanitizer. There are some gender-based variations in some activities such as wearing facemasks ($p < 0.001$), taking precautionary measures ($p = 0.035$) and maintaining social distance ($p = 0.005$). The results of the research study conclude that majority of the youth have adopted good preventive practices during the period of this study to protect themselves from the disease.

**Keywords:** *Facemask; Gender; Personal hygiene; Precautionary measures; Social distance*

# Health-Seeking Behavior of Elderly People: A Medical Sociological Study based on the Thenmaradchi Divisional Secretariat in Jaffna District

**Sarththiga. G, Sivakanthan. S**
*Department of Sociology, University of Jaffna, Sri Lanka*

Elderly people are a key risk group faced with health care issues. The prime objective of this study is to assess the association between the health-seeking behavior-related socio-demographic factors and the factors that influence the health-seeking behavior of the elderly people in the Thenmaradchi Divisional Secretariat division. A mixed method was employed in this community-based study. Primary data sources include questionnaire surveys, key informant interviews and case study methods. Based on stratified random sampling, 427 elderly people were selected for this study. The quantitative data gathered is analyzed using descriptive statistical methods with SPSS version 21. Qualitative data is analyzed thematically. The age range for the elderly is 60-98 years, with an average of 71.14 and a standard deviation of 7.462. The vast majority of the elderly people (94.4%) received medical treatment for their illnesses. Most elderly people (97.7%) seek medical treatment from government hospitals. Socio-demographic factors, particularly sex ($p=0.047$) and education ($p<0.000$) have a statistically significant association between doctor-patient relationships at government hospitals. Moreover, the total monthly income of the family has a strong association with the life satisfaction ($p=0.006$) of the elderly people. A considerable number of the elderly people (69.1%) suffer from chronic diseases and the majority of them (96.72%) do not receive medical treatment. Research findings reveal that 45.4% of the elderly people are neither satisfied nor dissatisfied with their quality of life. The majority of the elderly people (89.9%) feel they are full of energy. A considerable percentage of the elderly people (82.4%) are happy most of the time. Most of the elderly people (79.4%) use coping mechanisms to manage health issues. This research concludes that elderly people face significant healthcare-related problems. This study recommends that more inclusive healthcare and geriatric medical services should be provided to elderly people in Thenmaradchi.

**Keywords:** *Accessibility; Chronic diseases; Education; Gender; Social support*

# Discriminatory Practices against Persons with Disabilities: A Sociological Study Based on the Vadamaratchi South-West Divisional Secretariat in Jaffna District

**Parththeepa. E, Sivakanthan. S**
*Department of Sociology, University of Jaffna, Sri Lanka*

Discrimination against persons with disabilities (PWDs) is an alarming social issue in contemporary society. Discrimination against PWDs produce serious disadvantages to the wellbeing of PWDs. The main objective of this study is to assess discrimination against PWDs in the Vadamaratchi South West Divisional Secretariat in Jaffna District. A mixed method is used for this community-based study. Based on a stratified random sampling plan, 310 PWDs were selected for the study. Primary data sources include the interviewer-administered questionnaire, key informant interviews and case study methods Qualitative data is analyzed thematically. Quantitative data gathered through a questionnaire method is analyzed using descriptive statistical methods with SPSS version 22 and the chi square test is also performed to describe the association between discrimination and socio-demographic factors associated with discrimination against PWDs. The results reveal that the majority (56.1%) of the PWDs in the target region are men. Physical disability is the major type of disability (39.7%) prevalent among these PWDs. 57.7% of the PWDs are married and 59.4% have secondary education qualifications. 44.5% of the PWDs are self-employed. Results indicate that 22.6% of the PWDs are discriminated by their own families and 57.1% are discriminated by their relatives. While, 60.3% of these PWDs are discriminated against by the neighbors, 60.3% of the PWDs are discriminated by the community. Results also show that 60.6% of the PWDs are discriminated in community participation and 62.3% of the PWDs are discriminated in employment opportunities. A majority (65.2%) of the PWDs are discriminated in using public transportation and 57.1% of the PWDs are discriminated in receiving welfare assistance from government institutions. Age shows a significant association (p=001) with the PWDs who are discriminated by relatives and age also shows a close relationship (p=003) with the PWDs being discriminated by neighbors. Results reveal that 36.1% of the PWDs adopt coping mechanisms to deal with discrimination. Qualitative data highlight that prejudice and enacted stigma are the major factors contributing to discrimination against the PWDs in this region. Further, this study recommends that more inclusive social and economic welfare programs should be introduced to enhance the quality of life and wellbeing of PWDs and the study suggests that awareness raising programs should be introduced at family and community levels to reduce discrimination among PWDs.

**Keywords:** *Accessibilities; Job; Rights; Stigma; Vulnerabilities*

## Panel of Reviewers

| | |
|---|---|
| Snr. Prof. M. Ragunathan | Dept. of Tamil |
| Prof. (Mrs.) S. Ramesh | Dept. of Linguistics & English |
| Prof. K. Arunthavarajah | Dept. of History |
| Prof. K. T. Ganeshalingam | Dept. of Political Science |
| Prof. K. Suthakar | Dept. of Geography |
| Rtd. Prof. S. K.Krishnarajah | University of Jaffna |
| Rtd. Professor Sivananthamoorthy | University of Jaffna |
| Dr. (Mrs.) J. Rasanayagam | Dept. of Education |
| Dr. (Miss.) L. D. Rajasooriyar | Dept. of Geography |
| Dr. A. Antonyrajan | Dept. of Geography |
| Dr. (Mrs.) V. Pavanesan | Dept. of Hindu Civilizations |
| Dr. K. Shriganeshan | Dept. of E.L.T. |
| Dr. T. Sanathanan | Dept. of Fine Arts |
| Dr. K. Shanmuganathan | Dept. of E.L.T. |
| Dr. S. K. Kannathas | Dept. of E.L.T. |
| Rev. Dr. J. C. Paul Rohan | Dept. of Christian Civilization |
| Dr. K. Kajavinthan | Dept. of Philosophy |
| Dr. (Mrs.) S. Uthayarasa | Dept. of Geography |
| Dr. S. Jeevasuthan | Dept. of Sociology |
| Dr. S. Srikanthan | Dept. of Sociology |
| Dr. A. A. Kadirgamar | Dept. of Sociology |
| Dr. N. Pushparajah | Dept. of Political Science |
| Dr. (Mrs.) K. Karunanithy | Dept. of Economics |
| Dr. I. Jeyandran | Dept. of Hindu Civilizations |
| Mrs. V. Ravishankar | Dept. of Economics |
| Mr. V. Paranthaman | Dept. of E.L.T |
| Mr. E. Cumaran | Dept. of Tamil |
| Mrs. N. Selva Ambikai | Dept. of Tamil |
| Mr. R. Rajeshkannan | Dept. of Sociology |
| Ms. N. Kavitha | Dept. of Linguistics & English |
| Mrs. A. Rajkumar | Dept. of Philosophy |
| Mr. S. Thiruchchenthuran | Dept. of Political Science |
| Mr. S. Ramanarajah | Dept. of Hindu Civilizations |
| Mr. S. Kabilan | Dept. of Geography |
| Mr. S. Sivakanthan | Dept. of Sociology |
| Mrs. Menaka Sivakaran | Dept. of Philosophy |
| Mrs. Kosalai Mathan | Dept. of Law |
| Mrs. Thushani Shayanthan | Dept. of Law |
| Mrs. Poongulaly Srisangeerththanan | Dept. of Media Studies |
| Mr. S. Dinesh Koduthar | Dept. of Media Studies |

| | |
|---|---|
| Mr. T. Selvamanoharan | Dept. of Hindu Civilizations |
| Rev. Fr. M. V. E. Ravichandran | Dept. of Christian Civilization |
| Rev. Fr. Rajendran Stalin | Dept. of Christian Civilization |
| Mrs. S. Senthuran | Dept. of Linguistics & English |
| Mr. S. Sunthareswaran | Dept. of Translation Studies |
| Ms. Nirogini Thambaiya | Dept. of Law |
| Mr. Sivanesan Pradinath | Dept. of Law |
| Ms. Anutharsi Gabilan | Dept. of Media Studies |
| Mr. N. Baskaran | Dept. of Sociology |
| Ms. R. Thavachchelvi | Dept. of Fine Arts |
| Mrs. K. Stephan | Dept. of Art History |

**Action committee appointed by the Dean/Faculty of Arts**

| | |
|---|---|
| Mr. S. Jude Dinesh Koduthor | Dept. of Media Studies |
| Ms. S. Poongulaly | Dept. of Media Studies |
| Mr. S. Nirosan | Dept. of Philosophy |
| Ms. Riophilla Alfred | Dept. of E.L.T. |
| Mr. T. Thileepan | Dept. of Philosophy |
| Mr. S. Ravi | Dept. of Geography |
| Mr. T. Ajanthakumar | Dept. of Tamil |
| Mr. R. Thanushan | Dept. of Geography |
| Mrs. S. Sajitharan | Dept. of History |
| Mrs. S. Karthekeyan | Dept. of Linguistics & English |
| Mrs. J. Gugathasan | Dept. of Political Science |
| Mrs. C. Thamari Inparaj | Dept. of E.L.T. |
| Mrs. M. Sivakumaran | Dept. of Translation Studies |
| Mrs. K. Stephan | Dept. of Art History |